கல்வி

# சீர்திருத்தத்துக்காய ஆலோசனைக

பெ

பல்கலைக்கழக

மூன்றும் நிலை (தொழில்முறை, தொழினுணுக்கம், உயர்தொ

U. K. Tharmalingam
Principal
Cheddikulam M.V.
Cheddikulam

# கல்விச் சீர்திருத்தத்துக்காய ஆலோசனைகள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
57R/C

பொது
பல்கலைக்கழகம்
மூன்றாம் நிலை (தொழில்முறை, தொழினுணுக்கம், உயர்தொழில்)

கல்வி அமைச்சு
உயர் கல்வி அமைச்சினதும்
இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சினதும்
உடனுழைப்புடன் தயாரித்தது
1981

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# உள்ளுறை

பக்கங்கள்

முன்னுரை .......... i..vi

நடைமுறையிலுள்ள கல்வி முறைமை/பயிற்சி (வரைபடம்) .......... viii

உத்தேசக் கல்வி முறைமை / பயிற்சி (வரைபடம்) .......... ix

பொதுக் கல்வி .......... 1. – 9

மாற்றங்களின் முக்கிய நோக்கங்கள் (பந்தி 1)

புதிய கட்டமைப்பு (பந்தி 2 – 5)

ஆரம்பப் பாடசாலை (தரங்கள் 1–5) (பந்தி 6–8)

வாசிப்பு நூல்கள் (பந்தி 9–10)

ஆரம்ப மட்டத்திற் கணிப்பீடு (பந்தி 11)

கனிட்ட இடைநிலைப் பாடசாலை (தரங்கள் 6–8) (பந்தி 12–13)

வாழ்க்கைத் தொழிற்றிறன்கள் (பந்தி 14)

கனிட்ட இடைநிலை மட்டத்திற் கணிப்பீடு (பந்தி 15)

தொடர்ச்சியான மதிப்பீடு (பந்தி 16–17)

மதிப்பீட்டுத் துறைகள் (பந்தி 18)

மதிப்பீட்டுடன் தரத்தையும் நம்பக உறுதியையும் பேணற்கியன்ற காப்பீடுகள் (பந்தி 19 – 21)

8 ஆம் தரப் பரீட்சை (பந்தி 22–24)

சிரேட்ட இடைநிலைப் பாடசாலை (தரங்கள் 9 – 11) (பந்தி 25 – 26)

தொழினுணுக்கப் பாடங்கள் (பந்தி 27)

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (பந்தி 28)

பரீட்சைத் திட்டம் (பந்தி 29)

மாணவர் பெறுபேற்றுப் புடைக்காட்சி (பந்தி 30–31)

ஆங்கிலம் கற்பித்தல் (பந்தி 32)

சமயக் கல்வி (பந்தி 33)

பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் (பந்தி 34–38)

இணை–பாடவிதான நடவடிக்கைகள் (பந்தி 39–48)

'வேலை உலகுக்கு' நிலை மாறுதல் (பந்தி 49–50)

பாடசாலைகளின் அமைப்பு முறையும் நிருவாகமும் .......... 9 – 14

பாடசாலைக் கொத்தணிகள் (பந்தி 54–57)

மூலாதாரப் பாடசாலை (பந்தி 58–62)

கொத்தணி அடிப்படையில் விசேட செயற்பாடுகள் (பந்தி 63)

பாடசாலைக் கொத்தணிச் சபை (பந்தி 64)

முன்னோடிக் கட்டம் (பந்தி 65)

புறம்பான ஏற்பாடுகள் (ஒற்றைநிலைப் பாடசாலைகள்) (பந்தி 66–68)

சேய்மைப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் (பந்தி 69 – 71)

தனியார் பாடசாலைகள் (பந்தி 72–77)

பாடசாலை முன்னிலைக் கல்வி (பந்தி 78–80)

கல்லூரிசார் மட்டம் (தரங்கள்: 12–13) .......... 14–16

பொது – மேற்கல்வியின் கூறு (பந்தி 81)

கல்லூரிசார் மட்டக் கல்வியின் தன்மை (பந்தி 82 – 84)

கல்லூரி மட்ட அனுமதிக்குரிய அளவைக் கட்டளை (பந்தி 85)

கல்லூரிசார் மட்டப் பாடவிதானம் (பந்தி 86–89)

கல்லூரி மாணவர்களை உயர்கல்விக்குத் தெரிவு செய்தல் (பந்தி 90)

பரீட்சை முறை (பந்தி 91–95)

சிறப்புத் தகுதிகாண் பரீட்சைகள் (பந்தி 96)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள், .......... 16–18

திறந்த பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகங்கள் (பந்தி 97–99)

பல்கலைக்கழகங்களுக்கு மறைமுக நுழைவு (பந்தி 100)

பட்டதாரி – மேற் கற்கைகள் (பந்தி 101 – 103)

திறந்த பல்கலைக்கழகம் (பந்தி 104)

மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழு ........ 18 – 19
உயர்தொழிற் கல்லூரிகள் ........ 19 – 20
தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகள் ........ 20 – 22
கைப்புனைவியலர் அல்லது இயக்குநர் மட்டம் (பந்தி 123)
கைப்பணியாளர் மட்டம் (பந்தி 124)
தொழினுணுக்கர் மட்டம் (பந்தி 125)
க.பொ.த. தொழினுணுக்க நெறி (பந்தி 126–128)
தொழில்முறை ஆங்கில நெறி (பந்தி 129–130)
திறந்த பாடசாலை ........ 22
தொலைககாட்சி, வானொலி உபயோகம் (பந்தி 133)
விவசாயக் கல்விச் சபை ........ 23 – 24
கல்விப் பூட்கையும் அமைப்பு முறையும் ........ 25 – 28
தேசிய கல்விப் பேரவை (பந்தி 138–139)
கல்வி மதியுரைச் சபை (பந்தி 140)
மாவட்டக் கல்வி மாநாடு (பந்தி 141)
தேசிய கல்விச் சமவாயம் (பந்தி 142)
கல்வி அமைச்சின் அமைப்பு முறை (பந்தி 143)
மாவட்ட அமைப்பு முறை (பந்தி 144)
மாவட்டக் கல்வி அபிவிருத்திக் குழு (பந்தி 145 – 146)
பாடவிதான அபிவிருத்தியையும் ஆசிரியர் கல்வியையும் மேல் நோக்கலும் வழிப்படுத்தலும் (பந்தி 147)
தேசிய மட்டத்திலான பாடவிதான அபிவிருத்தியின் நோக்கெல்லை (பந்தி 148)
மாவட்ட மட்டத்திற் பாடவிதான அபிவிருத்தி (பந்தி 149)
பரீட்சைகள் (பந்தி 150–153)
கற்பித்தற் சேவை ........ 28 – 31
ஆசிரியர் கல்விப் பயிற்சிநெறியின் கட்டமைப்பு (பந்தி 155 – 159)
ஊதியமும் பதவி உயர்வு வாய்ப்புகளும் (பந்தி 160–162)
அதிபர்கள் சேவை (பந்தி 163)
இலங்கைக் கல்விச் சேவையின் மீளமைப்பு ........ 31 – 33
உள்ளடக்கல் (பந்தி 166)
ஆட்சேர்ப்பு (பந்தி 167)
பதவி உயர்வு (பந்தி 168)
ஆசிரியர்களது சம்பளங்களையும் ஏனைய ஊக்குவிப்புகளையும் மீளாய்வு செய்வதற்கான குழு ........ 33
விதந்துரைகளின் பொழிப்பு ........ 34 – 41
இணைப்பு I – கல்விச் சீர்திருத்தக் குழு ........ 42 – 43
இணைப்பு II – தொழினுணுக்கக் கல்விக்கான குழு ........ 44 – 45
இணைப்பு III – தேசிய தொழில் பயிலுநர் பயிற்சிக்கான குழு ........ 46
இணைப்பு IV – அருஞ் சொற்றிரட்டு ........ 47

# முன்னுரை

கல்வியானது கடந்த காலத்திலும் பார்க்க இன்று மிகப் பரந்த ஒரு கருக்கோளாக விளங்குகிறது. ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை, முறைமைசார்ந்த, முறைமைசாரா, பொதுநிலை, தொழில்முறைநிலை, தொழினுணுக்கநிலை, பயிற்சிநிலை, மீளுறுகின்ற, ஆயுள்வரை, முதிர்ந்தோர் சமுதாயம், சேவைமுன், சேவைக்காலக் கல்வி ஆகிய இவையெல்லாம் கல்வியெனும் சிக்கலான இப்புலத் துறையின் அமிசங்களை வருணிக்க உதவும் சில பதங்களாம். எனினும், பரந்த தேசிய அபிவிருத்தித் தேவைகள் எனும் சார்பில் வைத்து நோக்கும்போது, இக் கல்வித் துறை முழுமையும் பிரதானமான முப்பெரும் பிரிவுகளைக் கொண்டிருக்கக் காணலாம். அவற்றுள் ஒரு முனையிற் பாடசாலை முறைமை உளது; மறுமுனையிற் பல்கலைக்கழக முறைமை உளது. மூன்றாவது பிரிவோ பல்வேறு மட்டங்களிலே பரக்க வேறுபடுகின்ற பெருந்தொகைப்பட்ட செயற்றிட்டங்களை அடக்கி நிற்கும். அச் செயற்றிட்டங்கள் வெவ்வேறு வயதுத் தொகுதிகளுக்கு உதவுவனவாய், பல்வேறு அரச நிறுவனங்களாலும் தனியார் நிறுவனங்களாலும் ஏற்படுத்தப்பட்டு, மக்களுடைய கல்வித் தேவைகளைத் தொழில்முறைநிலை, தொழினுணுக்கநிலை, சமுதாயக் கல்வித் தேவைகள் எனும் முத் திறப்பட்ட நிலைகளிலே நிறைவேற்ற முற்படும். கல்வி முறைமையின் இக் கடைசிப் பிரிவை மற்றைய முதலாவது இரண்டாவது பிரிவுகளோடு ஒப்பிடும்போது, அது பெரும்பாலும் உப முறைமைகளைக் கொண்டிருத்தல் காணலாம். எனினும், மக்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளிக்கும் பணியிலே அதன் பங்கு மேன்மேலும் முக்கியமானதாகி வருகின்றது.

இந்த முப்பெரும் கல்விப் பிரிவுகளுள் பாடசாலை முறைமையே சாலப் பெரியதாகும். 1980 ஆம் ஆண்டில், அமைச்சுகள், அரசாங்கத் திணைக்களங்கள் பலவற்றாலும் நிருவகிக்கப்பட்ட பல்வேறு கல்வி – பயிற்சிச் செயற்றிட்டங்களுக்காக, அரசாங்கத்தால் மொத்தமாக ஒதுக்கப்பட்ட மீளுறும் பாதீட்டுத் தொகையிலே, 80 சத வீதமான அத்துணைப் பெருந்தொகையானது பாடசாலை முறைமைக்காகவே செலவிடப்பட்டது. இன்றுள்ள பாடசாலை முறைமையானது பெரும்பாலும் கடந்த நான்கு பதின்மங்களிலே புகுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் மொத்தப் பெறுபேறேயாம். நாற்பதாந் தொடராண்டுகளின் தொடக்கத்திலே புகுத்தப்பட்ட, கன்னங்கரா விசேட குழுவின் சீர்திருத்தங்களானவை, கிராமப் பிரதேசங்களிலே மத்திய பாடசாலைகளைத் திறந்தமை, இலவசக் கல்வி முறைமையைப் புகுத்தியமை, தாய் மொழியைப் போதனை மொழியாகத் தழுவிக் கொண்டமை எனுமிவற்றை உள்ளடக்கியிருந்தமையால், இந் நாட்டின் கல்வி வரலாற்றிலே கலங்கரை விளக்கங்களாகக் கொள்ளத் தக்கவை. கல்வித் துறையிலிருந்து சிறப்புரிமையை நீக்குதலும், சகல பிரதேசங்களிலுமுள்ள சகல பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்புகளைச் சமப்படுத்தும் அவசியமும் அச் சீர்திருத்தங்களின் வழிகாட்டும் கோட்பாடுகளாக அமைந்திருந்தன. கன்னங்கரா விசேட குழுவின் பிற பிரதான விதந்துரைகள், பாடசாலைகளிலே தொழில்முறைக்கல்வி நெறியும், தொழினுணுக்கக் கல்வி நெறியும், நிறுவப்படுவது பற்றியவை. ஆனால், அவை செயற்படுத்தப்படாமலே தவறிப் போயின. பாடசாலைப் பாடவிதானத்திலே கைப்பணிகளையும் தொழிற் பாடங்களையும் சேர்த்தற்குச் செய்யப்பட்ட சில முயற்சிகளும் தோல்வியடைந்தன.

எனினும், இவ்வாறு பாடசாலை முறைமையிற் குடியாட்சிப் பண்பு பெருகவே, பாடசாலைகளில் எல்லா மட்டங்களிலும் மாணவரின் பதிவுத்தொகை மிக விரைவாக உயர்ந்தது. இவ்வழி, மொத்தக் குடித்தொகையின் சதவீதமாகக் கணிக்குமிடத்து, பாடசாலை செல்லும் மாணவர் தொகை 1943 இல் 13 ஆக இருந்து, 1950 இல் 18 ஆக உயர்ந்தது. அஃது இப்போது 21.7 சதவீதமாக உள்ளது.

அறுபதாந் தொடராண்டுகளிலே மேன்மேலும் கூடிய காலம் பாடசாலைகளிலே கல்வி பயின்று மேம்பட்ட தொழில்களை எதிர்பார்த்து நிற்கும் இளைஞர் இருபாலாரும் பாடசாலைகளிலிருந்து பெருந்தொகையினராய் வெளியேறுவாராயினர். நாட்டின் பொருளாதாரமானது பெரும்பாலும் பெருந்தோட்டத் துறையிலிருந்து பெற்ற மீமிகை வருவாயால் ஐம்பதாந் தொடராண்டுகளின் இறுதி வரை பூரித்து நின்ற போதிலும், இப்போது பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. தொழில் நாடும் 'படித்த' இளைஞர் தொகை பெரிதாயிருப்ப அத் தொகையில் ஒரு சிறுபின்னக் கூற்றுக்குத் தானும் வேலை வாய்ப்பளிக்க நவீன தொழிற்றுறை இயலாததாயிற்று. 1977 இன் இறுதியளவில் தொழிலின்மைப் பொதுவீதமானது வேலைப் பலத்தில் 20 சதவீதத்தை எய்திற்று. இளைஞரிடையே அதன் உறுபாடு பொது எண்ணிக்கையிலும் மிக அதிகமாயிற்று. இன்னும், குறையப் படித்தவரிலும் பார்க்கக் கூடப் படித்தவரிடையே அது கூடுதலாகக் காணப்பட்டது.

நவீன துறைத் தொழில்களுக்குத் தேவை அதிகமாயிருப்ப, அவை கிடைப்பது குறைவாயிருப்ப, கடுமையான இந்த அசமநிலையை எதிர்நோக்கிய தொழிற் சந்தையானது பல்வேறு தொழிற்றரங்களுக்கு வேண்டிய கல்வித் தகைமைகளை உயர்த்திக் கொண்டே போயிற்று. இனி, தொழில் வாய்ப்பிற் பெரும் பகுதி அரசாங்கத் துறையாலேயே அளிக்கப்பட்டமையாலும், ஆங்கு மையப்படுத்திய ஆட்சேர்ப்பு முறையும் பத்திரத் தகைமையை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறையும் வழங்கியமை

யாலும், இப் பிரச்சினை மீக்கூர்வதாயிற்று. இதனுற் பாடசாலை முறைமையில் ஏற்பட்ட தாக்கம் யாதெனின், பாடசாலைப் பாடவிதானத்தில் இடம்பெற்ற கல்வியிலே பரீட்சைகள் வலியுறுத்தப்பட்டு ஆதிக்கம் பெற்றமையாகும். இதனுல், பிள்ளைகளின் குணத்திட்பமும் ஆளுமையும் அபிவிருத்தியடைவதற்குப் பெரிதும் உதவுகின்ற இணை–பாடவிதான முயற்சிகளும் எழுத்திலமையாப் பாடவிதான அமிசங்களும் விடுபட்டுப் போயின. இவ்வழி, பரீட்சைகளின் முடக்குத் தாக்கத்தால், கல்விப் போதனையின் உள்ளடக்கமும் அதன் முறைகளும் பாதிக்கப்பட்டன. போதிப்பகங்கள் பெருந்தொகையாகக் கிளம்பின; மாணவர்களுக்கு, இடைநிலை வகுப்புகளிலேதானும், தனிப் போதிப்பு அளித்தல் பெருவழக்காயிற்று.

இப் பாடசாலை முறைமையில் உள்ள நலிவுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்;

1. 9500 இற்கும் மேற்பட்ட அரசாங்கப் பாடசாலைகள் மாணவர் தொகையையும் தாம் அளிக்கும் வசதிகளையும் பொறுத்த மட்டில் மிக அகன்ற ஒரு பரப்பை அடக்குவனவாய் உள்ளன. அவை வெவ்வேறுன தனிப்பட்ட நிறுவனங்களாகி, முதலாவதாக, அரசு உதவுகின்ற வரையறைப்பட்ட மூலவளங்களுக்கும், இரண்டாவதாகப் பெற்ருரிடையே தமக்குச் சார் ஒரு குழாத்தைத் தேடுவதற்கும் போட்டியிடுகின்றன. இத்தகைய நிலைமையிற் பாடசாலைகளுக்கு மாணவரை அனுமதிப்பது பற்றிப் பல்வேறு பிரமாணங்கள் உள்ள போதும், பெரியனவும் செல்வம் மிக்கனவுமான சிற்சில பாடசாலைகள் மேன்மேலும் பெரியனவும் செல்வமிக்கனவாகவும் வளர்ந்துவர, சிறியனவும் வறியனவுமான பாடசாலைகள் மேன்மேலும் வறுமை கூர்ந்து வருகின்றன. இஃது இரு வகைப் பாடசாலைகளுக்கும் தீங்கு பயப்பதாய் இருப்பதோடு முழுப் பாடசாலை முறைமைக்குமே தீங்கு பயப்பதாய் உளது.
2. பாடசாலைகள் செவ்வையான முழுமைப்படியான கல்வியைப் புகட்டும் நிறுவனங்களாகவன்றி, போட்டிக் கருவிகளாக இழிந்து விட்டன. பரீட்சைகளுக்கே மிகையான அழுத்தங் கொடுக்கப்படுவதால்,வகுப்பறையின் அகத்தே கல்வியின் உள்ளடக்கம் வளங்குன்றி வறிதாகி விட்டது; இணை–பாடவிதான முயற்சிகளின் வாயிலாக வந்துறுகின்ற ஆற்றவும் அருமந்த அந்தப் பெறுபேறுகள் சுருங்கி விட்டன. உச்சியை அடைவதற்கு நிகழும் பூசலுக்கே முதலிடம் கொடுத்து உதவுவதால், அதனை அடையவியலாத பெரும்பாலாரின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன.
3. தேசிய மட்டத்தில் எழுத்துப் பரீட்சைகள் வாயிலாகச் சோதிக்கத்தக்க பாடவிடயத்திலேயே பெரிதுங் கவனஞ் செலுத்தப்படுகின்றது. மற்றும் அதற்கு ஒப்பான அல்லது அதினும் முக்கியமான பாடவிதான அமிசங்களை — உண்ணுட்டு இயைபின் உள்ளடக்கமும் செய்ம்முறைப் பாடங்களும் என்றித்தகைய அமிசங்களைப் — புறக்கணிக்கும் நாட்டம் காணப்படுகின்றது.
4. ஆசிரியர் சேவையின் வினையாற்றல் பற்பல காரணிகளாற் பாதிக்கப்படுகின்றது. சேவை முன் பயிற்சி யாதும் இல்லாத பத்திரத் தகைமையையே தனியோர் அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களைச் சேவைக்கமர்த்தல்; தாழ்ந்த சம்பள அளவுத்திட்டங்களும் அதனுல் ஆசிரியர் தொழிலில் விளையும் அதிருப்தியும்; ஆசிரியரிடையே பாடசாலை மாட்டு விசுவாச உணர்ச்சியையும் ஈடுபாட்டையும் தூண்டிவிடத் தவறுகின்ற அனைத்துத் தீவக இடமாற்றற் சேவை ஆகியன அக் காரணிகளுட் சிலவாகும்.

அன்றியும் பல்கலைக்கழக முறைமையும் உயருந் தேவைக்கீடாக விரிவடைந்ததாயினும், பாடசாலை முறைமை போன்று அஃது அத்துணை விரிவடையவில்லை எனலாம். இந்த விரிவானது போதிய மூலவளங்கள் இன்றியும் தகவான திட்டமிடல் இன்றியும் நிகழ்ந்தமையால், பண்புத் தரம் இழிவடைதற்கு ஏதுவாயிற்று. பல்கலைக்கழக முறைமையிற் காணப்படும் உறுத்தும் நலிவுகள் பின்வருமாறு:—

1). பட்டதாரி மாணவர்க்குச் சுயமொழிகளிலே போதிய பனுவல்கள் கிடைக்காமை. இதன் பயனுக விரிவுரைக் குறிப்புகளையே தமக்கு உறுதுணையாக அன்னுர் நம்பியிருத்தல் அவசியமாகின்றது.

2). கல்வி கேள்விகளிலும் ஆராய்ச்சியிலும் தலைசிறந்து விளங்குஞ் சமுதாயங்களாகப் பல்கலைக்கழகங்கள் இலங்க வேண்டும் எனும் குறிக்கோளுக்கு ஈடாக அவை வளர்ந்தோங்கத் தவறியமை.

கல்வி முறைமையின் மூன்ருவது பிரிவானது பெருந்தொகையான தனியார் துறை, பொதுவார் துறை நிறுவனங்களால், பல்வகைப்பட்ட முறைகளைக் கைக்கொள்வதன் வாயிலாக, பல திறப்பட்ட மக்கட்டொகுதிகளை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற நானுவிதத் தொழினுணுக்க, சமுதாய, தொழில்முறைக்கல்விச் செயற்றிட்டங்களை உள்ளடக்கி உளதாதலின், அதனை ஒரு முறைமையெனல்

அச்சொல்லின் மெய்ப் பொருளுக்கு அமையாது. இத்தகைய செயற்றிட்டங்கள் இயைபுபாடு யாதும் இன்றிப் பல்கிப் பெருகிவிட்டன. எனினும் அவற்றுட் பெரும்பாலானவை குறிப்பான அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவன எனுமாற்றால், வலிமை உடையனவாகும். ஆதலின், அவை கற்பிப்பவை கற்றவுடனும் பொதுவாகப் பயன்தர வல்லவை — அவ்வாறே பயன்படுத்தவும்படும். இது நடைபெறாவிடத்து இத்தகைய செயற்றிட்டங்கள் நெடுங்காலம் உயிர் தரிக்குமாறில்லை. மேலும், இக் கல்விப் பயிற்சிச் செயற்றிட்டங்களை ஆக்கியளிக்கும் இத் தொகுதி, இந் நாட்டு மனித வளங்களின் ஆக்கத் திறனிலே ஆற்றவும் விரைவான தாக்கத்தை உடையதாகும் என்பது மேற்கூறிய உண்மையாற் போதரும். முறைமையான கல்வி நிறுவனங்களாகப் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் பயன் பயப்பதற்குக் கூடிய காலஞ் செல்லும். இந் நாட்டின் கல்விப் பயிற்சி முறைமைகளைச் சீர்திருத்த முற்படும் எந்த முயற்சியும் இந்த நாநாவிதத் தொகுதியைப் புறக்கணித்தல் முடியாது. அரசின் பிரமாணங்களுக்கு அடிப்படாமையாற் போலும் அது பெறுகின்ற திண்மை நிலையினைத் (உயிர்ப்பண்பைத்) தகைக்காதே, மனித மூலவளங்களின் பயன்பாட்டையும் மற்றத் திறன்களின் அபிவிருத்தியையும் உத்தம அளவுக்கு உய்க்கும் பொருட்டு, இந் நாட்டின் கல்விப் பயிற்சி முயற்சிகளில் அவதியான சிறப்பு வாய்ந்த இத் துறையை விரிவுபடுத்தி நெறிப்படுத்தி ஆதரவளிப்பதை உறுதிப்படுத்துமுகமாக ஏற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பாடசாலைப் பிரிவு, பல்கலைக்கழகப் பிரிவு, தொழில்முறை / தொழினுணுக்கக் கல்வியும் பயிற்சியும் கொண்ட பிரிவு என்றித்தகைய முப்பெரும் பிரிவுகளைக் கொண்ட இற்றைக் காலக் கல்வி முறைமையிலே நலிவு பல உண்டு. அவற்றை மீக்கொள்ளாவிடத்து, அவை இம் முப்பிரிவுகளையும் வினைக்கேடு உளவாக்கிவிடும். மேலிட்டு நிற்கின்ற பிரச்சினைகளுக்காய தீர்வுகளை வகுத்திடும்போது, அத் தீர்வுகள், நிகழும் நிலைவரத்தைச் செவ்வையாகப் பகுத்தாய்ந்து பெற்ற முடிபுகளை அடிப்படையாகக் கொண்டனவாக அமைதல் வேண்டும். ஆகவே, பொதுக் கல்வி, தொழினுணுக்கக் கல்வி, தேசிய பயிலுநர்ப் பயிற்சி ஆகிய மூன்றும் பற்றி முறையே ஆராய்ந்து அறிக்கை செய்யும் பொருட்டு அரசாங்கம் மூவேறு குழுக்களை அமர்த்தியது. இக் குழுக்களின் உசாக்கை நியதிகளும் உறுப்பினர் பெயர்களும் இணைப்புகளிலே தரப்பட்டுள. இம் மூன்று அறிக்கைகளின் உள்ளடக்கத்தையும் பற்பல தொகுதிகள் ஆராய்ந்தன. அவற்றின் ஆலோசனைகளின் பெறுபேறுகளே தற்போதைய வெள்ளை அறிக்கையில் முன்னீடுகளாக இடம் பெற்றுள. பாடசாலைகளிலே சமயம் போதிப்பதுபற்றி அறிக்கை செய்தற் பொருட்டும் ஒரு குழு அமர்த்தப்பட்டது. சமயத்தில் அறிவுக்கு அப்பாற்பட்ட கற்கைப் பெறுபேறுகளிலே விசேட கவனஞ் செலுத்துமாறு அக் குழு கேட்கப்பட்டுளது. அன்றியும், சமயக் கல்வியின் பண்புத் தரத்தைச் சிறக்கச் செய்வதில ஞாயிற்றுப் பாடசாலைகளும் அத்தகைய பிற அமைப்புகளும் முறைமைப் பாடசாலைகளோடு இணைந்து பணியாற்றுமாறு எவ்வாறு என்பதைப் பரிசீலனை செய்யும்படியும் அது கேட்கப்பட்டுள்ளது. அக் குழுவின் அறிக்கை கிடைக்கும் வரைக்கும், சமயக் கல்வி பற்றிய விதந்துரைகள் தற்போதைய வெள்ளை அறிக்கையிலிருந்து மறித்து வைக்கப்பட்டுள. கல்வி அமைச்சின் உசாவலோடு அரசு அமைச்சால் அமர்த்தப்பட்ட குழுவொன்று, தொலைக்காட்சிச் சாதனத்தைக் கல்வி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது பற்றியும் பிற விடயங்கள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றது. அதன் அறிக்கை கிடைக்கப் பெற்றதும், வலிமைசான்ற தொலைக்காட்சிச் சாதனத்தைப் பாடசாலை முறைமையில் மட்டுமன்றி, இம் முன்னீடுகளிலே இடங்கொண்ட மூன்றும் நிலைக் கல்விப் பரப்பிலும் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இச் சீர்திருத்த முன்னீடுகளின்படி புதிய கல்வி முறைமையானது தெளிவான மூவேறு பகுதிகளைக் கொண்டிருக்கும்:—

i. பொதுக் கல்வி அளித்தற்காய பாடசாலை முறைமை;
ii. பல்கலைக்கழக முறைமை; அத்துடன்
iii. மூன்றும் நிலைக் கல்வி முறைமை.

## பாடசாலை முறைமை

எல்லார்க்கும் உரிய பொதுக் கல்வியின் அகற்சி வருமாறு:—

i. முதலாம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் வரையுமுள்ள 5 ஆண்டு ஆரம்பப் பாடசாலைப் படிப்பு.
ii. 6 ஆம் தரம் தொடக்கம் 8 ஆம் தரம் வரையுமுள்ள 3 ஆண்டுக் கனிட்ட இடைநிலைப் பாடசாலைப் படிப்பு
iii. 9 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையுமுள்ள 3 ஆண்டுச் சிரேட்ட இடைநிலைப் பாடசாலைப் படிப்பு.

பாடசாலையிலிருந்து முந்தியே விலகுநர்க்கும் ஒரு சான்றிதழ் பெறும் வாய்ப்பை அளிக்கும் பொருட்டு, 8 ஆம் தரத்து இடைநிலையிலே, கொத்தணி மட்டத்தில் ஒரு பரீட்சை வைக்கப்படும். இப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு தெரிவோ நெறிப்படுத்தலோ இருக்கமாட்டாது. பொதுக் கல்வியின் அகற்சியானது 11 ஆம் தரத்து இறுதியில் வைக்கப்படும் பொதுக் கல்விச் சான்றிதழோடு முடிவுறும்.

பாடசாலை முறைமையிலுள்ள கடைசி இரு தரங்களாகிய 12 இலும் 13 இலும் வன்மையான அறிவாண்மை இயற்றகவு உள்ளார்க்கே இடமளிக்கப்படும். இப்போதுள்ள கல்விப் பொதுத் தராதர (உயர் நிலைப்) பரீட்சைக்குப் பதிலாக அமையப் போகும் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்கும் அத் தரங்கள் மாணவர்களை ஆயத்தஞ் செய்யும்.

பாடசாலை வலயத்துள் நிலவுகின்ற பாடசாலைப் படிப்பு வசதிகளிற் காணப்படுகின்ற ஏற்றத் தாழ்வுகளை நுண்ணிமப்படுத்தற் பொருட்டும், பாடசாலை முறைமையின் அகத்தே மதிமைப்படுத்தல் வாயிலாகக் கூடிய வினைத்திறனை எய்தற் பொருட்டும், பாடசாலைகள் இயன்ற விடத்தெல்லாம் கொத்தணிகளாகத் தொகுத்தமைக்கப்படும். அணவியுள்ள ஒரு நிலப்புலத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் தொகுதியே இங்குக் கொத்தணியாம். கிடைக்கத் தகும் மூலவளங்களையெல்லாம் நனி சிறந்த நன்மை பயக்கும்வகையிற் பயன்படுத்தி, அப்புலம் முழுவதன் கல்வித் தேவைகளையும் தீர்த்துதவுமாறு அக்கொத்தணியானது ஒரு முழுத் தனியுலகாக அபிவிருத்தி செய்யப்பட்டு முகாமிக்கப்படும். ஆசிரியர் சேவையின் வினையாற்றலை மேம்படுத்தும பொருட்டுப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:—

1. பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கு முன்னர், ஆசிரியர் சேவையிற் சேருநர் யாவர்க்கும் சேவைமுன் பயிற்சி அளிக்கப்படும.
2. ஆசிரியர் தாம் விரும்பித் தேரும் மாவட்டங்களிலேயே சேவை செய்ய வாய்ப்பளித்தற் பொருட்டு, மாவட்ட ஆசிரியர் சேவையொன்று நிறுவப்படும்.

## பல்கலைக்கழகங்கள்

பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுகள் செய்யப்படும். ஆயினும், பட்டதாரிப் பயிற்சி நெறிக்கும் பட்டதாரி — மேற் பயிற்சி நெறிகளுக்குமாக, குறித்த விகிதசம அளவிற் சில இடங்கள் தொழிலில் உள்ளார்க்கும் ஒதுக்கி வைக்கப்படும்.

பட்டதாரி—மேற் படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் தம் மூலவளங்களிற் கணிசமான அளவினை உய்க்கின்றனவாய், மாட்சிமை நிலைக்களன்களாக விளங்கத்தக்கவாறு பல்கலைக்கழகங்கள் பேணி வளர்க்கப்படும். பட்டதாரி—மேற் படிப்புக்கும், கலாநிதி—மேற் படிப்புக்கும் தக்க வாய்ப்புகள் வழங்கப்படும். சிரேட்ட அறிவாண்மைத் திறத்தாரைப் பரிமாறிக்கொள்ளற் பொருட்டு, பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களோடு தொடர்புகள் பூணப்படும். அரசின் நிறுவனங்களிடமிருந்தும் தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும் சிரேட்ட உயர் தொழிலாளரையும் ஆய்வாளரையும் அவ்வாறே பரிமாற்றுதற்கும் ஊக்கமளிக்கப்படும்.

தொழிலில் ஈடுபட்டுள்ளாரும் படிப்புக்காக முழு நேரஞ்செலவிட முடியாதுள்ளாரும், உயர் கல்வி துரப்பதற்கு, திறந்த பல்கலைக்கழகம் வாய்ப்பளிக்கும். இந் நாட்டுக்கு அவசரமாக வேண்டியுள்ள ஆள் வலுத் தேவைப்பாடுகளைத் தீர்த்தற்கு உகந்த பயிற்சிநெறிகளிலேயே திறந்த பல்கலைக்கழகம் தொடக்கத்திற் கருத்தூன்றும்.

## மூன்றாம் நிலைக் கல்வி முறைமை

பல்கலைக்கழகஞ்சாராக் கல்வியையும் தொழினுணுக்க, தொழில்முறைக் கல்வியையும் ஆற்றுப்படுத்தி, இயைபுறுத்தி, அபிவிருத்தி செய்து ஆதரிக்கும் நோக்கம் பொருட்டு, மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும்.

பொதுக் கல்வி பயின்று முடித்த மாணவரிற் பெருந்தொகையானோர் மூன்றாம் நிலைக் கல்விப் பயிற்சிநெறிகளுக்காகத் தெரிவு செய்யப்படுவர். மேலும், முறைசார் கல்வி நிறுவனங்களிலிருந்து விலகியோர்க்கு, தனியாள் வளப்பாட்டுப் பயிற்சிநெறிகள் கிடைக்குமாறும் செய்யப்படும். இவை பிரதானமாகப் பின்வரும் நிறுவனங்களால் உதவப்படும்:—

அ) பலதிறப்பட்ட தாபித்த உயர் தொழில்களுக்காகப் பயிற்சிநெறிகளை ஆக்கியளிக்கின்ற உயர் தொழிற் கல்லூரிகள்.

ஆ) எல்லா மட்டங்களிலும் தொழினுணுக்க, தொழில்முறைக் கல்வியை வழங்குகின்ற தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகள்.

இ) செய்ம்முறை விவசாயக் கல்வியை வழங்குகின்ற விவசாயக் கல்விச் சபை.

ஈ) தனியாள் வளப்பாட்டுப் பயிற்சிநெறிகளையும் மற்றும் முறைசார் கல்வி அமைப்பினுள் மீளப்புகலுக்குவேண்டிய பயிற்சிநெறிகளையும் வழங்குகின்ற திறந்த பாடசாலை.

உயர் தொழிற் கல்லூரிகளும் தொழினுணுக்கக் கல்வி அதிகாரசபைகளும், மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவின் மேற்பார்வையுள் அடங்கும்.

பொது—மேற்கல்வி எனும் பகுதியானது மீளுறும் கல்வி முறையாக அமைந்து, முழு நேரப் பயிற்சிநெறிக்காகவோ பகுதிநேரப் பயிற்சிநெறிக்காகவோ கல்விமுறைக்குள் வெவ்வேறு முனைகளிலே மீளப்புகுதற்கு வாய்ப்பளிக்கும். பொதுக் கல்வியைப் பயின்று முடித்துத் தொழிலிற் புகுந்தாரை, அல்லது மூன்றும் நிலைக் கல்வியிற் சான்றளிப்புப் பெற்றபின் தொழிலிற் புகுந்தாரைத் தெரிவு செய்ய வழிவகுக்கும் வகையிலேயே இப் பயிற்சிநெறிகள் கட்டமைக்கப்பட்டிருக்கும். தம் கல்வியை விருத்தி செய்து, அவ்வழி, பல்வேறுபட்ட உயர் தொழில்களிலும் சேவைகளிலும் மேலான அணிவரிசைகளை எய்த விரும்புவார்க்கு, இஃது ஒரு மாற்று வழியாக அமையற்பாலது.

பொதுக் கல்வியின் அகற்சிக்குப்பின், உத்தேசித்துள்ள முறைமையானது பின்வருமாறு உரு வெடுக்கும்:—

1. க.பொ.த. இல் கண்ட வினையாற்றலுக்கு ஏற்ப, வண்மையான அறிவாண்மை இயற்றகவு படைத்தோர், பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்கு இட்டுச் செல்லும் கல்லூரிப் பயிற்சிநெறிகளுக்காகத் தெரிவு செய்யப்படுவர். பல்கலைக்கழகத்திலும் சில உயர் தொழிற் கல்லூரிகளிலும் நேராகப் புகுதற்கு இது வாய்ப்பளிக்கும்.
2. பொதுக் கல்வி பயின்று முடித்த மாணவரிற் பெருந்தொகையானோர் உயர்தொழில், தொழினுணுக்கம், தொழில் முறை, விவசாயம் ஆகியன தழுவிய பயிற்சிநெறிகளிற் சேருதற்காகப் பாடசாலை முறைமையிலிருந்து விலகுவர்.
3. இதை நிகர்த்த பிறிதொரு மாணவர் தொகை, தொழில்வாய்ப்பு நாடி, பாடசாலை களினின்றும் விலகிச் செல்லும்.
4. உயர்தொழில், தொழினுணுக்கம், தொழில் முறை, விவசாயம் ஆகியன தழுவிய பயிற்சிநெறிகளைப் பயின்று முடித்தோர், குறித்த ஒரு காலத்துக்கு வேலை அனுபவம் பெற்ற பின்னர், அதே துறையில் அல்லது வேறுதுறையில் (பல்கலைக்கழகத்தில் உள்ளவை உட்பட) உயர்மட்டப் பயிற்சிநெறிகளிற் சேருதற்கு விண்ணப்பஞ் செய்யும் உரித்துடையோராவர்.
5. தொழில் நாடிப் பாடசாலை முறைமையினின்றும் விலகியோர், குறித்த ஒரு காலத்துக்கு வேலை அனுபவம் பெற்ற பின்னர், பட்டதாரிப் பயிற்சிநெறி உட்பட மூன்றும் நிலைப் பயிற்சிநெறிகளிற் சேருதற்கு விண்ணப்பஞ் செய்யும் உரித்துடையோராவர்.

முறைமைக் கல்வி நிறுவனங்களினின்றும் விலகியோர் யாவர்க்கும், வயதுப் பேதமின்றி, மேற் கொண்டு கல்வி கற்பித்தற்காகத் திறந்த பாடசாலைகளை உள்ளடக்கித் தீவளாவிய வலையமொன்று நிறுவப்படும்.

திறந்த பாடசாலையின் முக்கியமான பணிகளுள் ஒன்று யாதெனின் பாடசாலையினின்றும் விலகி வேலையுலகிற் புகுந்தோர்க்கு, ஆதரவு மையம் ஒன்றின் சேவைகளை வழங்குவதாம். தொழிலில் உள்ளார் முழு நேர அல்லது பகுதிநேரப் பயிற்சிநெறிப் பொருட்டு, கல்வி முறைமையுள் மீளப்புகுதற்கும் அம் மையம் ஆதரவளிக்கும்.

## பூட்கை மீளாய்வு

கல்விப் பூட்கை சம்பந்தமான சகல விடயங்களிலும் அரசாங்கத்துக்கு ஆயுரை வழங்கும் பொருட்டுத் தேசிய கல்விப் பேரவை ஒன்று தாபிக்கப்படும். கல்வி அமைச்சின் பூட்கைகளையும் அவை செயற்படுத்தப்படுமாற்றையும் உரியவாறு மீளாய்தற்பொருட்டு, கல்வி அபிவிருத்திச் சபையொன்று நிறுவப்படும். அச் சபை கல்விப் பூட்கைகளினை மீளாயும் அரங்காக உதவவல்ல தேசியச் சமவாய மொன்றை ஒருக்கூட்டும்.


## இன்றியமையாக் காப்பீடுகள்

போதிய ஆயத்தமின்றி அவசரப்பட்டுச் செயலுறுத்தப்படுவதாலேயே நல்லதோர் கல்விச் சீர் திருத்தமும் பாழாகிப் போதல் உண்டு. சீர்திருத்தங்களின் குறிக்கோள்கள் இவ்வாறு தோல்விப்படுதல் மாத்திரமன்று; அகாலத்தில் அழிவுபடும் இத்தகைய சீர்திருத்தங்களுக்குப் பலியாடாகின்ற இளந் தலைமுறையினர்க்கு, ஈடு செய்யவொண்ணுக் கேடும் பெரும்பாலும் வந்துறுதல் கண்கூடு. ஆதலின் இச்


சீர்திருத்தங்கள் சட்டக் களரியிலே, பகிரங்க விவாதத்துக்கும் உரையாடற்கும் பாத்திரமாய பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், இச் சீர்திருத்தங்கள் எவர் நலங்கருதித் தீட்டப்படுகின்றனவோ அந்த மாணவ மணிகளுக்கும் மாணுக்கருக்கும், தகவிலாத் திட்டமிடலும் அவசரப்பட்ட செயற்பாடுங் காரணமாக, எவ்வித ஏலாப்பாடும் வந்துருவகையில் உறுதிப்படுத்தும் பொருட்டு, அவசியமான காப்பீடுகள் யாவும் மேற்கொள்ளப்படும்.

21. கச்சேரி
யாழ்ப்பாணம்

# நடைமுறையிலுள்ள கல்வி முறைமை / பயிற்சி



# உத்தேசிக்கப்பட்டுள்ள கல்வி முறைமை / பயிற்சி



## மாற்றங்களின் முக்கிய நோக்கங்கள்

1. பொதுக் கல்வியினது சூழ்ச்சத்திற் புகுத்தப்பெறவுள்ள மாற்றங்கள், குறிப்பாகப் பாடசாலைக் கல்வி அகற்சியினை மாற்றியமைத்தல், பாடவிதான மீளமைப்பு, பாடநூல்கள், பரீட்சைகள் என்பவை தொடர்பான மாற்றங்கள், பிள்ளையின் வளர்ச்சியினைப் பயனுறுதி வாய்ப்ப மேம்படுத்துவதோடு பிள்ளை எதிர்காலத்தில் வாழவும் தொழில் புரியவும் ஏற்றவாறு தயார்ப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டன. பொதுக் கல்வியினது அகற்சியில் மூன்று பாகங்களில் — ஆரம்பநிலை, கனிட்ட இடைநிலை, சிரேட்டஇடைநிலைப் பாகங்களில் — ஒவ்வொன்றும், பிள்ளையினது வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பாடசாலைக் கல்வி முறைமை வழங்கத்தகு உதவியினை உத்தம அளவுக்கு இயலச் செய்யும் வகையில் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கேற்பவே பாடவிதானமும் பாடநூல்களும் வகுக்கப்படும்.

## புதிய கட்டமைப்பு

2. பொதுக் கல்வியின் பதினோர் ஆண்டு அகற்சி மூன்று பாகமுடையதாய் மீளமைக்கப்பெறும். இது 6 ஆம், 7 ஆம், 8 ஆம், தரங்களிலே பாடசாலையை இடையில் விலகிச் செல்லும் பிள்ளைகள் தொகையினைக் குறைக்கும் பாங்கில், சான்றளிப்பைப் பெறும்வரை பாடசாலையிலே தொடர்ந்திருக்க அவர்களைத் தூண்டும். இத்தகைய சான்றளிப்பு, தொழில் வாய்ப்புக்கள் பெறவியன்ற விசேட பயிற்சியில் முன் கூட்டியே ஈடுபடும் நாட்டமுள்ள மாணுக்கர்களில் ஒரு பகுதியினரைத் தொழினுணுக்கக் கல்வி அதிகார சபையின் கீழ் வரும் பாடநெறிகளிலே காலநேரத்தோடு சேர்ந்து கொள்ள இடமளிக்கும்.

3. ஒரு பிள்ளையின் பாடசாலைக் கல்வி இப்போதுள்ளதுபோன்று 5 வயது பூர்த்தியான பின்னரே ஆரம்பிக்கும். ஆனுல், ஆறு ஆண்டு ஆரம்பக் கல்விக்குப் பதிலாக, முதற் பாகம் 5 ஆண்டினைக் கொண்டதாய் இருக்கும். பொதுப் பாடசாலைக் கல்விக் காலத்தின் எஞ்சிய 6 ஆண்டுக் காலத்தில், முதல் மூன்றுண்டுகள் இரண்டாம் பாகத்தினைக் கொண்டதாய் 6 முதல் 8 வரையான தரங்களைக் கொண்டு கனிட்ட இடைநிலைக் கட்டம் எனக் குறிக்கப் பெறும். அடுத்த மூன்று ஆண்டுகள், மூன்றும் பாகத்தினைச் சார்ந்து 9 முதல் 11 வரையான தரங்களைக் கொண்டு சிரேட்ட இடைநிலைக் கட்டம் எனக் குறிக்கப்படும். 11 ஆண்டு அகற்சிக் கல்வியைத் தொடர்ந்து (12 ஆம் 13 ஆம் தர) கல்லூரிக் கல்வி, அறிவுத் தேட்டவகையான உயர் கல்வியினைத் தொடர விழைவார்க்கு உரியது.

4. பொதுக் கல்வி அகற்சியிற் சான்றளிப்புக் குரிய இரு பரீட்சைகள் நடைபெறும். முதற் பரீட்சை 8 ஆம் தர முடிவிலே பாடசாலைக் கொத்தணி மட்டத்தில் இடம்பெறும். கொத்தணியென்பது பெரும்பாலான பாடசாலைத் தொகுதியைக் கொண்டு விளங்கும் அமைப்பு அலகாகும். இரண்டாவது பரீட்சை தேசிய சான்றளிப்பை உடையதால் பொதுக் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சை எனப் பெயர் பெறும். இது 11 ஆம் தர முடிவில் நடத்தப்படும்.

5. 8 ஆம் தர முடிவிலே சான்றளிப்புக்கான ஏற்பாடு மாணுக்கர்கள் இப் பரீட்சையிற் சித்தியெய்தியவுடன் தொழினுணுக்கக் கல்வி அதிகார சபையின் கீழ் (தொ.க.அ.) உள்ள நிறுவனங்களிற் சேருதற்கு மாணுக்கர்களின் ஒரு விகிதத்தினருக்கு இடமளிக்குமேனும், தொ.க.அ. பயிற்சிநெறிகளிற் சேருதற்குரிய பெரும்படியான பிரவேசக் கட்டம் 11 ஆம் தரத்தின் பின்னர், அதாவது பொதுக்கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குப் பின்னரே அமையும். (viii ஆம், ix ஆம் பக்கங்களிலுள்ள வரைபடங்களைப் பார்க்க) இப் பயிற்சிநெறிகளிற் சேருவதற்கான தேவைகள் பலவகையான தொழில்சார் உளச்சார்புக்கு அழுத்தம் கொடுக்கும்.

## ஆரம்பப் பாடசாலை (தரங்கள்: 1 முதல் 5 வரை)

6. ஐந்து வயது பூர்த்தி முதல், பத்து வயது பூர்த்தி வரையான காலங்கொண்ட ஆரம்பப் பாடசாலை ஆண்டுகள், ஒரு பிள்ளையின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய பாகமாகும். இந்தப் பருவத்திலேதான், பிள்ளையின் ஆக்கத்திறன் புலப்படத் தொடங்குகிறது. பிள்ளையின் எதிர்கால வாழ்வு நிறைவு காணற் பொருட்டு இந்த ஆக்கத்திறன் அபிவிருத்தி செய்யப்படுவதோடு அக் கல்வி விரிவாக்கப்படலும் வேண்டும். ஆரம்பப் பாடசாலையிற் பிள்ளை பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் தன்மையும் வகையும், பிள்ளை வளர்க்கப்பெறும் முறையும் அதன் பின்னைய காலத்து ஆளுமை வளர்ச்சியிற் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்துவன.

ஐந்து வயது பூர்த்தியான நிலையிற் பிள்ளை பாடசாலைக்குப் போகுமிடத்து, வீட்டில் அது அனுபவித்த சூழலிலும் முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழலிலே காலடி வைக்கின்றது. இதன் விளைவாகச் சூழலுக்கேற்பத் தன்னை இசைவுபடுத்திக் கொள்ளப் பல பிரச்சினைகளை அது எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பிள்ளை இங்ஙனம் இசைவுற நடந்து கொள்வதற்கும், அனுபவத்தை விரிவாக்குவதற்கும் துணையாகவே பாடவிதானம் அமைகிறது. பிள்ளை பாடசாலைக்கு வரும்போது, முதல் ஐந்தாண்டிலும், தான் திரட்டிக் கொண்ட அனுபவத்தினை வகுப்பறைக்குக் கொண்டுவருகிறது. பயன்மிக்க இந்த அனுப

வத்தைக் கொண்டும், அபிநயம், நடிப்பு, நடனம், பாடல், வரைதல், இயற்கையையும் இயற்கைத் தோற்றப்பாடுகளையும் அவதானித்தல் போன்ற இயல்பான ஆற்றல்களைக் கொண்டும் பிள்ளை தனது ஆளுமையை வெளிப்படுத்துவதற்குத் துணைபுரியும் வகையிற் பாடவிதானம் அமைக்கப்பெறல் வேண்டும்.

7. பிள்ளையின் ஆக்கற் செயற்பாட்டின் மீதான இந்த அழுத்தம், முழுமைக் கூறுகவே ஆரம்பப் பாடசாலைப் பாடவிதானம் முழுவதிலும் பேணப்படும். பிள்ளையிடம் இயல்பாகவே காணப்படும் புதியது காணும் வேட்கையினைத் தூண்டும் தன்மையிலும், தாஞகவே விடயங்களைத் தெரிந்து கொள்ள விழையும் ஆவலை நிறைவேற்ற வகைசெய்யும் தன்மையிலும்-பாடவிதானம் துணைநிற்கும்.

8. இந்த அணுகுமுறையை மேற்கொள்ளலால், வாசிப்பு, எழுத்து, எண் — சொற்களைத் தெரிந்து கொள்ளல், சொற்களின் செவ்விய உச்சரிப்போடு சீரிய பிரயோகம், எழுத்துகளை எழுதிப் பழகல், இலக்கணம், சொற்றெடர் என்பவற்றைத் தெரிந்துகொள்ளல் ஆகிய முறையில் அடிப்படைத் தேர்ச்சிகள் புறக்கணிக்கப்படும் என்று கொள்ளலாகாது. இவ்வாற்றல்களைப் பிள்ளைகள் வெறும் இயந்திர இயக்க முறையிலன்றித் தேர்ந்தறி பாங்கிற் பயின்றுகொள்ள உதவி வழங்கப்படும்.
ஆரம்பப் பாடசாலை வாசிபபு நூல்களின் பொருளடக்கம் பாடவிதானத்தினது அம்சங்களினுடனும் சுற்றுடற் கருமப்பாடுகளுடனும் தொடர்புறுத்தப்படும்.

## வாசிப்பு நூல்கள்

9. இக் கட்டத்தில் இடம்பெறும் கற்பித்தல், கற்றல் ஆகிய இரு முறைகளிலும் வாசிப்பு நூல் ஒரு முக்கிய இடத்தினைக் கொண்டு திகழும். வாசிப்புப் பாடப்புத்தகத் தொடரின் பொருளடக்கம் நாட்டின் சமூக, பொருளாதார, கலாச்சாரத் தேவைகளோடு தொடர்புடைய விடயங்களையும் பல்வேறு வயது மட்டங்களிலுள்ள பிள்ளைகளின் பண்பியல் தேவைசார் விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு விளங்கும். இவை பல்வேறு அறிவுத் துறைகளிலும் அனுபவங்களிலும் நாட்டத்தை ஏற்படுத்தத் தக்க வகையிற் பல்லின விடயங்களை அளாவியனவாய் அமையும். இவ்வாறு, துணை நூல்கள் பெறும் வாய்ப்புடைய சிறூர்க்கும் அத்தகைய வாய்ப்புக் கிட்டாதிருப்பவர்களுக்குமிடையே அறிவு விடயத்தில் உள்ள இடைவெளியைக் குறைக்க அவை துணை நிற்பன. ஆரம்ப நிலை வாசிப்புப் புத்தகங்கள், திட்ட மிட்ட சொற்றெகுதியினையும் கொண்டு விளங்கும்.

10. பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதாய் இன்று செயற்பாட்டில் உள்ள, சூழ்ச்சை யானது ஒவ்வொரு தரத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட வாசிப்புப் புத்தகங்களைப் பேணுவதைச் சாத்திய மாக்கியுள்ளது. ஏனெனில், பல பிரதிகள் அச்சிடுவது சிக்கனமாதலின் அவ்வாறு செய்வது இயலுவ தாயிற்று. ஆகவே, ஒரு சிறு மேலதிகச் செலவுடன் ஒரு வகுப்பிலே பல வாசிப்பு நூல்களைப் பயன்படுத் துவது சாத்தியமாகும். இவற்றை மாணுக்கர்களிடையே பரிமாறிக் கொள்வதன் மூலம், ஒவ்வொரு பிள்ளைக்கும் அதிகமான விடயங்களை வாசித்தறிய வாய்ப்புண்டு. இவ் வொழுங்கு, துணைநூலின் தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்ய வகை செய்யும்.

## ஆரம்ப மட்டத்திற் கணிப்பீடு

11. ஆரம்ப மட்டத்தில் மாணுக்கனின் செயலாற்றலை மதிப்பீடு செய்வது, தேர்ச்சித் திறனை முயன்று பேணும் இயல்பு காட்டும் வளர்ச்சியை மேம்படுத்தத் துணை செய்வதாகும். இது கற்பித்தற் செயற்பாட்டின் ஒரு பகுதியாகவும் அமையும். அடிக்கடி சோதிப்பதும் பல்தொகைப் பரீட்சையும் தவிர்க்கப்படும். ஒவ்வொரு தவணையும் பொதுவான பரீட்சித்தல் நடைபெறும். இதில், குறித்த ஒரு தலைப்பு, நிவர்த்தி செய்பாங்கிற் படிப்பைச் சோதித்தற்கு வகை செய்வதாயிருக்கும். மாணுக்கரது செயலாற்றலின் மதிப்பீடானது, பாடத்திட்டம், தேர்ச்சிகளின் ஒழுகுநலம், இயல்பான ஆற்றல் கள் என்பவற்றை அளவுகோலாகக் கொண்டு பிள்ளையின் அபிவிருத்திப்படியாக நிகழ்வதை நெறிப் படுத்தும் நோக்கில் அமைந்ததாகும். கணிப்பீட்டை மேற்கொள்வதில் ஆசிரியர்க்கு உதவுமுகமாக, பாடசாலையில் இப்போது வழக்கிலுள்ளவை தனிநபர் மதிப்பீடு, வகுப்புக் கணிப்பீட்டு நடைமுறைகள், பிள்ளையின் சுய கணிப்பீடு, பலவகைக் கற்றல் முறைகளைச் சோதித்தல் என்பன போன்ற நடவடிக்கை முறைகள் செப்பனிடப்பட்டுப் பெருமளவிற் பயன்படுத்தற்கியல் வகையிற் சீர் செய்யப்படும். ஆரம்ப வகுப்புகளிலிருந்து தொடங்கும் மாணுக்கர் கணிப்பீட்டுப் பதிவேடு வடிவமைக்கப்பட்டு அச்சிட்டுப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும். பெறுமதிக் கணிப்புப் பதிவேட்டுத் தரவு உத்தேசத்திலுள்ள மாணுக் செயலாற்றல் வரலாற்றுக் குறிப்பினைத் தயாரித்தற்குப் பயன்படுத்தப்படும்.

பாடசாலைகளினுலும் பெற்றோராலும் மிகுந்த அக்கறை காண்பிக்கப்படும் 5 ஆம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சையானது மாதிரி விஞக்களாலும் தனி முறைப் போதனை மூலமும் தகவல் திணிப்புக்கு இடமளிக்கிறது. இஃது ஆரம்ப மேற்பிரிவுத் தரங்களுக்குப் பொருந்திய படிப்பித்தற் செயற்றிட்டத்தை

நெறிபிறழச் செய்வதோடு முன்னர் விவரித்த ஆரம்ப நிலைப் பாடவிதானத்தின் நோக்கங்களைக் குலைத்துவிடவும் ஏதுவாகிறது. இத்தகைய குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் நோக்கில், 5 ஆம் தரத்தில் உதவிப் பணம் வழங்கும் முறை மாற்றி அமைக்கப்படும்.

## கனிட்ட இடைநிலைப் பாடசாலை (தரங்கள்: 6 முதல் 8 வரை)

12. இந்த மட்டத்திலான பாடவிதானம், மாணுக்கன் ஆரம்ப மட்டத்தில் முயன்றுபெற்ற அடிப்படை அறிவினையும் தேர்ச்சித் திறன்களையும் வலுப்படுத்திக்கொள்ள உதவுவதோடு மேற் கல்விக்கு அத்திவாரமிடுவதாயும் அமையும்; அத்துடன், ஒரு சில தொழில் தொகுதிக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சித் திறன்களைத் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்வதன் மூலம் படிப்படியாக வேலை உலகிற்கு அறிமுகம் செய்யவும் வழிகோலும். இன்னும், சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கிற் பாடசாலை மாவட்ட நிலையிலிருந்து புரிந்து கொள்ளத் தொடங்கித் தேசியத் தேவைகளை உணர்ந்து கொள்ளவும் தூண்டுதல் அளிக்கும். இக் கட்டத்தில் மாணவன் பெறும் குடியியற் பயிற்சி, தேசிய ஒருமைப்பாட்டு நோக்கினை வலியுறுத்துவதாய் விளங்கும்.

13. பாடவிதானம் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்:—

1. முதல் மொழி
2. சமயம்
3. கணிதம்
4. ஆங்கிலம்
5. விஞ்ஞானம்
6. சமூகக் கல்வி
7. அழகியற் கல்வி
8. வாழ்க்கைத் தொழிற்றிறன்கள்
9. உடனலவியலும் உடலியற் கல்வியும்

குடியியற் பயிற்சி, மேற்போந்த பாடங்களுள் ஏற்புடைக் கூறுகளைப் புகுத்துவதன் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

நடைமுறைச் சிங்களம் / தமிழ் மொழியைக் கற்பிக்க விரும்பும் பாடசாலைகள் பத்தாவது பாடமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

## வாழ்க்கைத் தொழிற்றிறன்கள்

14. இப் புதிய பாடம் இப்போதுள்ள பாடவிதானத்திற் காணப்படும் தொழினுணுக்கப் பாடங்களுக்குப் பதிலாக, இக் கட்டத்தில் இடம்பெறும். இப் பாடத்தைப் படிப்பதன் முக்கிய நோக்கங்களாவன:

— வேலையுலகிலே பிள்ளையைப் புகுத்தி அதன் தொடர்பில் நம்பிக்கையுறுதி வாய்ந்த உளப்பாங்கை ஏற்படுத்தல்.

— பொதுவான கருவிகள், உபகரணங்கள் ஆதியனவற்றை உபயோகித்தல் தொடர்பாக ஓரளவு பரிச்சயமும் கைவன்மையும் மாணவனுக்குக் கிட்டும் வகையிற் குறித்த வயது மட்டத்திற்கு ஏற்புடையவையென வகுக்கப்பெற்ற வீட்டு நிலைத் தேர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

— குறித்த சில தொழில்முறை முன்னிலைத் தேர்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்து, குறித்த சில தொழில் தொகுதிகளுக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சிகளில் மாணுக்கர்களை வினைத் திறமைபெறச் செய்தல்.

— நூற்கல்வி நோக்குச்சாரா நெறி படைத்த மாணுக்கனுக்கு, அவன் தன் திறமையினைப் புலப்படுத்த வல்ல முறையிலே பயன்கூர் கல்விச் செயற்பாடுகளுக்கு வகை செய்தன்மையில் செயற்பாட்டு அடிப்படையிலான பாடமொன்றை ஏற்பாடு செய்தல்.

## கனிட்ட இடைநிலை மட்டத்திற் கணிப்பீடு.

15. மாணவனது வினையாற்றல்சார் கணிப்பீடு இரு வழிகளில் மேற்கொள்ளப்படும்:—

அ. கல்விநெறிப்போதான மதிப்பீடு அல்லது செவ்வை நோக்கு நிரல் கொண்டு பாடசாலை நடத்தும் மதிப்பீடு.

ஆ. கல்விநெறி இறுதிப் பரீட்சைகள்

தொடர்ச்சியான மதிப்பீட்டிற்குச் செயன்முறையானதும் பகுத்தறிவுக்கு ஏற்றதுமான சூழ்ச்சை மிக அவசியமானது. மாணுக்கனது வினையாற்றல், பயிற்சிநெறியின் செயற்றினைக் குறிப்பது. ஆதலின் கணிப்

பீடு, கல்விநெறிக் காலத்தே அவ்வப்போது, மேற்கொள்ள வேண்டிய தொடர்ச்சியான பாட நெறிப் போதான மதிப்பீடெனக் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். கல்விநெறிப்போதான மதிப்பீடு, மரபு முறையான பரீட்சை, வகுப்புகளில் நடைபெறும் மதிப்பீட்டை மட்டும் குறிப்பதாகாது. செயல்முறைக்குகந்ததும் பகுத்தறிவுக்கொட்டியதுமான தன்மையில் மாற்றியமைக்கப்படும் கல்வி முறைமை முழுவதும் அளாவிய மாணவர் வினையாற்றல் மதிப்பீட்டையே இது குறிப்பதாகும்.

## தொடர்ச்சியான மதிப்பீடு.

*16.* தொடர்ச்சியான மதிப்பீடானது, எழுத்து, வாய்மொழி, செய்ம்முறை மதிப்பீடு போன்றவற்றை முக்கியமாகக் கொண்ட பல்வகை உத்திகள் இணைந்த ஒரு மாதிரி நியமமாகும். இது மரபு முறையான தவணைப் பரீட்சைகள் மூலம் திருத்திகரமாகக் கணிப்பீட்டிற்கு ஒவ்வாத செயல்முறைப் பாடங்களிலுள்ள கைவினைத் தேர்ச்சித் திறன்களைச் சோதிப்பதற்கு உகந்ததாகும். அத்துடன் மாணுக்கர்களும் ஆசிரியர்களும் இது பின்னூட்டுக்கு வகை செய்வதாய், அவர்களது செயற்றிறனைத் தொடர்ச்சியாக நெறிப்படுத்தற்கு வசதியளிக்கிறது. கணிப்பீட்டின்வழி அளிக்கப்படும் பின்னூட்டுத் தகவல் அதன் செயற்றிறனை மேம்படுத்தற்குப் பிள்ளைக்குத் தேவைப்படும் தகவலைக் கொடுப்பதன் மூலம் அவனது முன்னேற்றத்தைத் தானே நெறிப்படுத்த உதவுகிறது. தொடர்ச்சியான மதிப்பீட்டு முறைமையினைச் செயற்படுத்தற்கியன்ற வழிகாட்டுகைகளும் அறிவுறுத்தல்களும் உருவாக்கப்படும். அத்துடன், மதிப்பீட்டு உத்திகளிலும் நடைமுறைகளிலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பதிவேடுகளைப் பேணும் முறைமை ஒன்று வகுக்கப் பெற்றுப் பாடசாலைகளுக்கு அளிக்கப்படும்.

*17.* கணிப்பீட்டுப் பதிவேட்டுத் தரவு மாணுக்கர் செயற்றிறன் வரலாற்றுக் குறிப்பைத் தயாரித்தற்குப் பயன்படுத்தப்படும். இப் புடைக்காட்சி மாணுக்கரின் செயற்பாடு சார்ந்த பின்வரும் சகல அமிசங்களையும் அடக்கும் வகையில் வடிவமைக்கப்படும்.

## மதிப்பீட்டுத் துறைகள்

*18.* மாணுக்கர் செயற்றிறன் மதிப்பீடு, நூற்கல்விப் பாடங்கள் மட்டில் அமைவதன்று. நூற்கல்விச்சார்பு உள்ளனவும், அல்லனவுமான சகல அமிசங்களும் அளாவிய மாணுக்கர் செயற்றிறன், பாடசாலையிற் சகல தரங்களிலும் தொடர்ச்சியான மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும். இவை பின்வருவனவற்றையடக்கும்:—

— நூற்கல்விப் பாடங்கள்.
— வேலை நெறிப்பட்ட செயற்பாடுகள் (தொழில்முறைப்பாடங்கள், முன்னெறிய வேலை, பொழுது போக்குகள் இன்னபிற)
— இணை – பாடவிதானச் செயற்பாடுகள்.
— (சமுதாயப் பங்கு கோடல், சங்கங்கள், கழகங்கள் இன்ன பிற)
— விளையாட்டுகள்.
— ஆக்கத்திறன் (அழகியற்கலைகள், தொழினுணுக்கம்)

## மதிப்பீட்டுடன் தரத்தையும் நம்பக உறுதியையும் பேணற்கியன்ற காப்பீடுகள்

*19.* வெளிநிலைச் சீராக்கல், மேற்பார்வை ஆகிய தேவைகளைக் கருத்திற் கொண்டு பின்வரும் நடைமுறைகள் கைக்கொள்ளப்படும். பாடசாலைக் கொத்தணி ஒன்றுக்கு, தவணைப் பரீட்சை, அரையாண்டுப் பரீட்சை, ஆண்டிறுதிப் பரீட்சை ஆகியன அக் கொத்தணியிலுள்ள பாடசாலைகளினது பிரதிநிதிகளைக் கொண்ட சபை ஒன்றினுற் பொது அடிப்படையில் நடத்தப்படும். குறித்த ஒரு பாடசாலைக் கொத்தணிக்கு ஒவ்வொரு பாடத்திலும், விரிவான பல்லினப் பரீட்சைகள் வகுக்கப்பெறும்.

*20.* நூற்கல்வி சாராத் துறைகள் சம்பந்தமான மதிப்பீடு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பெறும் நியமங்களை அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்யப்பெற்ற, தரப்படுத்திய கணிப்பீட்டு முறையில் இச் சூழ்ச்சைகள் நம்பக உறுதியைப் பேணுதற்கு ஏற்ற காப்பீடுகளைக் கொண்டு விளங்கும்.

*21.* பல்விடைத் தெரிவு வினுக்களுடன் அமைப்பு வினுக்களும், அவற்றின் நம்பக உறுதியும் புறநோக்கு மெய்ம்மையும் நோக்கிப் பரீட்சித்தற்கு உகந்த மாதிரிகளாகக் கைக்கொள்ளப்படுவது ஊக்கப்படுத்தப்படும். தேசிய ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் கிடைக்கத்தகு வளங்களைக் கொண்டு பாடசாலைக் கொத்தணிகள் பயன்படுத்தற் பொருட்டு வினு வங்கிகளைக் கல்வி அமைச்சு உருவாக்கும். இதன் மூலம், பல்விடைத் தெரிவு வினு, அமைப்பு வினு ஆகிய இருவகையான நம்பக உறுதி வாய்ந்த பரீட்சைச் சாதனங்கள் பாடசாலைகள் அனைத்திற்கும் கிடைக்கத்தகு நிலை உறுதி செய்யப்படும்.

## 8 ஆம் தரப் பரீட்சை.

*22.* 8 ஆம் வகுப்பு முடிவில் அடைவுச் சோதனை நடத்தப்படும். அது மாணுக்கர்களை நெறிப்

பாகுபடுத்தற்கு அமைந்ததன்று. எனினும், பிள்ளைகளின் உளச்சார்புகள் தொடர்பிற் பெற்றோர்க்கு வழி காட்ட உதவும். மாணுக்கர்கள் பொதுப் பாடவிதானத்திலுள்ள பாடங்கள் அனைத்திலும் பரீட்சிக்கப்படுவர். பரீட்சை ஏற்புடையவாறு எழுத்துவழிச் சோதனையோடு தொடர்ச்சியான பயிற்சி நெறியின் மதிப்பீடு கொண்டும் அமையும். உடனலவியல், உடலியற் கல்வி ஆகிய பாடங்களின் சுகாதார உணவுப் போஷாக்குச்சார் அறிவுக் கூறு, விஞ்ஞான வினுத்தாளிலே பரீட்சிக்கப்படும்.

23. மாணுக்கரின் இறுதி முன்னேற்ற அறிக்கை பின்வருவனவற்றைக் கொண்டு விளங்கும்:—

அ. இறுதிப் பரீட்சையிற் பெற்ற தரங்கள்.
(அ, ஆ, இ, ஈ, உ.)

ஆ. தொடர்ச்சியான மதிப்பிட்டிற் பெற்ற தரங்கள்.

இ. இணை — பாடவிதானச் செயற்பாடுகள் தொடர்பிலான செயற்றிறன் கணிப்பீடு.

24. 8 ஆம் வகுப்புப் பரீட்சை பாடசாலைக் கொத்தணி மட்டத்தில் நடாத்தப்படும். இந் நோக்கத்தின் பொருட்டுப் பல கொத்தணிகள் அவை தம் வளங்களை மட்டுப்படுத்தக் கூடியனவாக இருக்கும். முதல் மொழி, கணிதம் ஆகிய பாடங்களின் வினுப் பத்திரங்கள் தேசிய மட்டத்திலே தயாரிக்கப்படும்.

## சிரேட்ட இடைநிலைப் பாடசாலை (தரங்கள்: 9 முதல் 11 வரை)

25. பொதுக் கல்வியின் நோக்கங்களுக்கு, இந்தக் கட்டத்திலும் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படும். கனிட்ட இடைநிலைப் பாடசாலை, மேல் தொடர் கல்விக்கு அத்திவாரம் இட்டதாக அமைய, தேசியச் சான்றிதழ் அளிப்பை உடையதாகத் தீவளாவிய அடிப்படையில் நடத்தப்படும். பொதுக்கல்விச் சான்றிதழ்ப் பரீட்சையை முடிவுநிலையாகக் கொண்ட சிரேட்ட இடைநிலைப் பாடசாலை பெரும்பான்மை மாணவர்களுக்கு இறுதிநிலைப் பண்புடையதாய் அமையும். 'வேலையுலகிற்கு' மாறும் நிலை அணித்தாதலின், இந்த மட்டத்திற் பயிற்றப்படும் தொழினுணுக்கப் பாடங்கள் ஓரளவிற்கு விசேடத்துவமுடையனவாய் விளங்கும். இந்த மட்டத்துக்கு அப்பால் நூலறிவு வகைசார் உயர் கல்வி பெறக் கருதும் மாணுக்கர்களுக்கு, தொடர்ந்துவரும் கட்டங்களில் விசேட துறைப் பயிற்சிக்குத் தயார் செய்ய வல்ல பாடவிதானம் ஏற்பாடு செய்யப்படும்.

26. பாடவிதானம் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்:—

1. முதல்மொழி.
2. சமயம்.
3. கணிதம்.
4. ஆங்கிலம்
5. விஞ்ஞானம்
6. சமூகக் கல்வி
7. அழகியற் கல்வி
8. தொழினுணுக்கப் பாடங்கள்
9. உடனலவியலும் உடலியற் கல்வியும்

கனிட்ட இடைநிலைப் பாடவிதானத்திற் காட்டியவாறு குடியியற் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படும். விரும்பிய பாடசாலைகள் நடைமுறைச் சிங்களம் / தமிழ் மொழியை அழகியற் கல்விக்கு மாற்றுப்பாடமாகச் சேர்துக் கொள்ளலாம்.

## தொழினுணுக்கப் பாடங்கள்

27. வாழ்க்கைத் தொழிற்றிறன்களுக்கு இக் கட்டத்திலும் அழுத்தம் கொடுக்கப்படும் வேளையில், மரவேலை, உலோக வேலை, விவசாயம், மனையியல் போன்ற பொருத்தமான விருப்பத் தெரிவுப் பாடங்கள் மூலம் ஓரளவு விசேட பயிற்சி அளிக்கப்படும். முன்கூட்டியே வாழ்க்கைத் தொழில் திறன்களை நாடுபவர்களுக்குத் தொழினுணுக்கக் கல்வி அதிகார சபையின் கீழ், க.பொ.த. தொழினுணுக்கக் கல்விநெறி பயில்வதற்குள்ள வசதியுள்ளமை காரணமாக, பாடசாலைகளில் வாழ்க்கைத் தொழிற்றிறன்களின் நெறிப்பாட்டுக்கு அழுத்தம் கொடுக்கப்படும். செவ்விதாக நிருவகிக்கப்படுமிடத்து பொதுக் கல்வியானது, மாற்றமுறும் சூழ்நிலைக்கேற்ப இசைவுபடுத்தற்கு வசதி செய்வதாகிய மேலதிக வாய்ப்போடு, வாழ்க்கைத் தொழிலுக்கு வேண்டிய பின்னணிப் பயிற்சியை வழங்கவல்லது என்ற கோட்பாட்டு ரீதியில், தொழினுணுக்கப் பாடங்கள், பொதுக் கல்வியின் ஒரு பாகமாகக் கருதப்படும். எனினும், தொழிற் சந்தையில் மிகுதியாக எதிர்பார்க்கப்படும் பொதுவான தேர்ச்சித் திறன்கள்,

நாட்டங்கள், தகவுகள், ஆள்சார் பண்புகள் என்றின்னவற்றை அபிவிருத்தி செய்யும் அதே வேளையில், வேலையுலகின்பால் மாணுக்கனின் நாட்டத்தை மையப்படுத்த வேண்டியதும் அவசியம் எனக் கருதப் படுகின்றது.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை

28. இது பொதுக் கல்வி அகற்சியின் இறுதியில் இடம்பெறும் தேசியச் சான்றிதழ்ப் பரீட்சை யாகும். இப் பரீட்சை, பாடசாலையிலிருந்து பொதுக் கல்வியின் மேற்படிப்புக்கு நேர்முக நுழைவுக்கான தகுதிகாண் பரீட்சையுமாகும். இத் தொகுதிகாண் தேர்விலே தவறிய மாணவர்கள் 11 ஆம் தரத்தில் ஓராண்டு திரும்பக் கற்பதற்கும் பரீட்சைக்கு இரண்டாம் முறை தோற்றுவதற்கும் அனுமதி அளிக்கப் படுவர். இந்தத் தேர்வுப் பெறுபேறு, குறித்துரைத்த மூன்றும் நிலைப் பயிற்சிநெறிகளுக்குத் தொடர் பான ஏனைய தெரிவு அளவுகோலுடன் இணைந்து கல்லூரிசார் அல்லது ஏனைய மூன்றும் மட்டப் பயிற்சி நெறிக்குரிய தெரிவினைத் தீர்மானிக்கும்.

## பரீட்சைத் திட்டம்

29. பாடங்கள்:—

1. முதல் மொழி
2. கணிதம்
3. ஆங்கிலம்
4. விஞ்ஞானம்
5. சமூகக் கல்வி

தேசிய மட்டத்தில் இப் பாடங்கள் மட்டுமே பரீட்சைத் திணைக்களத்தாற் பரீட்சிக்கப்படும். செயல் முறைத் திறன்களைக் கணிப்பிடுதல் உட்பட,தொடர்பான மதிப்பீட்டின் ஒரு பெருமளவான ஆக்கக்கூறு கொண்ட அழகியற் கற்கைகளும் தொழினுணுக்கப் பாடங்களும் மாவட்ட மட்டத்திற் பரீட்சிக்கப் படும். அத்துடன், மாவட்டங்களுக்கிடையே தரம் உறுதிப்படுத்தப்பட்டுப் பேணிக் காக்கப்படும். நடைமுறைச் சிங்களம்/ தமிழ், மாவட்ட மட்டத்திற் பரீட்சிக்கப்படும்; உடனலவியலும் உடற்கல்வியும் கொத்தணி மட்டத்திற் பரீட்சிக்கப்படும்.

## மாணவர் பெறுபேற்றுப் புடைக்காட்சி

30. மாணவர் ஆளுமை விருத்திப் பதிவேடுகளைப் பாடசாலைகள் பேணும். இவை ஆசிரிய ஆலோச கர்கள் சேகரித்த தகவல்களுடன் மாணவர் பெறுபேற்றுப் புடைக்காட்சிகளையும் கொண்டிருக்கும். 11 ஆம் தர முடிவில் மதிப்பீட்டைப் பதிவு செய்வதற்குப் புடைக்காட்சி அறிக்கையில் ஒரு பக்கம் ஒதுக் கப்படும். பாடவிதானத்திலுள்ள பாடங்கள் யாவற்றினதும் தேர்ச்சி மட்டங்கள் இப் பக்கத்திற் காண பிக்கப்படும். தேசிய மட்டம், மாவட்ட மட்டம், கொத்தணி / பாடசாலை மட்டம் ஆகிய முறைகளிற் பாடங்கள் பரீட்சிக்கப்பட்டதைக் காட்டுவதற்கு மூன்று நிரல்களிற் பாடங்கள் அமையும். வருங்கால வேலை கொள்வோருக்குப் பயன் வழங்கக்கூடிய வேறு தரவுகளையும் இப் புடைக்காட்சி கொண்டிருக்கும்.

31. க.பொ.த. தேர்வின் ஒவ்வொரு பாடத்தினதும் பெறுபேறு அ,ஆ,இ,ஈ,உ என்று ஐந்து அம்ச அளவுத் தரத்திற் காண்பிக்கப்படும். பெறுபேற்றின் உயர்ந்த மட்டத்தை 'அ' எடுத்துக் காட்டும்; வழங்கப்படும் சான்றிதழ் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற தரத்தைக் காண்பிக்கும்.

## ஆங்கிலம் கற்பித்தல்

32. பாடசாலைக்குப் போதியளவு வரவினை நல்கிய மாணவர்கள் இரண்டாவது மொழியாக ஆங் கிலத்தைப் பயன்படுத்துவதிலே திறமை பெற்று அதனுல் ஆங்கிலத்திலே தேர்ச்சியுள்ள ஒருவர் பெறக் கூடிய நன்மைகள் பலவற்றையும் பெறுவதற்கு வாய்ப்பளித்தலே ஆங்கிலத்தைப் பாடசாலைகள் யாவற் றிலும் கற்பித்தலின் நோக்கமாகும். எனினும், இந் நோக்கம் தற்போது நிறைவு பெறவில்லை என்பது இனிது புலனுகின்றது. மூன்றும் தரம் தொடக்கம் பத்தாம் தரம் வரை ஆங்கிலம் கற்பித்தற்குப் பரந் தளவிலான பல ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். பாடசாலைகளில் ஐம்பதாந் தொடராண்டுகளாக ஆங்கிலத்தின் தரம் வீழ்ச்சியடைந்தமை தடுக்கப்படவில்லை. ஆகவே, ஆங்கிலம் கற்பித்தலின் தரத்தை உயர்த்துவதற்குச் செறிவான முயற்சி தேவைப்படுகிறது. இதனை நிறைவேற்றுவதற்கு முந்துரிமை யாகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(அ) மூன்றும் தரத்திலிருந்து ஆங்கிலம் தொடர்ந்தும் கற்பிக்கப்படும்: ஆனால், 6 ஆம் தரத்திலிருந்து ஆங்கிலம் கற்பித்தலுக்குச் செறிந்த வளங்கள் பயன்படுத்தப்படும்.

(ஆ) 3 ஆம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் வரையிலும் ஆங்கிலம் கற்பிக்கும் செயற்றிட்டத்தை ஏலவே கொண்டுள்ள பாடசாலைகளிலே தொடர்ந்தும் ஆங்கிலம் கற்பிக்கப்படும்; மேலும்,இந்த மட்டத்திலும் கற்பித்தலின் தரத்தைச் சீராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(இ) ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பயிற்சிக்குச் சிறப்பான கவனம் செலுத்தப்படும்.

(ஈ) பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பித்தலோடு தொடர்பான பாடநூல்கள் தயாரித்தல், ஏனைய கற்பித்தற் சாதனங்கள், பாடவிதான அபிவிருத்தி வேலை, சேவை முன் ஆசிரியர்ப் பயிற்சி, சேவையிடை ஆசிரியர்ப் பயிற்சி, கணிப்பீடு ஆகிய வேலைகள் யாவற்றையும் ஒருங்கிணைப்பதற்குக் கல்வி அமைச்சிலே தனியான ஆங்கிலக் கல்வி அலகு ஒன்று இடம் பெறும். தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகளுக்குக் கீழே வரும் தொழில்முறை ஆங்கிலப் பயிற்சிநெறிகள் இணைந்த வேலைகளுக்கும் இந்த அலகு உதவி புரியும்.

(உ) தொழினுணுக்க அதிகார சபையின் கீழ் வரும் நிறுவனங்கள், ஏனைய மூன்றும் நிலைக் கல்வி அலகுகள் ஆகியவற்றிலுள்ள தொழில்முறை ஆங்கிலத்தைக் கற்பித்தலுக்குத் தனியான செயற்றிட்டங்கள் செறிவான அடிப்படையில் ஒழுங்கு செய்யப்படும்.

## சமயக் கல்வி

33. பாடசாலையில் இடம்பெறும் சமயக் கல்வியின் அமிசங்கள் யாவற்றையும் ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சமயம் பரீட்சித்தல் முதலியன பற்றிய ஆலோசனைகளுக்கு இக் குழுவினது அறிக்கைக்குப் பொறுத்திருக்க வேண்டியுள்ளது.

## பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

34. வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் பாடசாலைச் சேவைகளின் ஒரு முக்கிய ஆக்கக் கூறாகக் கணிக்கப்படும். பாடசாலை மட்டத்தில் அத்தகைய வேலை இரு அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்: (அ) மாணவர் ஆளுமை, விருத்திப் பதிவேடுகளைப் பேணுதல். (ஆ) தொழிலுக்கு வழிகாட்டல் ஆகியனவாகும்,

(அ) மாணவர் பெறுபேற்று அறிக்கையிற் காலத்துக்குக் காலம் பதிவு செய்யப்பட்ட தகவல்களினதும், ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து பெறப்பட்ட ஏனைய தொடர்பான தகவல்களினதும் அடிப்படையில் மாணவர் ஆளுமை விருத்திப் பதிவேடுகள் அமையும்.

மாணவர்களின் ஆளுமை விருத்தியை அளவிடுதலுக்கு மட்டுமன்றி, அவர்களது நடத்தையின் அடையாளங்களை முன்னதாகவே கண்டு பிடிக்கவும் இத் தகவல்கள் பயன்படுத்தப்படும். பின்னைய விடயத்தில், நேரத்தோடு பரிகார நடவடிக்கைகளை எடுக்கவும் பெற்றோருக்குப் பிறழ்வான நடத்தை பற்றி எடுத்துரைக்கவும் இத் தகவல்கள் பயன்படுத்தப்படும். இவ் விடயத்திற் பெற்றோருடைய ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.

வழிகாட்டலினதும் ஆலோசனை கூறலினதும் இன்னோர் அம்சம் என்னவெனில் மாணவர்களுக்கு உதவுதலும் அவர்களுடைய நாட்டத்தையும் திறமைகளையும் பெற்றோர் தெரிந்து கொள்ள வழி செய்தலும் ஆகும். இதனால் மாணவர்களது விருத்திக்கு மேலதிகமான கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

(ஆ) தொழிலுக்கு வழிகாட்டல் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்:—

(i) பாடசாலைக்கு வெளியேயுள்ள வாழ்க்கையைப் பற்றிய நடைமுறையான அமிசங்களைப் பற்றிப் பொதுவான அறிவை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல்.

(ii) கிடைக்கக்கூடிய தொழில் வாய்ப்புகள் பற்றியதும் வருமான வீச்சுப் பற்றியதுமான குறிப்பான தகவல்களை வழங்குதல்; அத்துடன்

(iii) மாணவர்களது செயற்றிறன், இயல்சக்தி ஆகியன பற்றி யதார்த்தமான

மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்குப் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் உதவுதல்.

35. வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் ஆகியன ஆசிரியர் கல்வியில் முக்கியமான ஓர் ஆக்கக்கூறு ஆகும்; இச் செயற்பாட்டுத் துறையிற் சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகள் வாய்ப்புகளை அளிக்கும். ஓர் இடைக்கால நடவடிக்கையாக வேலைக்களம், கருத்தரங்குகள் ஆகியவை வாயிலாகப் போதிய தொகையான ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். அவர்களது அறிவை மேம்படுத்துவதற்கு:—

(அ) கருத்தரங்குகள், வேலைக்களம் முதலியவை வாயிலாக 'வேலை உலகு' பற்றித் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

(ஆ) ஏனைய வேலைத் துறைகளுக்குக் குறுகியகால விடுவிப்புக்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.

36. வழி காட்டலையும் ஆலோசனை வழங்கலையும் பொறுப்பேற்கும் ஆசிரியர்களுக்குத் தகுந்த வெகுமதி வழங்குவதற்கான சூழ்ச்சம் ஒன்று உருவாக்கப்படும்.

37. பாடசாலைக் கொத்தணி ஒவ்வொன்றினதும் மூலாதாரப் பாடசாலையிலே தாபிக்கப்பட்டுள்ள வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் அலகுடன், வழிகாட்டல், ஆலோசனை கூறல் ஆகியவற்றின் சேவைகள் கொத்தணி ஒன்றின் அடிப்படையில் அமைக்கப்படும்.

38. இவ்வாறு தாபிக்கப்படும் அலகுகளுக்குத் தொழில் வழங்கல், தொழில் வழங்கலும் மனித வலுப் பயன்பாடும் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் ஏனைய முகவர்களுடன் கல்வி அமைச்சும் சேர்ந்து தேவையான தகவல்களை வழங்கும். வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் ஆகியவற்றின் செயற் றிட்டத்தை இயக்கவும் இணைக்கவும் கல்வி அமைச்சில் ஒரு தனியான அலகு தாபிக்கப்படும்.

## இணை—பாடவிதான நடவடிக்கைகள்

39. விதித்துரைக்கப்பட்ட பாடவிதானத்தில், வரையறுத்து ஒப்புக்கொண்ட பாடங்களாக நிரற்படுத்தப்படாதிருந்த போதிலும், இணை — பாடவிதான நடவடிக்கைகள் பாடசாலைச் செயற் றிட்டத்தின் ஒரு பகுதியாக அமையும். எனினும், அவை கல்வியின் மிக முக்கியமான அம்சங்களுக்குத் துணைபுரிகின்றன. பிள்ளையின் அனுபவத்தை வளப்படுத்தலிலும், அவனது திறன்களைக் கண்டறி வதற்குரிய வாய்ப்புகளை அளிப்பதிலும் சில இணை — பாடவிதான நடவடிக்கைகள் முறையான பாடங் களை விடவும், பாரிய, நீடித்து நிலவுகின்ற தாக்கத்தினைக் கொண்டிருக்கலாம். இணை — பாடவிதான நடவடிக்கைகளின் பெறுமதி பெரிதும் அங்கீகரிக்கப்பட்டால், தற்போதிலும் கூடிய எண்ணிக்கை யிலான மாணவர்கள் இத்தகைய நடவடிக்கைகளிற் பங்கு கொள்வதற்கு வாய்ப்பளித்தல் அவசியமான தாகும். எவ்வாறாயினும், இணை — பாடவிதான நடவடிக்கைகள் பிரதானமாகப் பெரிய பாடசாலை களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், இணை — பாடவிதான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதே வேளையில், மாணவர் சமுதாயத்தின் அதிகரித்த பங்குபற்றுதலை உறுதிப்படுத்துதற்குக் கூடிய கவனமும் எடுக்கப்படும்.

40. இணை — பாடவிதான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்கு மூன்று பிரதான வகுதிகள் அங்கீகரிக்கப்படும்.

அவையாவன :—

(அ) விளையாட்டுகளும் உடற் பயிற்சி விளையாட்டுகளும்

(ஆ) கடெற்றிங், சாரணியம் முதலியன; அத்துடன்

(இ) பொழுதுபோக்குக் கழகங்கள் / முன்னெறியக் கழகங்கள்.

பிள்ளையின் விருத்தி, கல்வி ஆகியவற்றில் இவ் வகுதிகள் ஒவ்வொன்றும் முக்கியமான ஒரு பங்கினைச் செலுத்தலாம்.

41. முதல் வகுதி நடவடிக்கைகள், அணி விளையாட்டுகள், உடற்பயிற்சி விளையாட்டுகள் ஆகிய வற்றுடன் இணைந்த பெறுமானங்களை உள்ளத்திற் பதிய வைப்பதற்கு உதவுவதுடன், ஒரு முக்கியமான உடற் பயிற்சி நடவடிக்கையையும் உள்ளடக்கும்.

42. வெளிக்கள ஒழுக்காற்றுச் சேவைக்கு ஒரு பிள்ளையைத் தயார்செய்வது இரண்டாவது வகுதியின் பிரதான பங்காகும்.

43. பொழுதுபோக்கு ஆர்வங்களின் ஊடாகச் சிறப்பான அறிவையும் திறமைகளையும் பிள்ளைகள் பெறுவதற்கு மூன்றாவது வகுதி நடவடிக்கைகள் உதவும். ஒரு பிள்ளையின் வாழ்க்கைத் தொழிலைத்

தீர்மானித்தற்குரிய அபிவிருத்திக்கு அல்லது அப் பிள்ளை சமூகத்திற்குப் பெறுமதி வாய்ந்த பங்களிப் பினைச் செய்ய உதவுவதற்கு இவை இட்டுச் செல்லும்.

44. நோக்கு, உள்ளடக்கம் ஆகிய வகையில் இணை – பாடவிதான நடவடிக்கைகளுடன் தொடர் பான செயற்றிட்டங்களை விரிவாக்கும் வகையில், கல்வி அமைச்சில் இவ் வகுதிகளுடன் நேரொத்த மூன்று அலகுகள் நிறுவப்படும். இவை போன்ற அலகுகளை மாவட்டக் கல்வித் திணைக்களங்களும் பாடசாலைக் கொத்தணிகளும் நிறுவும்.

45. பொருத்தமான அதிகார சபைகளின் இணக்கத்துடன், கடெற்றிங், சாரணியம் ஆகிய செயற் றிட்டங்களை விரிவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந் நடவடிக்கைகளைக் கையாளுவதிலே திறமை பெறுவதற்கு ஆசிரியர் கல்விச் செயற்றிட்டத்தின் ஊடாக அதிகமான ஆசிரியர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

46. பாடசாலைகளிற் பொழுதுபோக்குக் குழுக்கள் அமைத்தல், கீழ்க்காணும் வகையில் ஊக்குவிக் கப்படும்:–

(அ) பொருத்தமான பிரசுரங்களைப் பாடசாலையிலே பெற வசதி செய்தல்,
(ஆ) பொழுதுபோக்குக் கழகங்கள் தொடர்பான செய்திக் கடிதங்களை வெளியிட உதவுதல்,
(இ) கல்வி அமைச்சின் தலையீட்டின் ஊடாக, தேவையான பொருள்களைக் குறைந்த விலையிற் பெற வழிவகுத்தல். உ – ம்: பாடசாலைத் தேவைகளைத் தொகையாகக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

47. கல்லூரி மட்டப் பாடசாலைகளிலே சூழற் பாதுகாப்பு, வலுப்பாவனை முதலியவற்றுடன் சம்பந்தமான செயற்றிட்டக் கழகங்களை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந் நோக்கிற்குக் கல்வி அமைச்சின் வெளிக்களக் கற்கை நிலையச் செயற்றிட்டம் உறுதிப்படுத்தப்பட்டுப் பயன்படுத்தப்படும்.

48. பாரிய அளவிலான அலகானது நல்வாய்ப்பை நல்குமாதலால், பாடசாலைக் கொத்தணிகளின் அமைப்பு, இணை – பாடவிதான முயற்சிகளின் விருத்திக்கும் வளத்துக்கும் உதவும். இது தவிர, பாட சாலைக் கொத்தணிகளின் கீழான இணை – பாடவிதான நடவடிக்கைகளின் வாய்ப்பு, தனிப்பாடசாலை களின் கீழ் உள்ளதைக் காட்டிலும் விரிவாக அமையும்.

## 'வேலை உலகுக்கு' நிலைமாறுதல்.

49. மாணவன் பாடசாலையிலிருந்து வேலைக்கு நிலைமாறுகின்றபோது, அம் மாணவனுக்குத் தொழில்கள் தொடர்பான தகவல்கள், வேலை அனுபவ வாய்ப்புகள் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் கல்விமுறைமைக்கு உதவலாம். இதன் விளைவாக, கிடைக்கப் பெறுகின்ற வேலை வகைகள் பற்றியும் உண்மையான வேலை நிலைமைகள் பற்றியும் மாணவன் யதார்த்தமான எதிர்பார்ப்புகளை உடையவ னுவான். கல்வி அமைச்சும், தேசிய இளைஞர் சேவை மன்றமும் ஒன்றிணைந்து வேலை அனுபவச் செயற் றிட்டங்களைத் தயாரித்து அவற்றின் அமுலாக்கத்துக்குரிய பொறிமுறையை நிறுவும். இதனுடன், சமூக சேவை அமிசங்களை உள்ளடக்கும் வகையில், கடெற்றிங், சாரணியம், வழிகாட்டல் ஆகியன விரி வாக்கப்பட்டுப் பெரிதாக்கப்படும்.

50. உயர் கல்வி நிறுவனங்களின் அல்லது பொதுத் துறைத் தொழில் மார்க்கங்களின் நுழைவுக்கு வேலை அனுபவச் செயற்றிட்டத்திற் பங்குகொள்ளுதல் மேலதிக தகைமையாக அங்கீகரிக்கப்படும்.

## பாடசாலைகளின் அமைப்பு முறையும் நிருவாகமும்.

51. இலங்கைத் தீவிலே ஏறத்தாழ 9,500 பாடசாலைகள் உள்ளன. ஒவ்வொரு பிள்ளையும் தனது அயலிலேயே பாடசாலைக்குச் சென்று படித்தற்கு ஏற்றவாறு, இப் பாடசாலைகள் போதியாங்கு பரவலாகவும் உள்ளன. அன்றியும், ஒரு மத்திய நிலையத்திலே திட்டமிடப்பட்ட பொதுவான பாட விதானம் இப் பாடசாலைகள் யாவற்றிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. எவ்வாறாயினும், கல்வியின் தரத்திலே பாடசாலைகளுக்கிடையிலும் மாவட்டங்களுக்கிடையிலும் பிரதானமான ஒப்புரவின்மைகள் காணப்படுகின்றன. அன்றியும் போதனையின் பண்பிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

52. பெரும்பான்மையும் அரசின் வசமாயுள்ள ஒரு கல்வி முறைமையிலே அரசிற்குக் கிடைக்கக் கூடிய மட்டுப்பட்ட மூலவளங்களைத் தக்கவாறு பகுத்தளித்து இத் தீவகத்தின் எல்லாப் பாகங்களிலும் கல்வி வசதியளிப்பதில் ஒப்புரவான தரங்களைப் பேணுதற்கேற்றதும் பகுத்தறிவுக் கெட்டியதுமான ஒரு பாடசாலை முறைமையை நிறுவுவது சாத்தியமேயாம். இற்றைப் போது நிலவுகின்ற முறைமை யிலோ, இந்த 9,500 பாடசாலைகளும் தத்தம் கல்வித் தரங்களிலே பரக்க வேறுபடும் மட்டங்களிலே,

அரசின் வசமுள்ள மட்டுப்பட்ட மூலவளங்களுக்காகவும், செல்வமிக்க பெற்றோரின் ஆதரவுக்காகவும் போட்டியிடுகின்ற தனித்தனி அலகுகளாக இயங்குதற்குத் தூண்டப்படுகின்றன. இவ்வாற்றற் சிறு தொகையினவான பெரும் பாடசாலைகள் தொடர்ந்தும் 'வளங் கூர்வனவாக' இருப்ப, பெருந்தொகை யினவான சிறு பாடசாலைகள் 'வறுமை கூர்வனவாக' இருத்தலால் இவ்விரு வகைப் பாடசாலைகளுக் கிடையேயும் மனித, மூலவள அசமநிலை அதிகரித்துக் கொண்டே போகின்ற ஒரு நிலைமை நீடிக்கிறது.

53. ஆதலின், பாடசாலை முறைமையிலேயுள்ள இக் குறைபாடுகளினைத் தீர்க்கும் பொருட்டும், குறிப்பாகப் பின்வரும் இலக்குகள் எய்தற் பொருட்டும், கீழ் விவரிக்கப்படுகின்ற நடவடிக்கைகளைக் கைக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

(அ) கல்வி வசதிகளை அளிப்பதில் இன்று நிலவுகின்ற ஒப்புரவின்மைகளைக் குறைத்தல்.

(ஆ) பாடசாலை அதிபர் வகிக்கின்ற அச்சாணியன்ன நிலையினை அங்கீகரித்துத் தகைமை கூடிய ஆளணி வாயிலாகப் பாடசாலைகள் முகாமிக்கப்படுதலைச் சாத்தியமாக்குதல்.

(இ) ஆகவுஞ் சிறிய பாடசாலையுமே ஒரு தொகுதியில் இடம் பெறுதற்கு வாய்ப்பளித்து அத் தொகுதியின் திரண்ட மூலவளங்கொண்டு அத் தொகுதியிற் சேர்த்துள்ள பாடசாலைகள் அனைத்துக்கும், விலை மிக்க வசதிகளும் சேவைகளும் கிடைக்குமாறு வகைசெய்து அவ்வழி, வறியரும் செல்வருமான பெற்றோர் யாவரும் தத்தம் பிள்ளைகளின் கல்விக் காகத் தமக்கு அயலேயுள்ள பாடசாலைகளை எதிர் நோக்கியிருக்கத் தக்கவாறு ஊக்க மளித்தல்.

## பாடசாலைக் கொத்தணிகள்.

54. பொதுவாக வரையறுக்கப்பட்ட ஒரு புவியியற் புலத்திலே உள்ள பாடசாலைகள் ஒரு கொத் தணியாகத் தொகுக்கப்படும். நல்லதோர் அமைப்பு முறைமையையும் முகாமிப்பையும் அபிவிருத்தியை யும் உருவாக்குவதே இதன் நோக்கம். இதனல், அரசு, சமுதாயம் ஆகிய இரண்டினதும் மூலவளங்களைத் திறம்படப் பயன்படுத்துவது சாத்தியமாகும். ஒவ்வொரு கொத்தணியும் அது சேவை செய்தற்குரிய முழுப் புலத்தினதும் கல்வித் தேவைகளை நிறைவேற்றும் வகையிலே தனியொரு நிருவாகக் கூறாக இயங்கற்பாலது. ஒவ்வொரு கொத்தணியும் தனியோர் அமைப்பு அலகு என்ற அடிப்படையிலேதான், மாணவர்களை அனுமதித்தல், வழங்கீடுகளை வசப்படுத்தல், மூலதனஞ் செலவிடுதல், ஆசிரியர்களைக் குறித்தொதுக்கல் ஆகியன எல்லாம் நடைபெறும். இவ்வழி, பாடசாலை முறைமையின் அபிவிருத்தியை யும் அமைப்பு முறையையும் திட்டமிட்டு இனிமேல் நிருவகித்தற்குரிய ஆகவுஞ் சிறிய அலகாக இனி மேல் இருத்தற் பாலது பாடசாலைக் கொத்தணியேயாம்.

55. இவ்வாறு பாடசாலைகள் கொத்தணிகளாகத் தொகுக்கப்படுங்கால், வட்டாரக் கல்வி அலுவலர் வாயிலாகப் பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் முறை ஒழிந்துவிடும். ஒரு பாடசாலைக் கொத்தணியிலே மொத்தமாக மாணவர்களின் பதிவுத் தொகை ஏறத்தாழ 3,000—5,000 வரை யாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாணவர் தொகையில் ஏறத்தாழ 90 சதவீதத்தினரை இப் பாடசாலைக் கொத்தணி முறையிற் சேர்த்துக் கொள்ளலாமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மிகப் பெரிய பாடசாலைகள் சிலவும், தனிப்பட்ட சிறு பாடசாலைகள் சிலவுமே இம் முறையில் அடங்கா திருக்கும்.

56. ஒவ்வொரு கொத்தணியிலும் பற்பல ஆரம்பப் பாடசாலைகளும் பல இடைநிலைப் பாடசாலை களும் அடங்கியிருக்கும். இவற்றோடு, கல்லூரித் தரத்திலான பாடசாலைகளும் அதில் இடம் பெற்றி ருக்கும். கிடைக்கத்தக்க மூலவளங்களைக் கொண்டு, இயன்ற மட்டும் சிறந்த கல்வி வசதியைச் சமு தாயத்துக்கு அளிக்கத்தக்கவாறு, வெவ்வேறு வகையான பாடசாலைகளின் எண்ணிக்கையும், வகுப்புத் தரங்களும் மொழிவழிக் கல்வி நெறிகளும் அக் கொத்தணியில் இடம் பெற்றிருக்கும். கொத்தணியில் இணைந்த ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள பிள்ளைகளின் பெற்றோர் அனைவரும் தத்தம் பிள்ளைகளுக்குக் கொத்தணியின் மொத்த மூலவளங்கள் யாவும் கூட்டாக வாய்த்துள என்று கருதுமாறு தூண்டப் படுவர்.

57. பாடசாலைக் கொத்தணிகள் மேன்மேலும் பாரிய பொறுப்புக்களைத் தாங்கிக் கொள்ளல் வேண்டும்; கொத்தணியின் முயற்சிகளை முகாமிப்பதிலே கூடிய அதிகாரத்தை வகித்தலும் வேண்டும். இவற்றுக்கு வேண்டிய தன்னுறுதியை அப் பாடசாலைக் கொத்தணிகள் எய்தும் வகையில், அவற்றுக்கு ஊக்கமளிக்கப்படும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## மூலாதாரப் பாடசாலை

58. கொத்தணியில் இயல்பாகவே நடுநாயகமாக விளங்கத்தக்கதும் அல்லது அந் நிலையினை வகித்தற்கு வேண்டும் இயல்திறனை உடையதும், இடைநிலை வகுப்புக்களைக் கொண்டதுமான பெரும் பாடசாலையே மூலாதாரப் பாடசாலையெனக் குறிப்பிடப்படும்.

59. ஒவ்வொரு கொத்தணியிலுமுள்ள மூலாதாரப் பாடசாலையானது சிறந்த பரிசோதனைச் சாலை, வேலைக்களம், நூலகம், செவிப்புல — கட்புலக் கல்வி வசதிகள், இணை — பாடவிதானப் பயிற்சி வாய்ப்புகள் எனுமிவை பொருந்தியிருக்குமாறு அபிவிருத்தி செய்யப்படும். கொத்தணியிலுள்ள பிற பாடசாலைகளுக்கு இவ் வசதிகளிற் பங்கு கொள்ளும் உரிமை உண்டு. இவ்வாற்றால், சிறப்பாற்றலுள்ள ஆசிரியர்களும் விலைமிக்க உபகரணங்களும் பிற வசதிகளும் வேண்டியாங்கு பயன்படுத்தப்படாமையையும் அநாவசியமாகப் பெருக்கமடைகின்றமையையும் குறைத்து, உள்ள மூலவளங்களை உத்தமமாகப் பயன்படுத்துவதே நோக்கமாகும். பொதுவாக, கொத்தணியின் 'மடுவிற்கே' உபகரணங்கள் சொந்தமாக இருந்தாலும், அக் கொத்தணியிலுள்ள பிற பாடசாலைகளுக்கும் அவை கிடைக்கத் தக்கனவே. மேலும், மூலாதாரப் பாடசாலையின் நூலகத்திலும், கொத்தணியின் பிற நூலகங்களிலும் உள்ள புத்தகங்களைக் கொத்தணிப் பாடசாலைகள் அனைத்துக்கும் வழங்கத் தக்கவாறு, சுற்றோட்டத் திட்டமொன்றை மூலாதாரப் பாடசாலை வகுத்தமைக்கும். அன்றியும், கொத்தணி முழுவதற்கும் பயன்படுத்தற்காக, மூலாதாரப் பாடசாலை, குறைநிரப்பு நூல்கள் யாத்தலைத் தானே மேற்கொள்வதோடு, போதனைத் துணைக் கருவிகளையும் இயன்ற விடத்தெல்லாம் அது விருத்தி செய்யும்.

60. மூலாதாரப் பாடசாலையே கொத்தணிக்கு இயல்பான நடுநாயகமாகவும், அமைப்பு மையமாகவும் இயங்குமாதலின், அதன் அதிபரே கொத்தணிக்கும் நிருவாகத் தலைவராக இருப்பார். கொத்தணியிலுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு அதிபர் இருப்பாராதலின், இந் நிருவாகத் தலைவர், கொத்தணி அதிபர் எனப் பெயர் பெறுவர். இப் பணியை ஆற்றுதற்கு உதவியாக, மூலாதாரப் பாடசாலையிலே மேலதிகமான அலுவலக இட வசதியும் பணியணியும் இருக்கும். கொத்தணியின் நிருவாகத்தைக் கவனித்தற்கும், கொத்தணிப் பாடசாலைகளின் கல்வியை மேற்பார்வை செய்தற்கும் போதுமான நேர வசதியைக் கொத்தணி அதிபர்களுக்கு அளிக்குமுகமாக மூலாதாரப் பாடசாலைக்கு ஒரு மேலதிக அதிபரும் நியமிக்கப்படுவர்.

61. கொத்தணி அதிபர் மூலாதாரப் பாடசாலையைத் தமது நிருவாக மையமாகக் கொண்டு, பாடசாலைக் கொத்தணிக்குத் தலைவராகச் செயற்படுவர். கொத்தணிப் பாடசாலைகளிற் கல்வி நிருவாகத்துக்கும் மேற்பார்வைக்கும் அவரே மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்குப் பொறுப்புடையராவர். அவர் முழுக் கொத்தணியின் அபிவிருத்திக்கும் திட்டமிடுவதோடு, கொத்தணியின் சார்பு நோக்கில் ஒவ்வொரு பாடசாலையின் பலமும் பணியும் ஈதெனக் காண்பர். கொத்தணிப் பாடசாலைகளிடையே ஆசிரியர்களை ஆற்றுப்படுத்தலும், அவர் கடமையாகும். கொத்தணியின் அகத்தே பாடவிதானச் செயற்றிட்டங்களையும் இணை—பாடவிதானச் செயற்றிட்டங்களையும் வகுத்தமைத்து மேற்பார்வை செய்தலும், வசதிகளையும் உபகரணங்களையும் ஒழுங்காகவும் தேவைக்கேற்றவாறும் பங்கிட்டளித்தலும் அவர் பணியாகும். முழுக் கொத்தணிக்கும் அவரே விநியோகங்களை மேற்கொள்வர். கொத்தணிக்குரிய வசதிக் கட்டண வரவு செலவுத் திட்டத்தையும் அவரே தீட்டுவர். கொத்தணியினது முதல்வர் என்ற வகையிலே அவர் தமது கடமைகளை நிறைவேற்றுங்கால், கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சுதந்திரத்தைப் போற்றுபவர் என்பதை உரியவாறு மதித்தும் பொதுக் குறிக்கோள்களை அடைதற்கு வேண்டிய ஒத்துழைப்பைத் திரட்ட வல்ல தலைமைத் திறன் கொண்டே இசைவாக நல்லுறவு பேணிக் கொத்தணியை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை உணர்ந்தும் ஒழுகக் கடவர். ஆதலின், ஒரு கொத்தணியில் அடங்கியுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் அக் கொத்தணி ஒரு தனி அலகாக இயங்குதற்கு ஏற்புடையதாகத் தத்தம் பாடசாலைகளின் நிருவாகக் கட்டுப்பாட்டைத் தம்பால் வைத்திருப்பர்.

62. கொத்தணி அதிபர், கொத்தணிமீது தமக்குள்ள முகாமிப்பு அதிகாரத்தை, தனித்தனிப் பாடசாலைகளைப் பொறுத்தமட்டில், மாணவர் ஒழுக்காறு, பாடசாலை நிதி, பாடசாலைச் செயற்றிட்டங்கள் எனுமிவை சம்பந்தமாக, உரியார் மாட்டு உரியவாறு ஒப்படைப்பர். கொத்தணிக்கும் கொத்தணியிலிருந்தும் ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்வதில், மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கொத்தணி அதிபரை உசாவுதல் வேண்டும். ஆசிரியர்களின் சம்பளவேற்றம் பற்றி விதந்துரைத்தற்கும் சிறு தண்டங்களை விதந்துரைத்தற்கும் கொத்தணி அதிபருக்கு அதிகாரம் உண்டு. வசதிக் கட்டணங்களைப் பயன்படுத்துவது பற்றியும் அவருக்கு அதிகாரம் உண்டு.

## கொத்தணி அடிப்படையில் விசேட செயற்பாடுகள்

63. பாடவிதான அல்லது இணை—பாடவிதான முயற்சிகளின் ஓர் அம்சமாக, சமுதாய வழிப் பட்ட முன்னெறியங்களில் மாணவர்கள் ஈடுபடும்போது, அவற்றைக் கொத்தணியின் அடிப்படையிலேயே வகுத்தமைக்கலாம். தேசிய சேவை முயற்சிகளையும் அதே அடிப்படையில் வகுத்தமைக்கலாம். ஒரு பாடசாலைக் கொத்தணிக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளைப் பொருத்தமானவிடத்து, அக் கொத்தணியைச் சுற்றியுள்ள சமுதாயத்துக்கும் ஏற்றவாறு கிடைக்கும்படி செய்யலாம்.

## பாடசாலைக் கொத்தணிச் சபை

64. ஒவ்வொரு பாடசாலைக் கொத்தணிக்கும் ஆரம்பத்திலே ஆய்வுரைப்பணி சார்ந்த ஒரு சபை இருக்கும். அது பாடசாலைக் கொத்தணிச் சபை எனப்படும். அது கொத்தணி அதிபரைத் தவிசாளராகக் கொண்டதாய், பாடசாலைகளின் அதிபர்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பிரதி நிதிகளையும் உறுப்பினராகக் கொண்டிருக்கும். கல்வி முயற்சிகள் பற்றித் திட்டமிடலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும் சம்பந்தமாக, இச் சபை ஆய்வுரை வழங்கும். பாடசாலைக் கொத்தணிச் சபைகள் வளர்ந்து வர, இச் சபையின் அதிகாரமும் கூடும். ஒரு கொத்தணியில் அடங்கியுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமொன்று இருக்கலாம். பழைய மாணவர் சங்கமும் தொடர்ந்து இயங்கலாம்.

## முன்னோடிக் கட்டம்

65. இத்துணைப் பரிமாணமுள்ள ஓர் அபிவிருத்தி, இயக்கப்பாட்டு விவரங்களையெல்லாம் ஒரு தலத்திலே நிறைவேற்றிப் பார்க்கத்தக்க முன்னோடிக் கட்டம் அவசியமாகும். ஆதலின், பல்வேறு நிலைமைகளையும் நிலைவரங்களையும் பிரதிபலிக்கத் தக்க 50 பாடசாலைக் கொத்தணிகள் வரை முன்னோடி வகைகளாகத் தேர்ந்தெடுக்கப்படும். இவற்றிலிருந்து பெறும் அனுபவத்தைக் கொண்டு படிமுறையான ஒரு செயற்றிட்டத்துக்கிணங்க இச் சூழ்ச்சத்தை விரிவாக்கற்கு வேண்டிய விரிவான வழிப்படுநெறிகள் வகுக்கப்படும்.

## புறம்பான ஏற்பாடுகள்

### ஒற்றைநிலைப் பாடசாலைகள்

66. பொதுப் பாடசாலைகளிற் சில, அவற்றின் பருமனும் அவற்றின் வசத்துள்ள மூலதனங்களும் காரணமாக, பாடசாலைக் கொத்தணி முறையில் இடம் பெற மாட்டா. கொத்தணிகளாகப் பிற பாடசாலைகளோடு தொகுத்தற்கு அமையாவகையில் அவை ஏற்கனவே மிகப் பெரியனவாக உள. அன்றியும், அவை மூலவளங்கள் மிகக் குறைவாய், சாதாரண பாடசாலைகளிலும் பார்க்க மிகக் குறைந்த அரசாங்க உதவியோடு தத்தம் அலுவல்களை முகாமிக்கவல்லவை. மேன்மேலும் தன்னுறுதி படைத்தனவாதற்கு வேண்டிய வாய்ப்பு அவற்றுக்கு அளிக்கப்படும். பாடசாலைக்கு மாணவரை அனுமதிக்கும் விடயத்திலும், பிரபல பூட்கை விடயங்களிலும், அமைச்சின் பணிப்புகளுக்கு அமைந்தே அவை தொடர்ந்து ஒழுகற்பாலன. பெருந்தொகையான மாணவர்கள் இப் பாடசாலைகளில் ஏற்கனவே இடம் பெற்றிருப்பதால், விரிவுக்கு ஆங்கு இடமளிக்கப்படமாட்டாது. மாணவர் தொகை 1981 ஆம் ஆண்டு மட்டத்திலே நிலை நிறுத்தப்படும். அவசியம் ஏற்பட்டால், தக்க பரிசீலனைக்குப்பின், மாணவர் தொகை குறைக்கப்படினும் படும். இப் பாடசாலைகளிலே மூலதன ஆக்க வேலைகள் செய்தற்கு அரசின் மூலவளங்களை, மூலதன முதலீடு தேவைப்படுகின்ற பாடசாலைக் கொத்தணிகளுக்குக் கூடிய அளவாகத் திருப்பி விடுவதற்கு வழியுண்டாகும்.

67. பாடசாலைப் பணியணியாளரின் சம்பளக் கொடுப்பனவுகளைத் தீர்க்குமுகமாக, மாணவர்கள் பதிவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டு, கணிக்கப்பட்ட நன்கொடையை ஒற்றை நிலைப் பாடசாலைகளுக்கு அரசு வழங்கும். இப் பாடசாலைகள் தம் வலதாகவே மேலதிக நிதியங்களைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும். எனினும், பாடசாலைக்கு மாணுக்கரை அனுமதிப்பதற்கு நன்கொடை கோருதல் அனுமதிக்கப்படமாட்டாது.

68. ஒற்றை நிலைப் பாடசாலை ஒவ்வொன்றுக்கும் ஒரு முகாமிப்புச் சபை இருக்கும். இச் சபை பின்வருவோரைக் கொண்டிருக்கும்:—

(அ) அதிபர்,

(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கத்தின் பிரதி நிதிகள் முதலியோர்,

(இ) கல்வி அமைச்சரின் நியமத்தர்கள்

பாடசாலையின் அதிபரே தவிசாளராக இருப்பர். கல்வி முயற்சிகள் பற்றித் திட்டமிடலும், அவற்றைச் செயற்படுத்தலும் இச் சபையின் பணியாகும்.

## சேய்மைப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள்

69. சேய்மைப் பிரதேசங்களிலே ஒன்றுக்கொன்று வெகு தொலைவாயும் தனித்தும் அமைந்துள்ள பாடசாலைகளை, நடுநாயகமாக விளங்குகின்ற ஒரு நிலைக்களனைச் சுற்றித் தொகுத்தல் அரிதாம், ஆதலின், இவை தனிவேறான அலகுகளாக நிருவகிக்கப்படும். அவற்றைக் கொத்தணிகளாகத் தொகுப்பதால் விளையும் நன்மைகளை எஞ்ஞான்றும் உளத்துக்கொண்டு, அப் பாடசாலைகளின் தனிவேறான அலகு நிலை காலத்துக்குக் காலம் மீளாயப்படும்.

70. ஒரு கொத்தணியிலுள்ள பாடசாலைகளிற் பெரும்பாலானவற்றிலே வழங்குகின்ற போதனை மொழியன்றிப் பிறிது மொழி வழங்கும் பாடசாலைகளும் அக் கொத்தணியில் இடம் பெறலாம். இத்தகைய பாடசாலைகளைக் கொத்தணிகளாகத் தொகுக்கும் போது, அச் சிறுபான்மைப் பாடசாலைகளின் தனித்தன்மையையும் பண்பையும் பேணுதல் அவசியம் என்பது அங்கீகரிக்கப்படும்.

71. பெருந்தோட்டப் பாடசாலைகளும் மேற்கூறிய விசேட ஏற்பாட்டுக்கமையக் கொத்தணித் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படும்.

## தனியார் பாடசாலைகள்

72. அரசின் பாடசாலை முறைமைக்கும் புறம்பாகத் தனியார் நிறுவனங்களாக எஞ்சி நிற்கும் பாடசாலைகளுக்கும் இந் நாட்டின் கல்வி அபிவிருத்தியிற் பங்கு உண்டு. தேசியப் பூட்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, அவையும் கல்வி வளர்ச்சியிற் கொள்ளத் தக்கவாறு அவற்றுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கப்படும்.

73. தனியார் பாடசாலைகள் அனைத்தும் தேசியப் பூட்கைக்கு ஒத்திணங்கி ஒழுகுதல் வேண்டும்.

74. இப் பாடசாலைகள் கணக்காய்ந்த ஆண்டுக் கணக்குக் கூற்றுகளை வெளியிடற் பாலன. இத் தேவைப்பாட்டைச் செயற்படுத்தும் பொருட்டு, பொதுவார் கம்பனிகளுக்குப் பொருந்துவது போன்ற சட்ட ஏற்பாடு விதிக்கப்படும்.

75. ஆசிரியர்களுக்குச் சேவை முன்னிலைப் பயிற்சியும் சேவையிடைப் பயிற்சியும் அளிப்பதன் வாயிலாகத் தனியார் பாடசாலைகளுக்கு உதவி வழங்கப்படும்.

76. கட்டணம் அறவிடாத் தனியார் பாடசாலைகளுக்கு, அங்கீகரித்த ஆசிரியர் பதவிக்கோப்புச் சம்பளம் கொடுக்கும் பொருட்டு, மானிய நிதியுதவி வழங்கப்படும். ஆசிரியர்களின் இந்தப் பதவிக் கோப்பு 1981 ஆம் ஆண்டு மாணுக்கரை அடிப்படையாகக் கொண்ட பதவிக் கோப்பினை விஞ்சலாகாது. இந்தப் பதவிக் கோப்பை எத்துணையாயினும் கூட்டுதற்கு, கல்வி அமைச்சின் ஒருப்பாடு தேவைப்படும்.

77. பதிவு செய்யப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு—அதாவது, உதவி பெறும் பாடசாலைகள் இலவசக் கல்வித் திட்டத்திலே சேர்ந்ததைத் தொடர்ந்து, உதவி பெறும் பாடசாலைகள் பற்றிய விசேட ஏற்பாட்டு விதிக்கமைய ஒழுங்கு விதிகள் வலுப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு – பின்வருவனவற்றுள் யாதுமொன்றைச் செய்தற்கு விண்ணப்பஞ் செய்ய வாய்ப்பு அளிக்கப்படும்:—

(அ) தேசியப் பாடசாலைகள் முறைமையிற் சேர்தல் அல்லது

(ஆ) கட்டணம் அறவிடாத உதவிபெறும் பாடசாலைகளாக இயங்குதல்,

இத்தகைய விண்ணப்பங்களைத் தனித்தனி சீர்தூக்கியாராய உத்தேசிக்கப்பட்டுளது.

## பாடசாலை முன்னிலைக்கல்வி

78. இலங்கையில், பாடசாலை அனுமதி வயது 5 ஆண்டாக இருப்பதனால், பாடசாலை முன்னிலைக் கல்வி பிள்ளைகளின் நலமார்ந்த விருத்திக்கு இன்றியமையாததாகக் கருதப்படவில்லை. எனினும், குறிப்பாகத் தீவின் நகர்ப் பகுதிகளிலே, தனியார் முன்னிலைக்கல்வி நிறுவனங்கள், பயன் மிக்க பணிகளை வழங்குவனவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கட்டுக்கோப்பான பாடசாலை முன்னிலைக்கல்வி நிலையங்களின் மிக்க தேவையினை, தனியார் நடாத்தும் அவ்வகை நிறுவனங்களுக்குள்ள பெருமதிப்புச் சான்று பகர்கின்றது. இத் தேவையை நிறைவு செய்யும் வகையிலே தனியார் நிறுவனங்கள் காட்டுகின்ற

தாளாண்மையையும் முயற்சியையும் அரசு பாராட்டுகின்றது.

79. எனினும், பொது நலவுரிமை எஞ்ஞான்றும் பேணிக்காக்கப்படுதல் வேண்டும் என்பதையும், பிள்ளைகளின் நல்வாழ்வுக்கான விருத்திக்குத் தூண்டுதலாக உகந்த ஒரு சூழலுடன் பாடசாலை முன்னிலைக் கல்வியானது வழி செய்தல் வேண்டும் என்பதையும் கல்வி அமைச்சு உணர்ந்து:—

(அ) பாடசாலை முன்னிலைக் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தற் பொருட்டு, செயற்றிட்டங்களை வகுத்தளிக்குமாறு பொதுவார், தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும்;

(ஆ) பின்வரும் பணிகளிற் செவ்வையான தரத்தைப் பேணும் பொருட்டு வழிகாட்டு நெறிகளை மேற்கொள்ளும்;

i. பாடசாலை முன்னிலைக் கல்விக்கு ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்; அத்துடன்

ii. பாடசாலை முன்னிலைக் கல்வி நிறுவனங்களை நடாத்துதல்.

80. எனினும், பாடசாலை முன்னிலைக்கல்வி நிறுவனத்துக்குச் செல்லாத பிள்ளைகள் அனுமதி விடயத்திலோ அல்லது ஆரம்பப் பாடசாலைக் கல்விச் செயற்றிட்டத்திற் பயன்பெறும் விடயத்திலோ பாதிப்பு ஏற்படாதிருத்தல் உறுதி செய்யப்படும்.

## கல்லூரிசார் மட்டம் (தரங்கள்: 12 — 13)

பொது — மேற் கல்வியின் கூறு

81. பொதுக் கல்வியைப் பூர்த்தி செய்து தேவையான தகைமைகளைப் பெறுவோர், கல்வியின் அடுத்த பகுதியைத் தொடருவர். இங்கு அவர்கள் ஒரு சிறப்புத் துறையிற் கல்வியைக் கற்பர். பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுக்கும்; தொழினுணுக்கக் கல்வி அதிகாரசபையினால் நிறுவப்பட்ட தொழினுணுக்கக் கல்விக்கும் தொழில்முறைக் கல்விக்கும்; விவசாயக் கல்விச் சபையினால் இணைக்கப்பட்ட விவசாயக் கல்விக்கும் கல்லூரிசார் மட்டத்திற் கல்வி வழங்கப்படும்.

க.பொ.த. பரீட்சையிற் பெற்ற திறமை இப் பல்வேறு பயிற்சி நெறிகளின் தெரிவுக்குரிய அடிப்படை அளவுகோலாக அமையும். இதற்கு மேலதிகமாகக் குறித்த பயிற்சிநெறிகளுக்குத் தேவையான ஏனைய தெரிவு முறைகளும் உள.

## கல்லூரிசார் மட்டக் கல்வியின் தன்மை.

82. கல்லூரிசார் மட்டத்திலான கல்வி, பாடசாலை முறையில் 12 ஆம் தரத்திலும் 13 ஆம் தரத்திலும் வழங்கப்பட்டாலும், பொதுக் கல்விக்கு வெளியானதாகவே அமைகின்றது. அவற்றிலுள்ள பயிற்சி நெறிகள் பல்கலைக் கழகங்களுக்கும் ஏனைய நூற்கல்வியை வழிப்படுத்தும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்களைத் தயார் செய்வனவாகும். அதனால், இப் பயிற்சிநெறிகள் நூற்கல்வியைச் சார்ந்தனவாகும்.

83. கல்லூரி மட்டத்திலான பயிற்சிநெறிகள் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்கு மாணவர்களை இட்டுச் செல்வன. அவை 13 ஆம் தரத்தை நிறைவு செய்த பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் உரியவை. பல்கலைக்கழகங்களுக்குப் பாடசாலை மாணவர்களின் நேர்முகமான தெரிவு பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையின் பெறுபேறுகள், பல்கலைக்கழகங்களின் அனுமதி நோக்கத்தைக் கருத்திற் கொள்ளும்போது, இரண்டாம் முறையாகத் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இத் தேர்வுக்குத் தயார் செய்ய நீண்ட காலத்தை எடுத்துள்ளனரென்பது கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

84. கல்வியின் வாய்ப்புக் குறைந்தவை என்று குறித்துரைக்கப்பட்ட பாடசாலைக் கொத்தணிகளிலுள்ள கல்லூரி மட்டத்திலான மாணவர்களுக்குப் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்பாக மேலதிகமாக ஓர் ஆண்டு, அதாவது வழமையான இரு ஆண்டுகளுக்குப் பதிலாக மூன்று ஆண்டுகள் கற்பதற்குச் சலுகை வழங்கப்படும். இவ்வகைச் சலுகை வழங்கப்பட்ட பாடசாலைக் கொத்தணிகளின் அட்டவணை, கொத்தணிகளின் மாற்றங்களைக் கொண்டு கணித்து, காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்படும்.

## கல்லூரி மட்ட அனுமதிக்குரிய அளவைக் கட்டளை

85. கல்லூரிசார் பயிற்சிநெறிகளுக்குரிய அனுமதிக்கான அளவுகோல் க.பொ.த. பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் அமையும். ஏனைய தெரிவுக் கருவிகளும் இதற்குப் பயன்படுத்தப்படலாம். பெருந்தொகையான மாணவர்கள் பயனற்ற கல்விசார் பயிற்சிநெறிகளை மேற்கொண்டு, அதன் பயனாக விரக்தியடைந்து பல ஆண்டுகளுக்குத் தொழினுணுக்க / தொழில்முறைப் பயிற்சியை அல்லது தொழில் வாய்ப்புகள் இழப்பதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு, கல்லூரித்தரக் கற்கைநெறிகளுக்குரிய தகவுத் திறமை கருத்திற் கொள்ளப்படும்.

## கல்லூரிசார் மட்டப் பாடவிதானம்

86. இரண்டு பாடவிதானப் பிரிவுகள் இடம் பெறும்:

(i) கலை

(ii) விஞ்ஞானம்

87. இப் பாடவிதானம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்:

(i) பகுதி i – பொது மூலாதாரப் பாடங்கள்.

(ii) பகுதி ii – கொடுக்கப்பட்ட ஒரு நிரலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று பாடங்கள்.

88. பொது மூலாதாரத்திற் பின்வரும் பாடங்கள் இடம்பெறும். அப் பாடங்கள் பயிற்சிநெறிக்கு ஒதுக்கப்பட்ட கற்பித்தல் நேரத்திற் காற்பங்குக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(i) இலங்கையின் பண்பாட்டுப் பாரம்பரியமும் சமூக – பொருளாதாரச் சூழலும்

(ii) முதல் மொழி

(iii) ஆங்கிலம்

(iv) சமூகம் சார்ந்த முன்னெறியங்கள் வாயிலாக வேலை அனுபவம்

89. ஒரு நெறியிலே குறைந்தது இரண்டினை உள்ளடக்கக் கூடியதாகக் கீழே நிரற்படுத்தப்பட்டுள்ளவற்றிருந்து பயிற்சிநெறியின் பகுதி ii க்கு மூன்று பாடங்களைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

(i) விஞ்ஞானநெறி

+ (1) கணிதம்

* (2) பௌதிக விஞ்ஞானம்

(3) பௌதிகவியல்

(4) இரசாயனவியல்

(5) உயிரியல்

(6) விவசாயம்

* பௌதிகவியலை அல்லது இரசாயனவியலை ஒரு பாடமாகக் கற்பவர்களுக்கு அன்று.

(11) கலைநெறி

(1) சிங்களம்

(2) தமிழ்

(3) ஆங்கிலம்

(4) பாளி

(5) சமஸ்கிருதம்

(6) கிரேக்கம்

(7) இலத்தீன்

(8) நவீன மொழிகள் / அரபு, இந்தி, பிரெஞ்சு, ஜேர்மன்

(9) பௌத்தம் (பௌத்த நாகரிகம் உட்பட)

* (10) இந்துசமயம் (இந்து நாகரிகம் உட்பட)

* (11) கிறிஸ்தவம்

* (12) இஸ்லாம் (இஸ்லாமிய நாகரிகம் உட்பட)

(13) பொருளியல்

(14) புவியியல்

(15) வரலாறு

(16) ஆட்சியியல்

+ (17) கணிதம்

(18) வணிகவியல்

* இவற்றுள் ஒன்றை மட்டும் தெரியலாம்.

+ கணிதத்தை ஒரு நெறியில் மட்டும் தெரியலாம்.

## கல்லூரி மாணவர்களை உயர்கல்விக்குத் தெரிவு செய்தல்

90. பகுதி 1 இன் புள்ளிகள் உயர்கல்வித் தெரிவுக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எனினும், உயர்கல்வியைத் தொடர விரும்புகின்ற மாணவர்கள் யாவரும் பகுதி 1 இல் குறிப்பிட்ட நுண்ணிம மட்டத்தை அடையுமாறு வேண்டப்படுவர். பாடசாலைகளில் 6 ஆம் தரத்துக்கு மேல் ஆங்கிலம் கற்பித்தற்குப் போதிய வசதிகள் செய்யப்பட்டதும், உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதிக்கான தேவைகளில் ஒன்ருகப் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையின் பகுதி 1 இல் ஆங்கிலத்திற் சித்திபெறுதல் வேண்டும்.

## பரீட்சைமுறை

91. (அ) பல்விடைத் தெரிவு விஞக்கள், அமைப்பு விஞக்கள், கட்டுரைவகை விஞக்கள் ஆகியவற்றைக் கொண்டதாக எழுத்துப் பரீட்சை அமையும்.

(ஆ) பொருத்தமான பாடங்களிற் செய்ம்முறை வேலையின் தொடர் மதிப்பீடு. இதற்குப் பொருத்தமான ஒரு சூழ்ச்சம் வகுக்கப்படும்.

92. எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறுவதற்கு ஒரு மாணவன் மேலேயுள்ள (ஆ) பிரிவிலுள்ள பொருத்தமான பாடத்துக்கான செய்ம்முறை வேலைத் தொடர் மதிப்பீட்டில் விதித்துரைக்கப்பட்ட தரத்தை அடைந்திருத்தல் வேண்டும். தொடர்பான மதிப்பீட்டிற் பெற்ற புள்ளிகள் அல்லது தரங்கள் தெரிவின் நோக்கங்களுக்குக் கருதப்படமாட்டா.

93. பல்விடைத் தெரிவு விஞக்களின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு ஊகத் தவறுகளை நிவிர்த்தி செய்வதற்கியன்ற உத்தி மேற்கொள்ளப்படுவதோடு இந்த விஞக்களை அமைத்தற்கும் விஞ வங்கிகளை உருவாக்குதற்கும் அவசியமான திறனறிவை வகுத்தற்கு வேண்டிய பயிற்சி மேற்கொள்ளப்படும்.

94. ஆண்டுதோறும் நிலைமாருத்தரம் பேணப்படுதலை உறுதி செய்தற் பொருட்டு, குறித்துரைக்கப்பட்ட நியம நெறிப்பட்ட விடை திருத்தும் முறைமை மேற்கொள்ளப்படும்.

95. ஒவ்வொரு பாடத்திலும் அ—ஆ—இ—ஈ—உ என்ற ஐந்து அமிச அளவையிலே சாதனை மட்டத்தினைக் காட்டும் பெறுபேற்றுச் சான்றிதழ் வழங்கப்படும்.

## சிறப்புத் தகுதிகாண் பரீட்சைகள்

96. தற்போது பல்வகைப் பயிற்சிநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல், க.பொ.த. (உயர் தர) பரீட்சைப் பெறுபேறு ஆகும். எதிர்காலத்திற் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையின் பெறுபேறு பல்கலைக்கழக அனுமதிக்கு அடிப்படையாக அமையும். ஆகவே, ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கு வேறு தகுதிகாண் சிறப்புத் தேர்வுகள் அறிமுகப்படுத்தப்படும். இது கல்வியறிவிலே குறைவான தேவையைக் கொண்டிருப்பதுடன் கல்லூரிக் கல்விக்கு வெளியிலுள்ள பல்தரப்பட்ட குழுக்களுக்கு உதவுவதுமாகும். தொழினுணுக்கப் பயிற்சி, தொழில்முறைப் பயிற்சி வேலையனுபவம் ஆகியவற்றுக்கு இந்தத் தேர்வின்போது முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகம்.

## பல்கலைக்கழகங்கள்

97. 1945 இல் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர், பல்கலைக்கழகக் கல்விக்கான தேவை பெருமளவு அதிகரித்தது. அனுமதியை அதிகரிப்பதன் மூலம் பல்கலைக்கழகங்கள் இத் தேவையைப் பூர்த்தி செய்ய முயன்றன. எவ்வாருயினும். எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் கல்வித் தரத்தில் வீழ்ச்சி ஏற்படலாயிற்று. இதற்குப் பல காரணிகள் உள. அனுமதி அதிகரிப்பினைப் பார்க்கிலும் வசதிகளின் விஸ்தரிப்புப் பின்தங்கி நின்றது. ஆங்கிலத்தை நீக்கியமையால் ஏற்பட்ட விளைவு பேரிழப்பாகும். குறைவான ஆராய்ச்சி வேலைகளும் பட்ட மேற்படிப்பை மிகச் சிலரே மேற்கொண்டதும் அறிவு வளர்ச்சிக்கு உந்துதல் அளிக்கக்கூடிய சூழல் இன்மைக்குப் பொறுப்பான காரணிகளாகும்.

98. பெரும்பான்மையான மாணவர்களுக்குப் பல்கலைக் கழகக் கல்வி, அனுபவத்தை வளப்படுத்துகின்ற அமிசமாக அமையவில்லை. மேலும், பொருளாதார அமைப்பில் விரிந்து வருகின்ற துறைகளின் தேவை பெரும்பாலும் நடுத்தர முகாமிப்பு ஆளணியினராக இருப்பதஞல், பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளை ஈர்ப்பது பொருளாதார அமைப்புக்கு உகந்ததாகவில்லை. அத்தகைய ஆளணியினருக்கு 3 — 4 ஆண்டுக் கற்கைப் பயிற்சிநெறி தேவையில்லை; பல்கலைக்கழகங்களை மாட்சிமைமிகு நிலையங்களாக வளரவிட்டு, இந்த ஆளணியினரைப் பல்கலைக் கழகம் அல்லாத மூன்ரும் நிலைக் கல்வி நிறுவகங்களிற் சிறப்பாகப் பயிற்றுவிக்கலாம்.

99. மேற்கூறியவற்றிலிருந்து கீழ் வரும் ஆலோசனைகள் அரும்புகின்றன :—

(அ) பல்கலைக் கழகங்கள் முதல் பட்டம், பட்ட — மேற் படிப்பு ஆகியவற்றிலே கவனம் செலுத்துவதன் மூலம், ஆராய்சிக்குச் சாதகமான சூழலைத் தோற்றுவிக்கலாம். அவற்றின் மூலவளத்திற் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியை, உயர் கற்கைகளுக்கும், விஞ்ஞானம், தொழினுட்பவியல் ஆகியவற்றின் ஆராய்ச்சிக்கும் ஒதுக்குவதன் மூலம், கல்விக் கூம்பகத்தின் உச்சியில் அவை மாட்சிமைக்கு நிலைக்களன்களாக விருத்தி செய்யப் படும். பல்கலைக்கழகத்திற்குள் நுழைகின்ற மாணவர் ஒவ்வொருவரும் அவரது கற்கைத் துறையிற் பூரணமான அறிவைப் பெறுவதற்கு இஃது உறுதி செய்யும்.

(ஆ) நாட்டுக்குத் தேவைப்படும் கல்விசார் தகைமை வாய்ந்த ஆளணியினருக்கேற்ப வெவ்வேறு பயிற்சிநெறிகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கை அமையும். வெவ்வேறு பயிற்சிநெறிகளுக்கு அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இத் தேவையை இனிது பிரதிபலிக்கும்.

(இ) பல்கலைக்கழகங்கள் மாட்சிமைக்கு நிலைக்களன்களாக விருத்தி அடையும் வகையில், சிறந்த ஊதியம், சிறந்த பட்டதாரி — மேற்கல்வி, கலாநிதி — மேற்கற்கை வாய்ப்புகள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் உடனுழைப்பதற்கு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துதல், பல்கலைக்கழகப் பீடங்களுக்கிடையிலே சிரேட்ட ஆளணிப் பரிமாற்றம் செய்தல், கைத்தொழில், வர்த்தகம் ஆராய்ச்சி முதலிய தனியார், பொதுவார்துறை ஊழியர்களைப் பரிமாற்றம் செய்தல் ஆகியவற்றின் ஊடாகப் பணியாளரின் அபிவிருத்தி வசதிகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) ஒரு திட்டமிடப்பட்ட மீள்கொடுப்பனவு ஆராய்ச்சி மானியம், விசேடமான பௌதிக அமைப்புக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் ஊடாகப் பல்கலைக்கழகங்கள், சில துறை களிற் பட்ட — மேற் கற்கைகள், ஆராய்ச்சி ஆகியவற்றில் விசேடத்துவம் பெறுவதற்கு ஊக்குவிக்கப்படும். பல்கலைக்கழகம் ஒவ்வொன்றுக்கும் விசேடத்துவங்களை ஒதுக்கீடு செய்வதால் விரயத்தைத் தடுக்க முடியும்.

(உ) கலைப்பிரிவு மாணவர்களுக்கும் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கும் இடையிலுள்ள அறிவுத் தடையைப் போக்குவதற்குக் கலைத்துறை மாணவர்கள் விஞ்ஞான பாடம் ஒன்றைக் கற்பதற்கு ஊக்குவிக்கப்படுவர். இது பல்கலைக்கழகம் ஒன்றிலே மேற் கொள்ளப்படும்.

## பல்கலைக்கழகங்களுக்கு மறைமுக நுழைவு

100. தொழில் நிலைத் தகைமை உள்ளோருக்கு, முதற் பட்டக் கற்கைக்குச் சில இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். ஆறுண்டுக்கால எல்லைக்குள்ளே படிப்படியான விரிவாக்கத்துக்கு அமைய முதற் பட்டக் கற்கைக்கு உரிய இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

## பட்டதாரி — மேற் கற்கைகள்

101. பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை அல்லது அதற்குச் சமனான தகைமை பெற்று, அதன்பின்னர் ஈராண்டுப் பயிற்சிநெறியைப் பூர்த்தியாக்கித் திப்புளோமாப் பெற்றவர்கள் 5 ஆண்டு வேலை அனுபவம் பெற்ற பின்னர், முதுமாணிப் பட்டத்துக்கு இட்டுச் செல்லும் பட்டதாரி — மேற் கல்வியைத் தொடர அனுமதிக்கப்படுவர். இவர்கள் முதுமாணித் தகுதிகாண் பரீட்சையிற் சித்தியடையு மாறு வேண்டப்படுவர்.

102. தற்போதைய பல்கலைக்கழகங்கள் முழுமையாகச் சாதன வாய்ப்புகளை ஏற்படுத்தியும், முழுமையாகப் பணியாளர்களைக் கொண்டதாயும், பட்டதாரி — மேற் கல்வி நிலையங்கள் நிறுவப்படும் வரையும் புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்படமாட்டா. பல்கலைக்கழகங்களினதும் பட்டதாரி மாண வர்களினதும் எண்ணிக்கை அதிகரிப்புக்கு அளிக்கப்படுவதிலும் பட்டதாரி — மேற்கல்வி நிலையங்களை விருத்தி செய்வதற்கு முந்துரிமை வழங்கப்படும். ஏனைய உயர் கல்வி நிறுவகங்கள் உள்ளமை, தேசிய தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, ஏதாவது புதிய பல்கலைக்கழகம் அவசியமா என்பதனைத் தேசிய கல்விப் பேரவை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் ஆலோசித்துத் தீர்மானிக்கும்.

103. இவ்வாறு நிறுவப்பட்ட பட்டதாரி – மேற்கல்வி நிலையங்கள் அரசு, அரசு அல்லாத நிறுவனங்களுடனும் பொருத்தமான துறைகளிற் சிறப்புத் தேர்ச்சியுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுடனும் இணைக்கப்படும்.

## திறந்த பல்கலைக்கழகம்

104. திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடு குறிப்பிடத்தக்க வகையில் ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்தும் வேறுபட்டதாக இருக்கும். இதன் பெயர் குறிப்பிடுவது போன்று, தொழிலில் உள்ளோர்க்கும், கற்கையில் தமது முழு நேரத்தையும் ஒதுக்க முடியாத ஏனையோர்க்கும் உள்நுழைய வழிவகுப்பதன் மூலம், பட்டப் பயிற்சிநெறிகளைத் தொடர்ந்து, கல்வி முறைக்குள் மீண்டும் உள்நுழைந்து தமது கல்வியை விருத்தி செய்ய இஃது உதவும். இஃது ஆரம்பத்தில் கணிதம், விஞ்ஞானம், முகாமிப்புக் கற்கைகள், இலத்திரனியலும், தொலைத் தொடர்புத் தொழினுட்பவியலும், மின்சாரத் தொழினுட்பவியல், குடிசார் பொறியியல் தொழினுட்பவியல் போன்றவற்றிலே திப்புளோமாப் பாடநெறிகளிற் கவனம் செலுத்தி, இத் துறைகளில் உடனடி மனிதவலுத் தேவையை நிறைவு செய்யும். உணவு விஞ்ஞானமும் தொழினுட்பவியலும், ஆள்வினைமை போன்ற வேறு பல பயிற்சிநெறிகளும் ஆரம்பிக்கப்பட உள்ளன. திறந்த பல்கலைக்கழகத்தினுல் வழங்கப்படுகின்ற மூன்றும் நிலைப் பயிற்சிநெறிகளைத் திருப்திகரமாகக் கற்பதற்குப் போதிய அறிவு இல்லாதோரின் நன்மை கருதி, அத்திவாரப் பயிற்சி நெறிகள் வழங்கப்படும்.

## மூன்றும் நிலைக்கல்வி ஆணைக்குழு

105. (அ) பல்கலைக்கழகம் சாரா உயர்கல்வி

(ஆ) தொழினுணுக்க, தொழில் முறைக் கல்வி

ஆகியவற்றை வழிப்படுத்தவும், இணைக்கவும், விருத்தி செய்யவும், ஆதரவு நல்கவும் மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழு (மூ.க.ஆ) தாபிக்கப்படும்.

106. மூ.க. ஆணைக்குழு பின்வருவனவற்றுக்குப் பொறுப்புடையதாகும்:

(அ) பல்கலைக்கழகஞ்சாரா உயர் கல்வி நிறுவனங்களைக் கூட்டிணைத்தல், இணைத்தல் அபிவிருத்தி செய்தல் — இந் நிறுவனங்கள் ஆசிரியத்தொழில், தாதித் தொழில் நில அளவை, அச்சிடல், கணக்கியல், இசை, நடனம் ஆகிய தாபிதமுற்ற தொழில்கள் சார்ந்த பயிற்சிகளை அளிக்கும்.

(ஆ) உயர்தொழிற் கல்லூரிகள் தமக்குரியவான கருமங்களை நிறைவேற்றுவதற்குப் போதிய அளவான நிதியத்தைச் செலவுக்குக் கொடுத்துதவுதல் போன்ற பணிகளை மீளாய்வு செய்தல்.

(இ) தொழினுணுக்கப் படிப்பு அதிகாரசபை வாயிலாகப் பல மட்டங்களிலே தொழில் பழகு பயிற்சி உட்படத் தொழில்முறைக் கல்வி, தொழினுணுக்கக் கல்வி ஆகியவற்றை அளித்தல். இந் நோக்கத்தின் பொருட்டு, பல்தொழினுணுக்கக் கல்வி நிறுவகம், கனிட்ட தொழினுணுக்க நிறுவகம், தொழில் தேர்ச்சி விருத்தி நிலையம், தேசிய தொழில் பயிலுநர் கல்வி என்பன பொதுமுறை, தொழில் முறை, நுணுக்கக் கல்வி, தொழில் பழகு பயிற்சி ஆகியவற்றை வழங்கும். சகல அரசாங்க நிறுவனங்களும் மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவினுட் கொண்டு வரப்படும். இவை தொ.க.அ. சபைக்கு அத்திவாரமாக அமையும். தெரிவு செய்யப்பட்ட சில இடைநிலைப் பாடசாலைகளின் வசதிகளையும் இவை பயன்படுத்தும். குறித்துரைத்த தேவைக்குத் தமக்கு வேண்டிய ஆளணியினரைப் பயிற்றும் நிறுவனங்கள் மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவிற்குள் அமையாது. எடுத்துக்காட்டாகப் புகைவண்டித் திணைக்களம் போன்றவை.

(ஈ) தொழினுணுக்க ஆசிரியர்களினதும் அறிவுறுத்துநர்களினதும் கல்வியும் பயிற்சியும்.

(உ) தொழினுணுக்க, தொழில் முறைக் கல்வி நெறிகள் தொடர்பாகப் பரீட்சித்தலும் சான்றளித்தலும்.

107. தொழில்முறை. தொழினுணுக்கப் பயிற்சிக்கு இணைப்பாளர் ஒருவர் இருப்பார். அவர் மூ.க.ஆ. கீழ் இயங்குவார். மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவினுல் அல்லது அதன் முகவர்களினுல் நேரடி நிருவாகத்துக்குள் இல்லாத எல்லா அரசாங்க, அரசாங்கஞ் சாராத் தொழினுணுக்க, தொழில் முறைப் பயிற்சிச் செயற்றிட்டங்கள் யாவும், தம்மைப் பதிவு செய்து கொள்ளும் இணைப்பாளர், பயிற்சி எவ்வாறு நடத்தப்படுதல் வேண்டும் என்பது பற்றியும் பயிற்சி அளிப்போரினதும் பயிற்சி பெறுவோரினதும் தகைமைகள், பயிற்சியளிக்கப்பட வேண்டியவர் தொகை என்பனபற்றியும் வழி

காட்டி உதவுவார். இந்தச் செயற்றிட்டங்கள் சார்பான பரீட்சித்தல், சான்றளித்தல் கருமங்கள் ஆகியன மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவின் மேற்பார்வையினுள் அமையும்.

108. செயற்றிட்டங்களை விருத்தி செய்யக் கருதும் நிறுவனங்களுக்குத் தொழில்முறை, தொழி லுனுக்கப் பயிற்சி இணைப்பாளர் உதவியளிப்பார். உதவியளிக்கத்தகு விசேட புலங்களாவன;—

(அ) தம் தொழில் முயற்சி நிறுவனத்திலேயே பயிற்சி வசதிகளைத் தாபிக்க அல்லது விரிவு படுத்தக் கருதும் உற்பத்தித் தொழில் முயற்சிகள், சேவை முயற்சிகள் ஆகியன;

(ஆ) கிராமப்புற மக்களை, தொழில் பயிலுநர் பயிற்சிச் செயற்றிட்டங்களில் ஈடுபடுத்த வல்ல கிராமப்புறங்களிலுள்ள வேலைக்களங்கள், தொழிற்சாலைகள் ஆகியன.

109. தொழில்முறை, தொழினுணுக்கப் பயிற்சி இணைப்பாளர், உற்பத்தி, வர்த்தக, நிருமாணச் சேவைத் தொழில் முயற்சிகள் அனைத்திலும் பயன்படுத்தற்கு இயலுமாறுள்ள பயிற்சி வளங்களை மதிப்பிடுவதற்கும் போதிய பயிற்சித் தரம் பேணப்படுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்வ தற்கும் அதிகாரம் பெற்றவராவர்.

## உயர் தொழிற் கல்லூரிகள்

110. தாபிதமுற்ற தொழில் துறைகளில் விசேட பயிற்சி அளிக்கும் நோக்கிற் பல்கலைக்கழக அந்தஸ்தினை ஒத்த தரத்தினதாய் விளங்கும் உயர்தொழிற் கல்லூரிகள் உயர் கல்வித் துறையில் மூன்றும் நிலை நிறுவனங்களாக அமையும். இந் நிறுவனங்கள் பல்கலைக்கழக அனுமதி வாய்க்கப் பெறு தோர்க்கு இலகுவிற் பின்பற்றத்தகு நெகிழ்வுடைப் பயிற்சிநெறிகளில் உயர்கல்வி வசதிகளை வழங்கும். இவை அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் அமைக்கப்படத் தக்கனவாய் மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவின் நோக்கெல்லைக்குட்பட்டு இயங்கும். அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி நோக்கிற்கும் அழுத்தம் கொடுக்கும் பல்கலைக்கழகப் பயிற்சிநெறிகள் போலன்றி, இந் நிறுவனங்களில் மேற்கொள்ளப் படும் பயிற்சிநெறிகள் வர்த்தகம், உற்பத்திக் கைத்தொழில், அரசாங்க சேவைகள், சேவைக்களத் துறைகள், பகிரங்க சேவைகள், ஆக்கக் கலைகள் முதலிய தொழில் துறைகளிற் பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினை ஆற்றவல்ல பட்டதாரிகளை உருவாக்கும் தன்மையில் உற்பத்தித் தொழில்முறை, வியா பார ஆள்வினைமை என்றின்னவை நடத்தப்படும் பாங்கினையும், இவை திறமுற நெறிப்படுத்தும் அடிப்படை விதிகளையும் மாணவர்களுக்குப் போதிப்பனவாய் அமையும்.

111. தொழில்களின் பொருட்டே பயிற்சி அளிக்கப்படுமாதலின், இந் நிறுவனங்கள் உயர்தொழிற் கல்லூரிகள் எனப் பெயர் பெறும். அவை பின்வரும் தேவை நோக்கங்களுக்காக உயர்தொழில் தகைமை வாய்ந்த ஆளணியை உருவாக்கும்:

(அ) அரசாங்க, தனியார் துறைகளில் இடைநிலை — முகாமை மட்டம்

(ஆ) கைத்தொழிற் கலைகள், ஆக்கக் கலைகள்

(இ) சமூக நலனோம்பல் துறை, அத்துடன்

(ஈ) சிலவகைத் தொழினுணுக்கர் தரங்கள்.

112. இத்தகைய பயிற்சிநெறிகள் பல, எடுத்துக்காட்டாக, கணக்கியல், நூலகவியல், நிலஅளவை போன்றவை அரசாங்க நிறுவனங்களாலும் தனியார் நிறுவனங்களாலும் இன்று வழங்கப்படுகின்றன. இந் நிறுவனங்கள் மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவினது ஒன்றிணைந்த பராமரிப்பின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படும். தேவையேற்படுங்காற் புதியனவும் நிறுவப்படும்; ஓர் உயர் தொழிற் கல்லூரி ஒன்றுக்கு மேற்பட்ட வளாகங்களைக் கொண்டிருக்கும்.

113. உயர்தொழிற் கல்லூரிகளிற் (விசேட சந்தர்ப்பங்களில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அனுமதி வழங்கினாலன்றி) பட்டப்படிப்புப் பயிற்சிநெறிகள் நடாத்தப்பட மாட்டா. இக் கல்லூரி கள் டிப்புளோமாக்களையும் உயர்தொழிற் சான்றிதழ்களையும் வழங்கும்.

114. உயர் தொழிற் கல்லூரிகள் நேர்முக அனுமதிக்கும் மறைமுக அனுமதிக்கும் இடமளிப்ப தோடு, மாணவரது முழுநேரப் பயிற்சிக்கும் பகுதி நேரப் பயிற்சிக்கும் வகை செய்கிறது.

115. ஏற்புடையவிடத்து நேரொத்த தொழில் வர்க்கத்தினருடன் பலம் வாய்ந்த இணைப்பினை வளர்க்கும் நோக்கில், உயர் தொழிற் கல்லூரிகள், ஆளுநர் சபை அல்லது ஆட்சிப் பேரவை ஒன்றுடன் சேர்ந்திணைந்த நிறுவனங்களாகத் தாபிக்கப்படும். சபைக்குரிய/பேரவைக்குரிய நியமனம், குறித்த தொழில்சார் பயிற்சியோடு தொடர்புடைய அரசாங்கம்சார் அல்லது அரசாங்கமல்லாத பிற அதிகார பீடத்தாற் செய்யப்படும். (உதாரணமாக நில அளவையாளர் கல்லூரி விடயத்திற் குறித்த விடயத் திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமனங்கள் செய்யப்படலாம்).

116. அழகியற் கல்வி நிறுவகம் ஓவியம், வடிவமைப்பு, சிற்பம் என்பனவற்றுக்கு ஒன்றும், இசை, நடனம், நாடகம் என்பனவற்றுக்கு இன்னொன்றுமாக இரு உயர்தொழிற் கல்லூரிகளாகப் பிரித்தமைக்கப்படும்.

117. ஏற்புடையவிடத்து, உயர்தொழிற் கல்லூரிகளுக்கான நிதிவழங்கீடு, மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினது ஆலோசனையின் பேரில், அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்படும்.

## தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகள் (தொ. க. அள்)

118. தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகள் (தொ.க.அள்), மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக் குழுவினாலே தாபிக்கப்படும். இவற்றின் கருமப்பாடு சகல மட்டங்களிலும் தொழினுணுக்கக் கல்வி ஆணைக்குழுவின் தனிக் குறிப்பீடுகளுக்கேற்பத் தொழினுணுக்க, தொழில்முறைக் கல்வி நெறிகளையும், பயிற்சிநெறிகளையும் திட்டமிட்டு ஒழுங்குசெய்து நடத்துதல், ஏற்புடைய சோதனை நடத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல் என்பனவாகும். இது தொழில் பழகுநிலைப் பயிற்சியையும் அடக்கும். தொழினுணுக்கக் கல்வி அதிகாரசபை திப்புளோமா, சான்றிதழ் போன்ற பிற விருதுகள் வழங்கும் தத்துவம் கொண்டிருக்கும்; சித்திபெறும் மாணவர்களை, இச் சான்றிதழ் தொ.க. ஆணைக்குழுவின் செயலாட்சிக்குட்பட்ட ஏற்புடைய தொழினுணுக்க, தொழில்முறை நிறுவனங்களிற் சேர்த்துக்கொள்ள உரித்தளிக்கும்.

119. தொ.க. அதிகாரசபையால் ஒழுங்கு செய்து, நிருவகித்து, ஆதரவளிக்கப் பெறுவனவாய் பகுதிநேர ரீதியிலும், முழு நேரரீதியிலும் அமைந்த பல்வகைத்தான தொழில்முறை, தொழினுணுக்கச் செயற்றிட்டங்கள், பொதுக் கல்வி பூர்த்தியானதை அடுத்துத் தொழினுணுக்க, தொழில்முறைப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர்க்குப் பயன்பட உள்ளன. இந்த மீண்டுவரு கல்வி முறையின் கீழ், மாணவர்கள் உயர் தகைமைகள் பெறுதற்பொருட்டு ஏற்புடைய செயற்றிட்டங்களில் மீளச் சேர்ந்து கொள்ள இயலும்.

120. தொ.க.அ. ஒவ்வொன்றும் வரையறுத்த ஒரு புவியியற் புலத்திற்குச் சேவை செய்யும். அஃது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வளாகங்கள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் என்பவற்றை உள்ளடக்கும். இவ்வாறமைவதாற் குறித்த பிரதேசத்தின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பிரதேச மட்டத்தில் அதன் முந்துரிமைகளை நிருணயிக்கவும் தொ.க. அதிகார சபைக்கு இயலும். காலகதியில் ஒவ்வொரு நிருவாக மாவட்டமும் தனது தொ.க.அ. ஒன்றைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

121. தொ.க. அதிகாரசபை:—

(அ) தொழினுணுக்க, தொழில்முறைப் பயிற்சிகளை
   i. கைப்புனைவியலர், இயக்குநர்,
   ii. கைப்பணியாளர்,
   iii. தொழினுணுக்கர் ஆகியோர் மட்டங்களில் வழங்கும்.

(ஆ) தேர்ச்சித் திறன்களை மேம்படுத்தற்கும் மீள் பயிற்சிக்குமான செயற்றிட்டங்களை அமைக்கும்.

(இ) தொழில்முறைக் கல்வியில் மனநாட்டமுடைய மாணவர்களுக்குப் பாடசாலைக் கல்வி முறைமையில் 9 முதல் 11 வரை உள்ள தரங்களுக்கு நேரொத்த தொழில்முறைக் கல்வி நெறியை வழங்கும்.

122. பல்வேறு மட்டங்களிலுள்ள பாடவிதானங்கள் சமூகக் கல்வி, இலக்கியம் போன்ற தொழினுணுக்கம் சாராப் பாடங்களையும் கொண்டு விளங்கும். இணை — பாடவிதானச் செயற்பாடுகளுக்கும் ஊக்கமளிக்கப்படும்.

## கைப்புனைவியலர் அல்லது இயக்குநர் மட்டம்

123. கைப்புனைவியலர் அல்லது இயக்குநர் மட்டத்திலான தொழில்முறைப் பயிற்சிநெறிகள் உரிய காலத்துக்கு முன்னரே பாடசாலையை விட்டு வெளியேறி வாழ்க்கைத் தொழிற் பயிற்சியை அவாவி நிற்கும் மாணவர்களுக்கென வகுக்கப்படும். ஒவ்வொரு பயிற்சிநெறியும், பிரயோகிக்கத்தகு திறன் அலகுகளைக் கொண்டமைவதாய்ப் போதிக்கப் பெறும் திறன்கள் வகைக்கமைய அதன் கால எல்லை நிருணயிக்கப்படும். பயிற்சிநெறியிற் சேர்ந்து கொள்வதற்கு நுண்ணிம வயது 14 ஆகும். பயிற்சிநெறியினை மாணவர் செவ்விதாகப் பூர்த்தி செய்யுமிடத்து, தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப் பட்ட தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். பல்வகை வாழ்க்கைத் தொழில் நடத்துபவர்கள் தமது தொழிலோடு தொடர்புபட்ட நெறி அலகுகளிற் பிந்தியகால கட்டத்திற் பயிற்சி பெறவும் வாய்ப் பளிக்கப்படும்.

## கைப்பணியாளர் மட்டம்

124. கைப்பணி மட்டப் பயிற்சிநெறிகள் எந்திரவியல், வர்த்தகம், சேவைத் தொழில்கள் என்றின்ன பிரசார்ந்த பல்வகைத் தொழில்முறைகளை உள்ளடக்கும். இந் நெறிகளுக்கு அனுமதிக்கப் படுவதற்கான கல்வித் தகைமை பயிற்சித் துறைக்கேற்ப வேறுபடலாமாயினும் நுண்ணிமம் 8 ஆம் தரமாக இருக்கும். முழுநேரக் கைப்பணிப் பயிற்சிநெறிகள் இரு பகுதிகளைக் கொண்டன. முதற் பகுதி, அடிப்படைத் தொழினுணுக்கக் கல்வியையும் பயிற்சியையும் வழங்கும். இரண்டாவது பகுதி, தொழில் பழகுவதற்குரிய பயிற்சியாக அமையும். முழுநேரப் பயிற்சிநெறியிற் சேர்ந்து கொள்ள இயலாதவர்களுக்குத் தொழில் புரிகின்ற நேரொத்த பகுதிநேரப் பயிற்சிநெறிகள் உள. ஏலவே தொழி லில் ஈடுபட்டுள்ள தேர்ச்சி பெற்ற கைப்பணியாளர்களுக்கு, மேலும் உயர் தொழினுணுக்கத் தகைமை கள் பெற வாய்ப்பளிக்கும் வகையில் விசேட முழு நேர, பகுதி நேரப் பயிற்சிநெறிகள் நடாத்தவும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## தொழினுணுக்கர் மட்டம்

125. எந்திரவியல், வர்த்தகம், சேவைத் தொழில்கள் ஆகிய துறைகளில் முழுநேர, பகுதிநேர தொழினுணுக்கர் மட்டத்துப் பயிற்சிநெறிகள், கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ்ப் பரீட்சையிலே சித்தியடைந்தோரும், பொதுக் கல்வி நெறியினைப் பூர்த்தி செய்யாமலே விட்டுப் பின்னர் விதிக்கப் பெற்ற மாற்றுத் தகைமை பெற்றுள்ளோரும் பின்பற்றுமாறு தொ.க. அதிகார சபையால் வழங்கப் படும் பயிற்சிநெறி, தொழினுணுக்க நிறுவகம் ஒன்றிலே கோட்பாட்டுப் போதனையும், பின்னர் மேற் பார்வையின் கீழ் தொழில்பழகு பயிற்சியுமாக இரு கூறுகளைக் கொண்டமையும்.

## க.பொ.த. தொழினுணுக்க நெறி

126. தொ.க. அதிகாரசபை, க.பொ.த. தொழினுணுக்க நெறிப் பொருட்டு மூன்றுண்டுப் பயிற்சி நெறி ஒன்றை நடத்தும். இது பாடசாலைகளில் நடத்தப்படும் வழக்கமான க.பொ.த. இன் 9,10,11 ஆம் தரங்களின் பயிற்சிநெறிகளுக்குச் சமாந்தரமாகத் திகழும். இதன் பாடவிதானம் பின்வரும் 8 பாடங்களைக் கொண்டதாயிருக்கும்:—

முதல் மொழி
ஆங்கிலம்
கணிதம்
உடலியற்கல்வி; இவற்றோடு
தொழில்முறைத் தொகுதி ஒன்றின் கீழ் 4 பாடங்கள்.

ஏற்புடைய வேலை அனுபவத் தொழிற்பாடுகள் பாடநெறியின் ஒரு பகுதியாக விளங்கும்.

127. தொழில்முறைத் தொகுதி என்பது ஒரு தனிப் பாடப் பரப்பெல்லையினையோ ஒரு தனித் தொழில் நிலையினையோ கொண்டமைந்ததன்று. அது தொடர்புடைய சில தொழில்களின் இனத் தொகுதியாகும்; தொழில்முறைத் தொகுதிகள் தொடர்புபட்ட பல்தொழில் வரிசை சார்ந்த அறிவையும் தேர்ச்சியையும் பெற்றுக் கொள்ள இடமளிக்கும். ஆதலின், ஒரு தொகுதியின் கீழ் நான்கு பாடங்கள் வரையிற் பயின்று கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இந் நான்கு பாடங்களிற் பெற்றுக்கொள்ளும் அறிவுத் திறனைப் பொறுத்து ஒரு மாணவர் மேலும் சிறப்பு நிலைத் தொழில்முறைப் பயிற்சியின் பொருட்டு ஏதாவதொரு தொழில் முறைப் பரப்பினைத் தேர்ந்தெடுக்க முடியும்.

128. உகந்ததெனக் கூறத்தகு தொழில்முறைத் தொகுதிகள் சில பின்வருமாறு:—

பொறிமுறைத் தொழினுட்பவியல்
மின் பொறிமுறையியல்
கட்டடத் தொழினுட்பவியல்
தன்னியக்கப் பொறிமுறையியல்
மனைப் பொருளாதாரம்
விவசாயம்
கடற்றொழில்
வர்த்தகம்
தொழில்முறை ஆங்கிலம்

## தொழில்முறை ஆங்கில நெறி

129. துரிதகதியில் விருத்திகாணும் கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளிலும் சுற்றுலாத் தொழில் போன்றவற்றிலும் மேலும் மேலும் உத்தியோக வாய்ப்புகள் பெருகிய வண்ணம் இருக்கின்

றன. இப்போது இவ் வாய்ப்புகளைப் பெரும்பாலும் ஆங்கிலம் பேசப்படும் இல்லங்களிலிருந்து வருவோரே பயன்படுத்திக் கொள்கின்றனர். எமது பாடசாலைகளில் ஒரு நாளைக்கு ஒரு பாடநேரமாக இன்று நடத்தப்படும் ஆங்கிலப் போதனையானது தொழில் தருநர் எதிர்பார்க்கும் தரத்தினை மாணவர்கள் எய்துவதற்கு உறுதி பயப்பதில்லை. ஆதலின் 8 ஆந் தர மாணவர்களிலிருந்து ஒரு குறித்த வீதத்தினரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஓராண்டு மேலதிகப் போதனை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டுக் காலப் பகுதியில் இம் மாணவர்கள் ஆங்கிலத்தைச் செறிவாகக் கற்பதோடு பாடவிதானத்திலுள்ள சில தொழில் முறையான பாடங்களை ஆங்கிலமொழி மூலம் கற்கவும் வாய்ப்பளிக்கப்படுவர்.

130. இம் மாணவர்கள் தொழில் வாய்ப்பு விடயத்தில் இன்னும் கணிசமான காலத்துக்கு ஏனையோரை விடச் சலுகை நிலையில் விளங்குவராதலின் இவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒப்புரவு பேணப்படுவது அவசியமாகும். எட்டாம் தரத்து இடாப்புத் தொகையில் 5 % சேர்க்கப்பட்டால் இதனை மேற்கொள்ளலாம். இத் தொகை ஏறத்தாழ 7.500 மாணவர்களையடக்கும். அதாவது மாவட்டங்கள் தோறும் உள்ள மாணவர்கள் கணிசமான அளவு ஒப்புரவாகச் சேர்த்துக்கொள்ளப்படும் பாங்கில் 300 வகுப்புகள் இத் தன்மையில் உருப்பெறும். இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆங்கிலத்தில் மட்டும் விளங்கும் திறமையை நோக்காது, மொழிக் கல்வியில் மாணவர் கொண்டுள்ள நாட்டமே அடிப்படையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## திறந்த பாடசாலை

131. மிகப் பரந்த அளவு மேலும் கல்வியைப் புகட்டும் நோக்கில் நாடு முழுவதும் திறந்த பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்படும். முறைசார் கல்வி நெறியை இடையிற் கைவிட்ட சகல வயதினர்க்கும் பயன்தரு வகையிற் பல்வகைக் குறுகிய காலப் பயிற்சிநெறிகள் தொடங்கப்பெறும். பயிற்சிநெறிகள் பொதுவாகப் பின்வரும் இயல்பினவாய் விளங்கும்:—

(அ) தனியாள் வளப்படுத்தற் பயிற்சிநெறிகள்
(ஆ) தொழில்முறைப் பயிற்சிநெறிகள்; இவற்றுடன்
(இ) முறைசார் கல்வி நெறியில் மீண்டும் சேர வழி செய்யும் பயிற்சிநெறிகள்.

இப் பயிற்சிநெறிகள் பொதுவாகப் பரீட்சை நோக்கில் இயல்வனவன்றாயினும், குறித்த ஒரு பரீட்சையின் பொருட்டுப் பயிற்சிநெறி நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுமிடத்து, திறந்த பாடசாலையின் முன்னங்கீகாரத்துடன் அவ்வாறாய பயிற்சிநெறியை நடத்தலாம். சில பயிற்சிநெறிகளுக்கு மாணவர்களிடம் கட்டணம் அறவிடலாம்.

132. திறந்த பாடசாலையின் முக்கிய பங்களிப்பு யாதெனில், பாடசாலையிலிருந்து வேலையுலகுக்குத் தீவிரமாக நிலைமாறுகின்ற கால கட்டத்திலே தொழில் நாடிப் பாடசாலையை விட்டு நீங்கும் பெரும்பாலானோர்க்கு இஃதோர் ஆதார நிலையமாகத் திகழ்தலாகும்.

133. திறந்த பாடசாலையானது கொத்தணிப் பாடசாலைகளை நிலைக்களமாகக் கொண்டு அவை பயன்படுத்தப்படாத நேரங்களில், அவற்றின் கட்டடம், விளையாட்டு மைதானம், உபகரணம், ஏனைய வசதிகள் ஆகியவற்றை உபயோகத்திற்கொள்ளும். பாடசாலைக் கொத்தணி ஒவ்வொன்றும் திறந்த பாடசாலை ஒவ்வொன்றை நடத்த ஏற்பாடு உண்டு. திறந்த பாடசாலை, பாடசாலைக் கொத்தணி அதிபரினது மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டியங்கும். அதிபர் சேவையைச் சார்ந்த முழுநேரப் பிரதி அதிபர், கொத்தணி அதிபர்க்கு வகை சொல்லும் பொறுப்புடையவராய்த் திறந்த பாடசாலை நிருவாகத்திற்குப் பொறுப்பாளியாயிருப்பர். அவர் கொத்தணிப் பாடசாலைகளினது அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் இணைந்து பணிபுரிவார். இளைஞர் சேவை உத்தியோகத்தர், சனசமூக நிலைய உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்ற சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பையும் திறந்த பாடசாலை நாடும். அத்துடன் பிரதேசத்திலுள்ள பல்வேறு அரசாங்கத் தனியார்துறை அமைப்புகளின் விரிவாக்கச் சேவைகள்சார் மூலவளங்களையும் பெற்றுப் பயனடையும். இதனாலே திறந்த பாடசாலைக்குரிய ஆளணிவளம் செழிப்புடையதாகும். ஏனெனில், இந்த ஆளணியில் அரசாங்க சேவையாளர், பல்வகை உயர் தொழில் நடத்துவோர், இன்னும் வெவ்வேறு வகையில் மக்களுக்குப் பயன்படக் கூடிய அறிவுத் திறனுடையோர் ஆகியோர் அடங்கி இருப்பர்.

## தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் பயன்பாடு

133. (அ) வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்கள் முறைசார் பாடசாலை, பல்கலைக்கழகப் பிரிவுகள் ஆகியவற்றில் இந்த வழமையான படிப்பித்தற் செயற்றிட்டங்களுக்குத் துணைச் சேவை செய்யப் பயன்படுத்தப்படும். அதே வேளையில் மூன்றாவது பிரிவினர்க்கு, அதாவது தொழில்முறை,

தொழினுணுக்கம், சமுதாயக் கல்வி ஆகிய துறைகளில் அதிக வேறுபாடுடைய பல்வேறு வகைச் செயற்றிட்டங்களாற் சேவையாற்றப் பெறுவோருக்கு இச் சாதனங்களை, குறிப்பாக அதிக பலம் வாய்ந்த தொலைக்காட்சியை, பயன்படுத்தப் பெரு முயற்சி மேற்கொள்ளப்படும்.

## விவசாயக் கல்விச் சபை

*134.* எமது பொருளாதாரம் முக்கியமாக விவசாயச் சார்பினது. நமது நாட்டுத் தொழில் புரி மக்களுள் **50 %** மக்கள் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள். இந் நூற்றுண்டின் இறுதியிலும் விவசாயத்தொழில் நமது பொருளாதாரத்தின் பிரதான துறையாக இல்லாவிடினும் முக்கிய கூருகத் தொடர்ந்தும் விளங்கும். விவசாயப் பயிற்சி பெரும் துணையும் முறையான பயிற்சிநெறிகளுக்கு அப்பால் சிரேட்ட விவசாயிகள், சக விவசாயிகள் என்போர் மூலமாகவும், விரிவாக்கச் சேவைகள் மூலமாகவும் பெறப்படுவது. முறைமையான பயிற்சி, பல்வேறு பயிற்சி நிலையங்களால் வழங்கப்படுகிறது.

*135.* விவசாயக் கல்விச் சபை ஒன்று விலங்கு வளர்ப்பு, காய்கறிப் பயிர்ச் செய்கை, பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை ஆகியன உள்ளிட்ட விவசாயத்திற்கான ஒன்றிணைந்த கல்விச் செயற்றிட்டத்தினை விருத்தி செய்து பராமரித்தற் பொருட்டுத் தாபிக்கப்படும். பொதுவான தொழில் முறைப் பயிற்சி, தொழினுணுக்கப் பயிற்சி ஆகியவற்றுக்கிடையே இல்லாத இணைப்பு விவசாயக் கல்வியில் விரிவாக்கச் சேவைக்கும் பயிற்சிக்கும். இடையே நெருங்கியதாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. ஆதலின், பல்வேறு நிறுவனங்களினுல் (அடிப்படை மட்டம் *iii*) மட்டத்திலும் தொழினுணுக்கர் (மட்டம் *ii*) மட்டத்தோடு ஒப்பிடத்தகு நிலையிலும் நடத்தப்படும். பயிற்சி நெறிகளை ஒரு நிலைப்படுத்தி, ஒழுங்குறுத்தி மேற்பார்வை செய்தற்குச் சபைக்குத் தத்துவமுண்டு. இம் மட்டங்களிற் கமத்தொழிற் கல்வியைச் சான்றுபடுத்தும் அதிகார சபையாகவும் இச்சபை திகழும். பயிற்சியின் பாங்கினையும் கால அளவினையும் நிருணயித்தற்குச் சபைக்குள்ள அதிகாரம் விதித்துரைத்தவாறு விவசாயக் கல்விச் செயற்றிட்டத்தினை அபிவிருத்தி செய்தற்கு வகை செய்யும். விவசாயத் துறையிற் பயிற்சியையும் விரிவாக்கச் சேவையையும் அளிக்கும் அமைச்சுகள், திணைக்களங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சபை கொண்டு விளங்கும்.

*136.* அரசாங்க, அரசாங்கம் சாரா விவசாயப் பயிற்சி நிறுவனங்கள், *iii* ஆம் *ii* ஆம் மட்ட நிலைப்பட்ட தேசியப் பயிற்சி நிறுவன வலயத்துள்ளே கொண்டுவரப் பெற்றுச் சபையின்பாற் பதியப்படும். இந் நோக்கத்திற்காகச் சகல பயிற்சி நிறுவனங்களும் பயிற்சி மட்டங்களுக்கேற்பத் தரப்படுத்தப்படும். இப்போதுள்ள அத்தகைய நிறுவனங்கள் பற்றுவிடத்துக் குறைநிரப்பாக, பொதுப் பண்ணைப் பயிற்சி நிலையங்கள் நிலம், நீர் ஆகிய வசதிகள் கொண்டனவாய்த் தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலைகளிலே தாபிக்கப்படும். இந் நிலையங்களில் ஆய்விடம், விவசாய உபகரணம் முதலிய வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படும். வதிவிட வசதிகளோடு கூடிய செய்ம்முறை விவசாயப் பாடசாலைகள், பயிர், கால்நடை உற்பத்தி, விவசாயப் பொறிக்கோப்புகளைப் பேணல், பழுதுபார்த்தல் ஆகியவற்றிற் சிறப்புப் பயிற்சியளித்தற்கான ஏற்பாடுகளைக் கொண்ட விசேட பண்ணைப் பயிற்சி நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படும். விவசாயப் பாடசாலைகள் விசேட துறைகளில் *ii* ஆவது மட்டத்திலே பயிற்சியளிக்க வல்ல நிறுவனங்களாக விருத்தி செய்யப்படும்.

*137.* விவசாயக் கல்வியில் மூன்று மட்டங்கள் இருக்கும்:—

(அ) மட்டம்: 111 — (பண்ணைப் பயிற்சி) ஒரு விவசாயத் தொழிலுக்கியன்ற அடிப்படைப் பயிற்சி, (இது பாடசாலையை விட்டு நீங்கியவர்கள் விவசாயத்துறையிலே சுய தொழிலை மேற்கொள்ளத் துணை செய்வது).

பொதுப் பண்ணைப் பயிற்சி நிலையங்களில் ஆரம்பப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிநெறிப்பாடு பிரதேசச் சார்புடையதாக, சம்பந்தப்பட்ட பகுதியிற் பிரதானமாக விளங்கும் கமத்தொழில் வகைக்கு அழுத்தம் கொடுக்கும். அதன் பின்னர் சிறப்புப் பயிற்சி, விசேட பண்ணைப் பயிற்சி நிலையத்திற் பெறப்படலாம். மட்டம் *iii* இல் வெவ்வேறு தரக் கல்வித் தகைமையுடையோர், எடுத்துக்காட்டாக 8 முதல் 11 வரையான தரத்தினர், புகுவதற்கு வாய்ப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(*i*) உயர்ந்த கல்வித் தகைமையுடையோர் குறித்த சில அலகுகளுக்கு உரித்துடையவராவர் அல்லது அவற்றிலிருந்து விலக்குப் பெறுவர்;

(*ii*) உயர் மட்ட அலகுத் தொகுப்புகளுக்குப் பதிவு செய்து கொள்ளவும் உரித்துடையவராவர்; அத்துடன்

(*iii*) விசேட விவசாயப் பயிற்சி நிலையத்திற் சேர்க்கப்பெறுதற்குப் பொது விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பப் பயிற்சி பெற்றிருப்பது மிக அவசியம்.

(ஆ) மட்டம் : 11 (தொழினுணுக்கர் மட்டப் பயிற்சிக் கொப்பானது). *iii* ஆம் மட்டத்தைப் பூர்த்தி செய்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோர்க்கு விவசாயத்தோடு அதன் ஆதார சேவைகளில் உயர் மட்டச் சிறப்புப் பயிற்சியும் அவை சார்பான பல்திற அமிசக் கல்வியும்.

இப் பயிற்சிநெறிகள் விரிவாக்கச் சேவைகளுக்கு வேண்டிய ஆளணியினர்க்கான பயிற்சியையும் அளிக்கும். இப் பயிற்சி, விவசாயப் பாடசாலைகளிலும் அவை யொத்த நிறுவனங்களிலும் ஏற்பாடு செய்யப்படும்.

(இ) மட்டம்: 1 பல்கலைக்கழகங்களினுலும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினுலும் வழங்கப் பெறும் விவசாயக் கல்வி — நூற்கல்வி சார்ந்தது.

மட்டம் *ii* இல் தேர்ச்சிபெற்று வேண்டப்படும் வேலை அனுபவமும் பெற்றுள்ள வர்களுக்கு மறைமுக அனுமதி பெறுவதற்கு ஏற்பாடு உண்டு.

*iii* ஆம், *ii* ஆம் மட்டங்களில் வழங்கப்படும் விவசாயக் கல்வி பல அலகுகளைக் கொண்டு திகழும். ஒவ்வோர் அலகும் பூர்த்தி செய்யப்படுமிடத்துக் கணிப்புகள் அளிக்கப்படும். பயிற்சி நெறிச் செயற் றிட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குக் குறிப்பிட்ட தொகைக் கணிப்புகளைப் பெறுதல் வேண்டும். இவ் வலகுகள் பொதுக் கல்வியின் மூலாதார அறிவைப்பெற உதவுவதால், இப் பயிற்சி நெறிகளைப் பின் பற்றுவோர் தமது சிறப்புக் கல்வியைப் பொதுக் கல்வியின் மூலாதார அறிவு கொண்டு வளம்படுத்திக் கொள்ளத் துணை செய்கின்றன.

## கல்விப் பூட்கையும் அமைப்பு முறையும்

### தேசிய கல்விப் பேரவை

138. கல்வியும் பயிற்சியும் பல்வேறு அமைச்சுகளாலும் முகவர் நிலையங்களாலும் ஆற்றப்படுகின்ற செயற்பாடுகளாக அமைவதோடு, தொழில் வாய்ப்பு, தேசிய மனித வலுத்தேவைகளைச் சமாளிக்கவல்ல ஏற்பாட்டுடனும் பிரிக்கவியலாதவகையிலே தொடர்புபட்டுள்ளன. எனவே, பல்வேறு அமைச்சுகளினதும் முகவர் நிலையங்களினதும் தொழில் வாய்ப்பு, மனித வலுத்தேவைகள் ஆகியன தொடர்பிற் கல்விக் கொள்கைகளைக் கோட்பாட்டு விளக்கஞ் செய்வதற்கும் இயைபுபடுத்துவதற்கும் மதிப்புரை வழங்குவதற்கும் ஒழுங்கான அமைப்பு முறையினை வகுத்தல் அவசியமாகின்றது. இதனிலும் மேலாகக் கல்வியென்பது தேசிய கருமப்பாடு கெழுமிய ஒரு துறையாகும். அதில்,பூட்கைகள் தொடர்பாகப் பொது ஒருமைப்பாட்டுக் கருத்தினின்று தோன்றும் திட்பம் மிக முக்கியமானது.

139. கல்விப் பூட்கைகளையும் மனிதவலுக் கொள்கைகளையும் இயைபுபடுத்துகின்ற முழுமையான பொறுப்புச் சனாதிபதியிடமும் அமைச்சரவையிடமுமே உள்ளது. இப்பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு நிறுவனங்களுக்குமிடையேயும் உள்ளேயும் கோட்பாட்டுப் பூட்கைகளை விளக்கஞ் செய்வதற்கும் இயைபுபடுத்துவதற்கும் ஒழுங்கான அமைப்பு முறை ஒன்று வேண்டற்பாலதாகிறது. அத்துடன், நாட்டின் கல்வி, பயிற்சி ஆகிய முறைமைகளைக் காலாந் தரங்களிற் கணிப்பீடு செய்வதோடு தொடர்ந்து மீணோக்குச் செய்து கொள்வதும் அவசியமாகும். இவ்வாறு செய்யுமிடத்துத் தொழில், மனிதவலு ஆகிய நோக்குகளுக்கு அழுத்தம் கொடுக்கும் அதே வேளையில், இதனினும் பரந்த தேசிய நோக்கங்கள் பொருட்டும் கவனம் செலுத்துவதும் அவசியமாகும். ஆகையால், புதுமுறைகள் காணல், இயைபுபடுத்தல், கல்விக் கோட்பாட்டுப் பூட்கைகளை விளக்கஞ் செய்தல் ஆகியவை தொடர்பில் அரசாங்கத்துக்கு மதியுரை கூறும் குழுவாகச் செயற்படுவதற்குத் தேசிய கல்விப் பேரவை ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச் சபை அதற்கு நெறிப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதுடன் அதன் அதிகார எல்லைக்குள் வருகின்ற விடயங்கள் தொடர்பில் தானே முனைப்பெடுத்துச் செயலாற்றும். இது போன்ற ஆலோசனைகள் சனாதிபதி அவர்களுக்கு அனுப்புதற் பொருட்டு அறிக்கைகளிற் சேர்க்கப்படும்.

இப் பேரவைக்கான உறுப்பினர்களை, அரசாங்கத்துறையிற் கல்விசார் முகவர் நிலையங்கள், அவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர்களிலிருந்தும் கல்வி மனித வலுப் பயிற்சி ஆகியவற்றில் மேம்பாடடைந்த கல்விமான்கள் ஆகியவர்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுச் சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுவர். மனிதவலு வளங்களுக்கான நிலையம் ஒன்று உட்படச் செயலகம் ஒன்றினால் இப் பேரவைக்குச் சேவையாற்றப்படும். இச் சபைக்கான செலவினங்கள் யாவும் அரசாங்கம் வழங்கும் உதவித் தொகை ஒன்றன் மூலம் தீர்த்து வைக்கப்படும். இப் பேரவையானது, அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டுப் பொறுப்புரிமை அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

### கல்வி மதியுரைச் சபை

140. கல்வி அமைச்சின் பூட்கைகளைப் பேணி வைப்பதன் பொருட்டும் மீளாய்வில் இருக்கின்ற பூட்கைகளை நிறைவேற்றும் பொருட்டும் கல்வி மதியுரைச் சபை ஒன்று அமைக்கப்படும். இச் சபையானது, ~~பொதுக் கல்வி~~, கல்லூரிகள் கல்வி, ஆசிரியர் கல்வி, விசேட கல்வி, திறந்த பாடசாலைக் கல்வி ஆகியவற்றுடன் தொடர்பான விடயங்களிலும் ஆலோசனை வழங்கும். இச் சபையின் உறுப்பினருள் பெரும்பாலானோர், அரசாங்க உத்தியோகத்தவரல்லாத, கல்வி, புலமைகளில் மேம்பாடடைந்தவர்களாக இருப்பர். கல்வி அமைச்சின் செயலாளர் இச் சபைக்குப் பதவி வழியால் தலைவராக இருப்பார். ஆசிரியர் கல்வி, பாடவிதானம், பாடநூல்கள் ஆகியவை தொடர்பாக ஆலோசனைகள் வழங்குவதன் பொருட்டு இச் சபையானது மேலதிக உடன் சேர் உறுப்பினர்களுடன் பல குழுக்களை நியமிக்கலாம்.

### மாவட்டக் கல்வி மாநாடு

141. மாவட்ட மட்டத்திற் கலந்துரையாடி மீள்நோக்கம் செய்தற்கும் பாடசாலைக் கொத்தணிச் சபைகளின் பிரதிநிதிகளுக்கிடையேயும் மற்றும் கல்வித்துறையில் அக்கறை கொண்டவர்களுக்கு மிடையேயும் அனுபவங்களைப் பங்கிட்டுக் கொள்ளவும், தொகுக்கவும் சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு, கல்வி மதியுரைச் சபையானது மாவட்டக் கல்வி மாநாடுகளைக் கூட்டும். நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் போதிய பங்களிப்பைச் செய்வதானல் மாநாடுகளுக்குத் திட்டம் வகுப்பதற்கும் தயார் செய்வதற்கும் பல மாதங்கள் தேவைப்படும். எனவே, மாவட்ட மாநாடுகள் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்

படும். ஆயினும் பாடசாலைக் கொத்தணிச் சபைகள், அவற்றின் பிரதிநிதிகளுக்கிடையில் உரையாடல்கள் நெறிமுறையிலே தொடர்ந்தியலச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும்.

## தேசிய கல்விச் சமவாயம்

142. கல்வி ஆலோசனைச் சபையானது இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேசிய கல்விச் சமவாயம் ஒன்றைக் கூட்டும். தேசிய கல்விச் சமவாயத்துக்கியன்ற முன்னோடி முயற்சிகளுள் ஒன்றாகவே மாவட்டக் கல்வி மாநாடு அமையும். இச் சபையானது, ஏனைய விடயங்களுடன் கல்விப் பூட்கைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்வதற்கும், கல்விப் பூட்கைகள், நடைமுறைகள் என்பன பற்றிய தேசிய அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துவதற்குமாகக் கருத்தரங்கொன்றுக்கு வழி செய்யும். மாவட்டக் கல்வி மாநாட்டுப் பிரதிநிதிகளையும் கல்வி மதியுரைச் சபையினால் வரவழைக்கப்பட்ட மேம்பாடுள்ள கல்வியாளர்களையும் உள்ளடக்கிய பேராளர்களை இச் சமவாயம் கொண்டிருக்கும்.

## கல்வி அமைச்சின் அமைப்புமுறை

143. அமைச்சின் செயலாளர், பொதுக் கல்வி, கல்லூரிக் கல்வி, ஆசிரியர் கல்வி. சிறப்புக் கல்வி, திறந்த பாடசாலைக் கல்வி இவற்றோடு தொடர்புடைய விடயங்கள் என்பன தொடர்பான கல்விச் சட்டமும், அரசாங்கப் பூட்கையும்சார் ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சரது பொதுப் பணிப்பு நெறி நின்று செயற்படுத்தும் பொறுப்புடையவராவர். மாவட்டத் திணைக்களங்கள் முழு வளர்ச்சி கொண்ட திணைக்களங்களாக இயங்குமாதலின், அமைச்சிற் கல்விப் பணிப்பாளர் நாயகம் என்ற பதவி இருக்கத் தேவையில்லை.

## மாவட்ட அமைப்புமுறை

144. 24 நிருவாக மாவட்டங்கள் உள்ளவாறே, அவற்றின் பரப்பிற்கு ஏற்ப 24 கல்வி மாவட்டங்கள் விளங்கும். ஒவ்வொரு மாவட்டமும், கல்விப் பணிப்பாளர் ஒருவரைத் தலைவராக உடைய கல்வித் திணைக்களத்தைக் கொண்டிருக்கும். பெரும்பாலான மாவட்டக் கல்வித் திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள அரசாங்கத் திணைக்களங்களைவிட, வளங்கள், பொறுப்புகள், பணிபுரி ஆளணித் தொகை என்றின்னவை நோக்கிற் பெரியனவாய் அமையும். கல்வி முறைமையின் நிருவாகத்தினைப் பயனுறுதி கூரப் பன்முகப்படுத்தற்கு வழி செய்யவும் கல்விப் பூட்கைகளைச் செயற்படுத்துவதில் வேண்டியளவு கட்டுப்பாட்டினைப் பிரயோகித்தற்குமாக, ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள திணைக்களத்துக்கும் அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளைக் கொண்டு நடத்தவும், மாவட்டத்திற்குரிய தேவைகளுக்கேற்பக் கொள்கைகளை மாற்றியமைத்தற்குமியலுமாறும் அதிகாரம் கையளிக்கப்பட வேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது.

## மாவட்டக் கல்வி அபிவிருத்திக் குழு

145. ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு மாவட்டக் கல்வி அபிவிருத்திக் குழுவினைக் கொண்டிருக்கும். கல்விப் பணிப்பாளரே அதன் தவிசாளரா்க விளங்குவார். இக்குழு பாடசாலைக் கொத்தணிச் சபைகளினதும் ஏற்புடைய ஏனை அமைப்புகளினதும் பிரதிநிதிகளைக் கொண்டமையும். மாவட்டத்தில் அதன் கருமப்பாடுகள் கல்வி அமைச்சுக்கு முகமுகமாய்க் கல்வி மதியுரைச் சபையினது கருமப்பாடுகளை ஒத்திருக்கும்.

146. மாவட்டக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு வழங்கும் கொள்கைப் பணிப்புகளுக்கமைய, கல்விச் செயற்றிட்டத்தினைத் தயாரித்துச் செயற்படுத்தும் பொறுப்புடையவராவர். பாடசாலைக் கொத்தணிகளே திட்டமிடல், நிருவாகம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான உப மாவட்டக் கூறுகளாய் விளங்கும். நிலப்பரப்பு அடிப்படையிற் கல்வியின் திட்டமிடலுக்கும் விருத்தி செய்தலுக்கும் உகந்தனவாக இவை புவியியற் புலங்களை அடக்கும். இந்த ஒழுங்குமுறையானது கல்வி வட்டார அடிப்படையிலான நிருவாக முறையிலும் மேம்பட்டதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வட்டார அடிப்படையிலான நிருவாக முறையில், வளங்கள் ஒப்புரவாக எய்தப்பெறுதலை உறுதிப்படுத்தும் தன்மையிற் பாடசாலைகள் தொகுக்கப்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறையின்படி, மாவட்டத்துள்ளான வட்டார அடிப்படை முறை ஒழிக்கப்படும். பதிலாகப் பாடசாலைக் கொத்தணிகளாகச் சேர்த்தியலும் ஒரு நிருவாக அமைப்புமுறை உருவாக்கப்படும்.

## பாடவிதான அபிவிருத்தியையும் ஆசிரியர் கல்வியையும் மேல் நோக்கலும் வழிப்படுத்துதலும்

147. அமைச்சின் விரிவான பூட்கைத் தீர்மானங்கள் கல்விசார் நடைமுறை ரீதியில் மேலும் விரித்துரைப்பதற்குக் கல்வி மதியுரைச் சபையின் தொடர்பான குழுக்களிடம் விடப்படும். பாடவிதா

னத்தின் நோக்கங்களை நிறைவேற்ற, இக் குழுக்கள் அமைச்சின் பூட்கைக் கூற்றுகளுக்கு விளக்கந் தந்து, பூட்கையைச் செயற்படுத்துவதற்குத் தேவையான கட்டுக்கோப்பினை உருவாக்கும். இவை, அடுத்த நடைமுறைப்படுத்தற் கட்டத்தை மேற்கொள்ளவிருக்கும் பாடவிதானக் குழுக்களுக்கு வழி காட்டும் நெறிகளைப் போதியளவு குறிப்பானவையாக்கி வழி செய்யும். ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, ஆங்கிலம் கற்பித்தல் ஆகியவற்றின் பொருத்தமான கிளைகளின் பணிப்பின் கீழ் இப் பாடவிதானப் பாடக்குழுக்கள் இயங்கும். ஒவ்வொரு பாடத்துறைக்கும் உரிய ஆலோசனைக் குழுக்களினால் ஆக்கப்பட்ட நோக்கங்களுக்கு இப் பாடக்குழுக்கள் மேலதிக விளக்கம் அளிப்பதுடன், ஒவ்வொரு பாடத்துக்கும் குறிப்பான அறிவுறுத்தற் குறிக்கோள்களையும் ஆக்கும். பின்னர், அவை ஓர் ஆரம்ப நிலையிலுள்ள நெகிழ்வானதும் பரந்த அடிப்படையில் அமைந்ததுமான தேசிய மட்டத்திலான பாடவிதானத்தை உருவாக்க முற்படும். அவற்றின் பொருத்தம், இயலுமான தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மாவட்ட மட்டத்திலான வேறுபாடுகளுக்கும் இசைவாக்குதல்களுக்கும் ஏற்ப, விளக்கமான பாடவிதான வழிகாட்டுதல்களைத் தயாரிக்கும் போது இந்த உருவமைப்புகள் பயன்படுத்தப்படும். தேசிய மட்டத்திலான பாடவிதானத்தை மாற்றியமைத்து, விரிவுபடுத்தும் வகையிற் சில மாவட்டங்கள் தமது சொந்தப்பாடவிதான அபிவிருத்தி அலகுகளை அமைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேசிய மட்டத்திலான பாடவிதான அபிவிருத்தியின் நோக்கெல்லை

*148.* மேற்காணும் சூழ்ச்சையைச் செயற்படுத்தற் பொருட்டு, பாடவிதான அபிவிருத்தியின் தொழிற்பாடுகள் பின்வரும் கருமப்பாடுகளைக் கொண்டமையும்:—

(i) பல்வேறுபட்ட பாடங்களைக் கற்பித்தலுக்கு வழிகாட்டு நெறிகளைத் தயாரித்தல்;

(ii) தேசிய மட்டத்திலான பயன்படுத்தலுக்குப் பாடங்களின் மூலாதார விடயங்களைத் (தேசிய மட்டத்திலான தரத்தைப் பேணுதலுக்குப் பங்கம் விளைவியாத வகையில் பிரதேச அமைவுக்கியல் மாற்றங்களுக்கும் விரிவாக்கத்திற்கும் இடமளித்து) தயாரித்தல்;

(iii) மாவட்டப் பாடவிதான அலகுகளதும் (அத்தகைய அலகுகள் அமைக்கப்பட்டிருக்கு மிடத்து) வகுப்பறை ஆசிரியர்களதும் உபயோகத்துக்காகப் பின்னணிச் சாதனங்களையும் கைந்நூல்களையும் தயாரித்தல்;

(iv) சேவையிடைப் பயிற்சிப் பருவங்களில் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சேவையிடைப் பயிற்சி மேற்கொள்ளும் ஆளணியினரது உபயோகத்துக்குப் பின்னணிச் சாதனங்களைத் தயாரித்தல்;

(v) மாவட்டப் பாடவிதான விருத்தியாளர்களுக்கும், சேவையிடைப் பயிற்சி ஊழியர்களுக்கும் உயர் தொழிற் பயிற்சி வழங்குவதோடு ஏனைய மாவட்டங்களின் ஆளணியினருடன் கலந்து செயற்படுதற்கும் வேலைக்களம் முதலிய வசதிகளைச் செய்தல்;

(vi) தேசிய மட்டத்திலான பாடவிதான அபிவிருத்தி, சேவையிடைப் பயிற்சி ஆகியவற்றிற்கும், மாவட்டக் குழுக்களுக்கு உதவுதற்கும் நிருவாக ஒழுங்குகளின் ஊடாக ஏனைய முகவர்களிடமிருந்து நிபுணத்துவத்தைப் பெறுதல்.

## மாவட்ட மட்டத்திற் பாடவிதான அபிவிருத்தி

*149.* பாடசாலையின் பயன்பாட்டுக்குரிய பாடவிதானச் சாதன அபிவிருத்தியில், மாவட்ட மட்டத்தில் மாற்றங்கள் செய்ய ஏற்பாடு அளிக்க வேண்டிய தேவை பாடவிதானத் தயாரிப்பின் போது கருத்திற் கொள்ளப்படும். பாடவிதான உள்ளடக்கத்தில் மாவட்ட மட்டத்திலான மாற்றங்களைப் பிரதிபலிக்கக் கூடியதாக உள்ளூர் ரீதியாகப் பாடவிதான அபிவிருத்தியிற் பங்கெடுப்பதற்குரிய வசதியின் ஏற்பாட்டினால், பரிசோதனைகளுக்கான சுதந்திரத்துடன் தோற்றுவிக்கப்பட்ட இயக்கத் தன்மை பெருமளவுக்குப் புத்தாக்க நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ஆசிரியர் கல்வி, மாவட்டக் கல்வித் திணைக்கள ஆளணியினர், பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன், குறிப்பாகக் கற்பித்தல் தொழிலிலுள்ள ஆசிரியர்களதும் பங்கெடுப்பானது பெருந் தொகையான பிரதான ஆளணியினர் நவீன கல்வியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை அறியும் வாய்ப்புடையராதலை உறுதிப்படுத்துவதாய் அமையும். இதன் மூலம் அவர்கள் புதிய ஆசிரியர் சேவையின் வினையாற்றலை மேம்படுத்தும் பொருட்டுப் பின்வரும் நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்திலான இக் கருமப்பாடுகள் அமைச்சின் பொதுவான மேற்பார்வையின் கீழமைந்து விளங்கும்.

## பரீட்சைகள்

150. கற்பித்தல் — கற்றல் வழிமுறையில் நீக்கமில்லா அங்கமாகப் பரீட்சை திகழ்தல் வேண்டும். இப்பொருள் நோக்கில், 'அளவீடும் கணிப்பீடும்' என்ற தொடர் கற்பித்தல் — கற்றல் வழிமுறையினை நிறைவு செய்தற்கு வேண்டிய ஆய்வுடன் கூடிய பகுத்துணர்வோடொத்தியல வல்ல ஒரு செயற்பாட்டினைக் குறிப்பதாகும். அளவீட்டுச் செயற்பாடானது ஒரு கற்பித்தல் நிகழ்ச்சிமுறையின் பயனுறுதிப்பாட்டின் மாணுக்கர்களது பெறுபேற்று மட்டங்கள்சார் மதிப்பீட்டினை அல்லது, தொடர்ந்து மேற்கொள்ள இருக்கும் பாடநெறிகள் தொடர்பில் மாணவர்களின் பொருத்தமுடைமை பற்றிய அளவீட்டு நடவடிக்கையை நாடிப் பெறுதற்கான தரவினைப் பெறும் புறவயக் கணிப்பு நோக்கில் அமைவது. பாடசாலைத் தேர்வுகள், பிள்ளைகளை அவர்களது அறிவு, திறன்கள், மனப்பாங்கு ஆகியன தொடர்பிற் புரிந்து கொள்ள முயலும்.

151. ஒருவரது கல்வி அனுபவத் தொகுதித் தொடர்பில் அவர் எய்திய சாதனையின் தரத்துக்குக் கணிப்பளிக்கும் பாங்கில், பரீட்சைகள் சான்றளிப்பாகிய பங்களிப்பினை ஆற்றியுள்ளன. அத்துடன் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி நாடுபவர் தொகையிற் பொருத்தமற்ருேர் எனக் காணப்பெற வல்ல கணிசமான அளவினரைக் களைவதாகிய பணியினையும் இவையாற்றியுள்ளன. பரீட்சைகளின் இத்தகைய இருவகை பங்களிப்பு நியாயபூர்வமானது என்ற மதிப்பையும் கொண்டுள்ளது. ஆனுல், அதேவேளை இது கல்வி நோக்கிலே பெருமதிப்பு வாய்ந்த பிற பங்களிப்பு வாய்ப்புகளைக் குறைவுறச் செய்யும் இயல்பானதாகி, கல்வியின் முறையினையே குலைத்துவிடத் தக்கதாகிவிட்டது. இவ்வாறு பரீட்சைமுறைமையானது, கற்பித்தல் — கற்றல் முறைமையினின்றும் அறவே புறம்பான நோக்கங்களுடையதாகி அமைந்துள்ளது.

152. பரீட்சை முறைமையினை, அதன் சான்றளிப்பு, தெரிவு ஆகிய அமிசங்களைப் பேணியவாறே, கற்பித்தல் — கற்றல் முறைமைக்கு நிறைவளிக்க வல்ல பங்களிப்பாக அமையுமாறு வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந் நோக்கத்தினை எய்தற்கான நடவடிக்கைகளுள் பின்வருவன முக்கியமாக அமைவன :—

அ) அளவீட்டையும் கணிப்பீட்டையும் தொடர்வுறும் அடிப்படையில் இயலச் செய்வதோடு, வெளிநிலைப் பரீட்சையிற் பற்றுறுதி கோடலைக் குறைத்தல்.

ஆ) காலாந்தரத்தில், ஒரேசீரான தரத்தைப் பேணும் நோக்கில் (புறவய நியமத்தோடு மதிப்பீட்டினை இணைவுபடுத்திய) நியமத் தொடர்புப் புள்ளியிடற் சூழ்ச்சைத் திட்டத்தைக் கைக்கொள்ளல்.

இ) மாவட்ட வேறுபாடுகளுக்கு இடமளிக்கவும் படிப்பித்தலில் உண்மையாக ஈடுபட்டுள்ளோர் பெருமளவிற் பங்குகொள்ளவும் இடமளிப்பதற்காக வெளிவாரிப் பரீட்சையைப் பன்முகப்படுத்தல்.

ஈ) மத்திய வெளிவாரிப் பரீட்சை முறைமையினை, பரீட்சைத் திணைக்களத்தோடு இயைந்து தொழிற்படுமியல்பு கொண்ட கல்விப் பரீட்சைக் கணிப்பீட்டுக் குழுவினது மேற்பார்வையின் கீழ்க் கொண்டு வருதல்.

உ) அளவீடு, கணிப்பீடு என்பவற்றின் பொருட்டுச் சிறந்த சாதனங்களை உருவாக்கும் நோக்கில் ஆராய்ச்சிகளையும், முனைவுப் படிப்புகளையும் மேற்கொள்ளல்; சான்றளிப்பினை அதன் பயன்பாட்டு உறுதி நோக்கில், மீள்நோக்கிக் கொள்ளல்; தெரிவுக்குகந்த தன்னுறுதியும் பெறுமதியும் வாய்ந்த முறைகளைப் பயன்படுத்தலும் உருவாக்கலும்.

153. பரீட்சைத் திணைக்களம், பாடசாலைப் பரீட்சைகளையும் பாடசாலைப் படிப்புச் சம்பந்தமான பிற முகவர் நிலைய வேலைகளையும் மட்டுமே கவனிக்கும் பொறுப்புடையதாய் விளங்கும். பல்வேறு திணைக்களங்கள், பிற நிறுவனங்கள் ஆகியன தொடர்பில் இப்போது பரீட்சைகள் நடாத்துவதாகிய பொறுப்பினின்றும் பரீட்சைத் திணைக்களம் இனி விலகிக் கொள்ளும்.

## கற்பித்தற் சேவை

154. ஆசிரியர் பரம்பலிலே பிரதேச ரீதியாகவும் பாடரீதியாகவும் நிலவும் அசம நிலைகள், பயிற்றப்படாமலும் சான்றளிக்கப்படாமலும் பெருந்தொகையான ஆசிரியர்கள் உள்ளமை ஆகிய குறைபாடுகளை நிவர்த்தி செய்தற்பொருட்டுப் பின்வரும் அமிசங்கள், முன்னிடம் பெறுகின்றன. சேவையில் உள்ளவராய்ப் பயிற்றப்படாமலும் சான்றளிப்புப் பெருமலும் இருக்கின்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

அ) ஆசிரியர்கள் மாவட்ட அடிப்படையிலே தெரிந்தெடுக்கப்படுவர். இவர்கள் சாதாரணமாக மாற்றம் பெறும் வகுதியினரல்லர். ஆயினும், மாவட்ட அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் வேறொரு மாவட்டத்திற் சேவை செய்தற்பொருட்டு, குறித்த ஒரு மாவட்டத்திலிருந்து தன்னை விடுக்கக் கோரலாம். அத்தகைய வேண்டுகோள், உகந்ததென அரசுக்குத் தோன்றுமிடத்து அது ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆ) ஆசிரிய சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு வேண்டிய தகைமைகளாவன:

(i) பல்கலைக்கழகப் பட்டம்

(ii) விவசாயம், கலைப்பாட்ங்கள் போன்ற விசேட பாடங்களில் திப்புளோமா

(iii) கற்பித்தற் சான்றிதழ், பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வின் பின் ஆசிரிய கலாசாலையில் உயர்தொழிற் பயிற்சிநெறி ஒன்றினைச் சித்திபூர்வமாக நிறைவு செய்பவர்க்கு வழங்கப்படும். (i) ஆம், (ii) ஆம் வகுப்பீடுகளின் குறித்த பட்டதாரிகளும் திப்புளோமாச் சான்றிதழ் உடையோரும் பாடசாலைப் பணிக்கு அனுப்பப்படுதற்கு முன்னர், விசேட கற்பித்தற் பயிற்சிநெறிப் போதனை பெறுவார்கள். (iii) ஆம் வகுப்பீட்டிற் குறிக்கப்பெற்றோர், பயிற்சிக் கல்லூரி ஒன்றில் உயர் தொழிற் பயிற்சிநெறி ஒன்றினைச் சித்திபூர்வமாக நிறைவு செய்தபின்னரே, ஆசிரியராக நியமனம் பெறுவர்.

பட்டதாரிகள் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாக, ஆசிரியர் சேவையிற் சேருவதிலிருந்து தடுக்கப்பட்டிலர். அஃது அவர்களது எதிர்காலத் தொழில் வளனையோ வேறு வகையில் அவர்கள் உரித்தாகக் கொண்டுள்ள ஊதிய அளவையோ எவ்வகையிலும் பாதிக்காது.

இ) ஒவ்வொரு பாடசாலைக் கொத்தணிக்கும் வேண்டிய பதவிக்கோப்பு ஈராண்டுக்கொருமுறை மாவட்டக் கல்விப் பணிப்பாளராற் கணிக்கப்படும். இவ்வாறு கணிக்கப்படுமிடத்து ஆரம்பநிலைத் தரங்களிற் சேர்த்த பிள்ளைகளின் தொகை, இடைநிலைத் தரங்களில் உள்ள வேலைப்பழு ஆகிய அமிசங்கள் கருத்திற் கொள்ளப்படும். அத்துடன் இவ்வாறு நிருணயிக்கப்பட்ட பதவிக்கோப்புப் பற்றிய விபரம் பாடசாலைக் கொத்தணி ஒவ்வொன்றினதும் கொத்தணி அதிபருக்குத் தெரிவிக்கப்படும்.

ஈ) பாடசாலைக் கொத்தணி ஒன்றின் கொத்தணி அதிபர், அவர் தம் கொத்தணிசார் ஆசிரியசேவைக்குப் புதிதாகச் சேர்ந்தவரை நியமிக்குமிடத்துக் கலந்தாலோசிக்கப் பெறுவர்.

உ) ஒரு கொத்தணியிலிருந்து இன்னொன்றுக்கு ஆசிரியர்களை மாற்ற வேண்டியேற்படுமிடத்துச் சம்பந்தப்பட்ட பாடசாலைக் கொத்தணிக்குப் பொறுப்பாக உள்ள கொத்தணி அதிபரை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கலந்தாலோசிப்பர்.

ஊ) சேவையில் ஏலவே உள்ள ஆசிரியர்கள் தாம் சேவை செய்ய விரும்பும் மாவட்டத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுவதோடு, சந்தர்ப்பம் அனுமதிக்கும் சூழ் தகவுக் கேற்ப இடம் மாற்றப்படுவர்.

எ) ஒரு கொத்தணியில் விளங்கும் பாடசாலைகளுக்கிடையே ஆசிரியர்களைப் பயன் கூர் வகையில் பரம்பலாக்குதல் கொத்தணி அதிபரின் பொறுப்பாகும்.

## ஆசிரியர் கல்விப் பயிற்சிநெறியின் கட்டமைப்பு

155. ஆசிரியர் தொழிலுக்குத் தெரிவு செய்தற்குரிய ஆகக் குறைந்த தகைமை பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் 3 பாடங்களிற் பெற்ற சித்திகள் என்பதனைக் கருத்திற் கொண்டு, தற்போதைய மூன்று ஆண்டுப் பயிற்சிநெறி இரண்டு ஆண்டு நிறுவனப் பாடநெறியாகவும் மாற்றப்படும். இதனைத் தொடர்ந்து, ஓர் ஆண்டு, தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிற் கற்பித்தற் பயிற்சியாகவும் மாற்றப்படும். ஒவ்வொரு பயிற்சிநெறியும் அலகு முறையில் உருவாக்கப்படும். குழுப் பயிற்சி நெறியும் அலகுகளாகப் பிரிக்கப்படும். சில அலகுகள் மூலாதாரப் பொருண்மை சம்பந்தப்பட்டனவாக இருக்கும். எடுத்துக் காட்டாக, கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல், பாடவிதான அபிவிருத்தி, கணிப்பீடு, கற்பித்தற் பயிற்சி போன்றவற்றைச் சார்ந்தனவாக விளங்கும். இவற்றோடு விருப்புக்குரிய பாட அலகுகள் உள. இவற்றிலிருந்து பயிற்சியாளர்கள் விசேடப் படிப்புப் பொருட்டான பெருதிற, சிறுதிறப் பயிற்சி நெறிகள் சம்பந்தப்பட்ட ஏற்புடைய அளவு அலகுகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

(உ — ம்) விஞ்ஞானம், கணிதம், முதல்மொழி, சமூகக் கல்வி, தொழினுணுக்கப் பாடங்கள், இவற்றோடு சாரணியம், கடெற்றிங், சமூக நோக்கியன்ற முன்னெறியவேலை போன்ற இணை — பாடவிதானப் பாடங்களும் உள. ஒவ்வொரு பயிற்சிநெறி அலகுகளும் சில கணிப்புப் புள்ளிகளைக் கொண்டதாய் விளங்கும். பயிற்சியாளர் பயிற்சிநெறித் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு இம் மதிப்புப் புள்ளிகளைப் பெற்றாக வேண்டும். கற்பித்தற் கோட்பாடுகளும் முறைமைகளுமான பயிற்சி நெறிகளைப் பயன்கூர் தகவுடையனவாகச் செய்தற்கும், ஆசிரியர் பயிற்சிப் படிமுறையில் பிரயோக உத்தியின் முக்கியத் துவத்தை வலியுறுத்தவும் முதலாண்டின் இரண்டாந் தவணையின் அரைவாசிக் காலப்பகுதியிலும், இரண்டாம் ஆண்டின் இரண்டாந் தவணையின் போது முழுத் தவணைக் காலப் பகுதியிலும் கற்பித்தற் பயிற்சி மேற்கொள்ளப்படும். இதன்பொருட்டுப் போதனை நடைமுறைப் பாடசாலைகளாகச் சேவை யளித்தற்காக ஒவ்வொரு ஆசிரியர் கல்லூரியும் பாடசாலைக் கொத்தணித் தொகுதியைக் கொண்டு விளங்கும்.

156. எல்லா ஆசிரியர் கல்லூரிகளுக்கும் செல்மதியுடையதான பொது மத்திய பாடவிதானம் ஒன்று இல்லாமையால், உள்வாரிப் பரீட்சைகள் நடத்த வேண்டிய தேவை எழுகின்றது. பல்வேறு பிராந்திய ஆசிரியர் கல்லூரிகளிலும் விரும்பத்தகு தரத்தினைப் பேணுதற் பொருட்டு, வெளிவாரித் தரம் பேணுகை அவசியமாகிறது. பயிற்சிநெறி வேலை, தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுதலோடு அதன் வழி ஈட்டப்பெறும் கணிப்புகள், சகல நெறிகளிலும் இறுதி மதிப்பீடு செய்யுமிடத்து, முக்கிய கூறாக அமையும்.

157. உதாரணமாகப் புற வயப் பரீட்சைகள், செய்ம்முறைப் பரீட்சைகள், வாய் முறைப் பரீட்சைகள் ஆகியவற்றில் இயன்றளவிற்கு நவீன மதிப்பீட்டு நுட்பங்கள் மேற்கொள்ளப்படும். கற்பித்தற் பயிற்சியிலே தொடர்பான மதிப்பீடு முக்கிய முறையாக அமையும்.

158. முழுமையான பயிற்சிநெறியின் இறுதி மதிப்பீட்டிலே தேர்ச்சி பெற்ற தேர்வு நாடிகளுக்கு இரு நிலைகளிற் சான்றிதழ்கள் வழங்கப்படும்:

அ) திறமைத் தரம்; அத்துடன்
ஆ) சித்தித் தரம்.

உயர் நிலையை அடைவோர், அவர்களது சம்பள அளவுத் திட்டத்தில் மேலதிக வேதன ஏற்றங்களுக்கும், உயர் தரங்களுக்குரிய பதவி உயர்வுகளுக்கும் அருகதை பெறுவர்.

159. பல்கலைக்கழகப் பட்டதாரி ஆசிரியர்கள் யாவரும் ஆசிரியர் கல்வி வாய்ப்புகளைப் பெறுவதனை உறுதிப்படுத்த இரு முறைகள் கையாளப்படும்

i. தற்போதைய கல்வித் திப்புளோமாவிற்குச் சமனான மேற் — படிப்பு ஆசிரியர் கல்வி.

ii. ஆசிரியர்களாக வருவதற்கு விழைவோர், தமது முதற் பட்டப் பயிற்சி நெறிகளின் போது ஆசிரியர் கல்வியைப் பெறுகின்ற பயிற்சி முன்னிலைத் திட்டம்.

## ஊதியமும் பதவி உயர்வு வாய்ப்புகளும்

160. கற்பித்தற் சேவை நுழைவுக் காலத்திலும் அடுத்து வரும் பதவி உயர்வுத் தரங்களிலும் தற்போது பல்வேறுபட்ட சம்பள அளவுத் திட்டங்கள் உள்ளன. இவ் வகையான சம்பள அளவுத் திட்டங்கள் மிகப் பெரும்பான்மையான ஆசிரியர்களுக்குக் குறைந்த அளவான பதவி உயர்வுகளையே வழங்குகின்றன. ஆசிரியர்கள் யாவருக்கும் ஒரு கவர்ச்சிகரமான சம்பள அளவுத் திட்டத்தை வழங்குதற் பொருட்டு, கற்பித்தற் சேவையிலுள்ள உயர்கல்வித் தகைமை பெற்றவர்கள், நூற்கல்வித் தகைமை பெற்றவர்கள் ஆகிய உறுப்பினர்கள் ஒரே அளவான சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சம்பள அளவுத் திட்டத்திலும் இது குறிப்பிடத் தக்களவு உயர்ந்ததாகும். எனினும், தகுதித் தடைத் தாண்டலுக்கு முன்பாக மேலும் உயர் தொழில் தகைமை களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் வேண்டப்படுவர்.

161. பட்டதாரிகள் அல்லாதவர்கள் அல்லது பல்கலைக்கழகத் திப்புளோமா பெறாதவர்கள் அல்லது பயிற்றப்படாத ஆசிரியர்கள், அல்லது இவற்றுக்கு ஒப்புமையுள்ள தகைமைகள் இல்லாதோர் ஆகியோர் தற்போது ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியர்களாக விரிவுரையாளர்களாக, போதனாசிரியர் களாக, அறிவுறுத்துநர்களாக, செய்துகாட்டுநராகச் சேவையிலிருப்பின் பட்டதாரிகளைப் / பயிற்றப் பட்ட ஆசிரியர்களைப் போலவே தகைமைகளைப் பெறும்வரை தற்போதுள்ள சம்பள அளவு திட்டத்திலே தொடர அனுமதிக்கப்படுவர். இத் தகைமையைப் பெறும்போது, தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள சம்பளத்தை அவர்களும் பெறுவர்.

162. பாடவிதான அபிவிருத்தி, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கும் பாடசாலைகளுக்குமிடையே உயர்தொழிலிலே தகுதியான ஆசிரியர்கள் தடையின்றிச் செல்வதற்கான வாய்ப்பினை அளிப்பதைக் கருத்திற் கொண்டே கற்பித்தற் சேவையிற் சேர்வதற்காக விரிவுரையாளர்களும் அவர்களைப் போன்ற ஆளணியினரும் ஆசிரியர் சேவையிற் சேர்க்கப்பட்டுள்ளனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பாடுகளோடு ஆசிரியர் பயிற்சி ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும். ஆகவே, பாடவிதான வடிவமைப்பு, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, வகுப்பறை அறிவுறுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் ஆசிரியத் தொழிலில் உள்ளோர் தடையின்றிச் செல்லக் கூடியதான தேவைக்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

## அதிபர்களின் சேவை

163. (அ) இலங்கைக் கல்விச் சேவையில் இல்லாத அதிபர்கள். 'அதிபர்கள் சேவை' என்ற பதவிப் பெயருள்ள பொருத்தமான சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்ட சேவை ஒன்றிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ஆ) உள்ளடக்கல்

(i) மூன்று ஆண்டு அல்லது அதற்குக் கூடுதலான சேவையை உடைய *iii* ஆம் தர அதிபர்கள், அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர். மூன்று ஆண்டுகளுக்குக் குறைந்த சேவையை உடைய *iii* ஆம் தர அதிபர்கள் அவர்களின் தற்போதைய சம்பள அளவுத் திட்டத்தில் மூன்று ஆண்டு பூர்த்தியாகும்வரை தொடர்ந்தும் சேவையில் இருக்க இடமளிக்கப்படுவர். மூன்று ஆண்டுகளைப் பூர்த்தியாக்கிய பின்னர், அவர்களும் அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்; அல்லது கற்பித்தற் சேவையின் நிபந்தனைகளுக்கு அமைய அச் சேவையிற் சேர்ந்து கொள்ள இடமளிக்கப்படுவர்.

(ii) ஐந்து ஆண்டு அல்லது அதற்குக் கூடுதலான சேவையை உடைய iv ஆம் தர அதிபர்கள், அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஐந்து ஆண்டுக்குக் குறைந்த சேவையை உடைய iv ஆம் தர அதிபர்கள் தற்போதைய அவர்களின் சம்பள அளவுத் திட்டத்தில் ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தியாக்கிய பின்னர், அவர்களும் அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்; அல்லது கற்பித்தற் சேவையின் நிபந்தனைகளுக்கு அமைய அச் சேவையிற் சேர்ந்து கொள்ள இடமளிக்கப்படுவர்.

(iii) எட்டு ஆண்டு அல்லது அதற்குக் கூடுதலான சேவையை உடைய v ஆம் தர அதிபர்கள், அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர். எட்டு ஆண்டுகளுக்குக் குறைந்த சேவையை உடைய v ஆம் தர அதிபர்கள் தற்போதைய அவர்களின் சம்பள அளவுத் திட்டத்தில் எட்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பின்னர், அவர்களும் அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்; அல்லது, கற்பித்தற் சேவையின் நிபந்தனைகளுக்கு அமைய அச் சேவையிற் சேர்ந்து கொள்ள இடமளிக்கப்படுவர்.

(இ) ஆட்சேர்ப்பு

கற்பித்தற் சேவையில் ஐந்து ஆண்டுகளுக்குக் கூடுதலான அனுபவமுள்ள பட்டதாரிகளும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் அவர்களின் சேவைக் காலத்துக்குரிய பதிவேடுகளின் கணிப்பீட்டு அடிப்படையிலும் விதித்துரைக்கப்பட்ட எழுத்துத் தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றிற் பெற்ற பேறுகளின் அடிப்படையிலும் அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## இலங்கைக் கல்விச் சேவையின் மீளமைப்பு

164. தற்போதைய இலங்கைக் கல்விச் சேவைக்கு ஆளணியினரை ஆட்சேர்க்கும் முறையும் அதனை அடுத்துள்ள அவர்களுக்கான பயிற்சியும் ஒரு திறமையான கல்வி நிருவாக சேவை உருவாவதில் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது போலத் தெரிகிறது. திறமை மிக்க நிருவாகிகளாகத் தொழிற்படுவதற்கு ஆற்றலுள்ளவர்களின் தெரிவையும் பதவி உயர்வையும் நோக்கமாகக் கொண்டு, மாவட்டத்திலுள்ள கல்வி அலுவலகங்களைப் பொருத்தமான ஆளணியினரால் நிருவகிக்கப்படும் முழுமையான கல்வித் திணைக்களங்களாக மாற்ற வேண்டி இருப்பதால், ஆட்சேர்ப்பையும் பயிற்சியையும் கொண்ட ஒரு திட்டத்தின் மூலமாகக் கல்விச் சேவையைச் செயற்றிறமுள்ள ஆட்களைக் கொண்ட ஒரு வகுப்பினரின் வளர்ச்சியினை நாடிச் செல்வதும் பதவியுயர்வு வழங்குவதும் அவசியமாகின்றது. அத்தகைய ஒரு திட்டத்தின் அமிசங்கள் பின்வரும் முன் மொழிவுகளில் அடங்கியுள்ளன:—

165. இலங்கைக் கல்விச் சேவை மூன்று வகுப்புகளைக் கொண்டதாக அமையும்:—
வகுப்பு I, வகுப்பு II, வகுப்பு III

வகுப்பு II, வகுப்பு III ஆகியவை பொதுவானதும் சிறப்பானதுமான ஊழியர் கோப்பினைச் சேர்ந்த அலுவலாளர்களைக் கொண்டிருக்கும். சிறப்பு ஊழியர் கோப்பினைச் சேர்ந்த இலங்கைக் கல்விச் சேவை இரண்டாம் வகுப்பு அலுவலாளர்களும் மூன்றும் வகுப்பு அலுவலாளர்களும் பரீட்சைத் திணைக் களத்திலும் வெளியீட்டுத் திணைக்களத்திலும் பாடவிதான அபிவிருத்தியை மேற்கொள்ளும் கல்வி அமைச்சின் பிரிவிலும் தொழிற்படுவர். அமைச்சிலுள்ள தேவைக்கு ஏற்ப ஒரு வகுப்பிலுள்ள அலுவலாளர்கள் அவ் வகுப்பினுள்ளேயே வெவ்வேறு ஊழியர் கோப்பினுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவர். ஒரு வகுப்பினுள் ஓர் ஊழியர் கோப்பிலிருந்து இன்னோர் ஊழியர் கோப்பினுக்குக் கல்வி அமைச்சரின் ஒருப்பாட்டுடனேயே அலுவலாளர்கள் மாற்றஞ் செய்யப்படுவர்.

166. உள்ளடக்கல்

(i) தற்போதுள்ள இலங்கைக் கல்விச் சேவையிலுள்ள 1 ஆம் வகுப்பு, 2 ஆம் வகுப்பு கல்விப் பணிப்பாளர்களும் ஒப்பான அலுவலாளர்களும் உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் 1 ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ii) தற்போதுள்ள இலங்கைக் கல்விச் சேவையிலுள்ள iii ஆம் வகுப்பிலுள்ள பிரதம கல்வி அலுவலாளர்களும் ஒப்பான அலுவலாளர்களும் உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் ii ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(iii) தற்போதுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் iv ஆம் வகுப்பிலுள்ள அலுவலாளர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் iii ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(iv) தற்போதுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் v ஆம் வகுப்பிலுள்ள 8 ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலச் சேவையையுடைய அலுவலாளர்களும் உத்தேசிக் கப்பட்டுள்ள கல்விச் சேவையின் iii ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்; அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள அதிபர்கள் சேவையில் அவர்கள் விரும்பினுற் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுவர்.

(v) தற்போதுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் v ஆம் வகுப்பிலுள்ள 8 ஆண்டுகளுக்குக் குறைந்த சேவையினை உடைய அலுவலாளர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள அதிபர்கள் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படுவர்; அல்லது, அவர்கள் விரும்பினுல் தற்போ துள்ள சம்பள அளவுத் திட்டத்திலேயே தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்படுவர்.

## ஆட்சேர்ப்பு

167. இலங்கைக் கல்விச் சேவையின் அலுவலாளர்களின் நேரடி ஆட்சேர்த்தல் iii ஆம் வகுப்பு மட்டத்தில் ஒரு போட்டிப் பரீட்சை மூலம் நடைபெறும்.

(அ) iii ஆம் வகுப்பிலுள்ள வெற்றிடங்களில் ஒரு பகுதி, மட்டுப்படுத்தப்பட்ட ஒரு போட்டிப் பரீட்சை மூலம் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு நிரப்பப்படும்.

(ஆ) iii ஆம் வகுப்பில் எஞ்சிய வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளிலிருந்து ஒரு திறந்த போட்டிப் பரீட்சை வாயிலாகத் தெரிவு செய்யப் பட்ட அலுவலாளர்களால் நிரப்பப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டித் தேர்வுக்கு அல்லது திறந்த போட்டித் தேர்வுக்கு அல்லது அவை இரண்டுக்கும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளான ஆசிரியர்களும் அதிபர்களும் தோற்றுவதற்குத் தகவுடையவராவர். புதிய ஆட்சேர்ப்பானது ஒன்றில் பொது ஊழியர் கோப்பினை அல்லது சிறப்பு ஊழியர் கோப்பினைச் சேர்ந்ததாக இருக்கும். மூன்று ஆண்டுத் தகுதி காண் காலப்பகுதி யிலே, சிறப்பான சூழ்நிலைகளின் காரணமாகப் பொது ஊழியர் கோப்பிலிருந்து விலகிச் சிறப்பு ஊழியர் கோப்பில் அல்லது மாறியும் சேர்ந்து கொள்ள இடமளிக்கப்படும்.

## பதவி உயர்வு

168. (அ) இலங்கைக் கல்விச் சேவையில் ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்கு ஓர் அலுவலாளரின் பதவி உயர்வு, அவரின் சேவைக்காலப் பதிவேடுகளினது கணிப்பீட் டையும் எழுத்துத் தேர்வினதும் நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(ஆ) அமைச்சிலும் திணைக்களத்திலும் உள்ள பதவிகள் யாவும் தரப்படுத்தப்பட்டு இலங்கைக் கல்விச் சேவையின் நேரொத்த வகுப்புகளுடன் சேர்த்துக் கொள்ளப்படும். ஏதாவது அத்தகைய பதவிகளை ஏற்படுத்தற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள், இயைபொத்த அந்த வகுப்புக்களில் உள்ளவர்களாக இருப்பர்.

## ஆசிரியர்களது சம்பளங்களையும் ஏனைய ஊக்குவிப்புகளையும் மீளாய்வு செய்வதற்கான குழு.

*169* ஆசிரியர்களின் சம்பளமும் ஏனைய சேவை நிபந்தனைகளும் ஒரு திறன்மிக்க குழுவினால் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இதன் பொருட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படும். ஆசிரியத் தொழிலிலிருந்து பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இக் குழு அமையும். ஆசிரியர்களது தற்போதைய சம்பள அளவுத் திட்டங்களையும் ஏனைய நிபந்தனைகளையும் பரிசீலனை செய்து, உயர் திறன் மிக்க இளைஞர்களையும் யுவதிகளையும் ஆசிரியத் தொழிலிற் சேர்த்து அவர்களை அப் பணிக்கே அர்ப்பணித்து, அவர்களின் ஆர்வத்தைத் தொடர்ந்து நிலவச் செய்யக் கூடிய முன் மொழிவுகளை முன்வைக்குமாறு இக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்படும். ஆசிரியர்களின் வரவுக் குறைவு, கஷ்டமான பாடசாலைகளிற் பணியாற்றல் ஊக்குவிப்புகள், தட்டுப்பாடுள்ள பகுதிகளுக்கு விசேட மிகை ஊதியம் வழங்குதல், இணை – பாடவிதான வேலைகளுக்கும் ஏனைய முயற்சிகளுக்கும் மேலதிகக் கொடுப்பனவு வழங்குதல் ஆகிய விடயங்கள் இக் குழுவின் விசேட கவனத்துக்கானவை ஆகும்.

# விதந்துரைகளின் பொழிப்பு

## 1. பாடசாலை — முன்னிலைக் கல்வி

பாடசாலை —முன்னிலைக் கல்வியை நேரடியாக அரசு ஒழுங்கு படுத்தாது. ஆனல் பாடசாலை — முன்னிலைக் கல்வி நிறுவனங்களின் திருப்திகரமான தரத்தைப் பேணுவதற்கு உதவும் வகையில் வழி காட்டல்களை ஒழுங்குமுறைப்படுத்தும்.

## 2. பாடசாலைக் கட்டமைப்பு

பாடசாலை அனுமதி வயதும் பாடசாலைகளிலுள்ள தரங்களின் எண்ணிக்கையும் தற்போதுள்ளது போன்று 5 வயதாகவும் 13 தரங்களாகவும் இருக்கும். எனினும், 13 தரங்களினதும் அமைப்புக் கீழ்க்காணும் வகையில் மாற்றம் பெறும்:

| | ஆரம்ப நிலை | | இடைநிலை | | | தேர்வு | பல்கலைக் கழக முன்னிலை | தேர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|
| தற்போதுள்ளவை | பாலர் கீழ் வகுப்பு 1 ஆண்டு | தரங்கள் 1 — 5 5 ஆண்டுகள் | தரங்கள் 6—10 5 ஆண்டுகள் | | | 10 ஆம் தர இறுதியில் க.பொ.த (சா.தர) தேசிய மட்டம் | தரங்கள் 11 — 12 2 ஆண்டுகள் | 12 ஆம் தர இறுதியில் க.பொ.த (உயர்தர) தேசிய மட்டம் |
| உத்தேசிக்கப் பட்டுள்ளவை | | தரங்கள் 1 — 5 | கனிட்ட இடை நிலை தரங்கள் 6 — 8 | தேர்வு | சிரேட்ட இடைநிலை தரம் 9 — 11 | தேர்வு | கல்லூரி மட்டத் தரங்கள் 12 — 13 | 13 ஆம் தர இறுதியில் பல்கலைக் கழக அனுமதித் தேர்வு தேசிய மட்டம் |
| | | 5 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் | 8 ஆம் தர இறுதியில் பாடசாலைக் கொத்தணி மட்டத் தேர்வு | 3 ஆண்டுகள் | க.பொ.த 11 ஆம் தர தேசிய மட்டம் | | |

ஆரம்ப பாடசாலைக்கான வயது 6 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளதால், ஆரம்பக் கல்விக்கு 5 ஆண்டுகள் போதுமானதென உணரப்பட்டுள்ளது.

பாடசாலைக் கொத்தணி நிலையில் 8 ஆம் தரத்தில் ஒரு பரீட்சையுடன் இடைநிலைக் கல்விப் பிரிவு இரு கூறுகளாகப் பிரிந்து அமைதல், மாணவர்களை ஆகக் குறைந்தது 8 ஆம் தரச் சான்றிதழ் அளிக்கப்படும் வரையிலாவது தங்கி நிற்கத் தூண்டிக் காலத்துக்கு முன்னர் பாடசாலையை விட்டு விலகுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. சில தொழில்முறைப் பயிற்சிநெறிகளின் அனுமதிக்குத் தேவையான ஒரு தகைமையாக இப் பரீட்சை அமைக்கப்படும்.

## 3. பாடசாலைக் கொத்தணிகள்

நாட்டிலுள்ள 9,500 பாடசாலைகளின் நிருவாகம், அபிவிருத்தி ஆகியவற்றுக்காக அவை கிட்டத்தட்ட 1000 பாடசாலைக் கொத்தணிகளாகத் தொகுக்கப்படும். பிராந்தியங்களின் சிறந்த முகாமிப்பு, கூடுதலான பாடசாலை செல்லும் வசதிகளின் அறிவு பூர்வமான அபிவிருத்தி

ஆகிய நோக்கங்களுக்கு, இணைவான புவியியற் பிராந்தியங்களுள் உள்ள பாடசாலைகள் கொத்தணிகளாக வரையறை செய்யப்படும். சேவை புரிகின்ற முழுப் பிராந்தியத்தினதும் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு கொத்தணியும் ஒரு முழு நிருவாகப் பகுதியாக இயங்கும். ஏறக்குறைய 10 பாடசாலைகளில், கிட்டத்தட்ட 3,000 மாணவர்களை ஒவ்வொரு கொத்தணியும் கொண்டிருக்கும். கொத்தணியில் இணைந்த ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குக் கொத்தணி முழுவதிலுமான மூலவளங்கள் யாவும் வாய்த்துள்ளன என்று கருதுமாறு தூண்டப்படுவர். மட்டுப்பட்ட அரச மூலவளங்களுக்குச் சில தனிப் பாடசாலைகளுக்கிடையே நிலவுகின்ற நலனற்ற போட்டியை இந்த ஏற்பாடு குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு பாடசாலைக் கொத்தணியின் பிரதான நிறைவேற்றுநர் கொத்தணி அதிபர் என்ற பதவிப் பெயரைப் பெறுவார். கொத்தணியின் மூலதாரப் பாடசாலையிலிருந்து கொண்டே இவர் தொழிற்படுவார். மதியுரைப் பணிகளுடன் கூடிய ஒரு பாடசாலைக் கொத்தணிச் சபை, கொத்தணி அதிபரைத் தலைவராகவும், அதிபர்கள், பாடசாலை எல்லாவற்றிலுமுள்ள அபிவிருத்திச் சபைகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டிருக்கும். சமூகம் சார்ந்த வேலை / தேசிய சேவை போன்றன கொத்தணி அடிப்படையில் ஒழுங்கு செய்யப்படும். இத் திட்டத்தின் அமுலாக்கம் ஒரு முன்னோடிக் கட்டத்துடன் ஆரம்பமாகும்.

## 4. ஒற்றைநிலைப் பாடசாலைகள்

பெருமளவு மூலவளங்களைத் தன்னிடம் கொண்டுள்ள சில மிகப்பெரிய பாடசாலைகள் தனியாகக் கருதப்படும். அவற்றிற்குக் கூடியளவு சுயமாகவே தொழிற்பட வாய்ப்பு அளிக்கப்படின், அவை சிறப்பாக இயங்குமென உணரப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தல் அப் பாடசாலைகளுக்குச் செல்கின்ற அரச மூலவளங்களை, ஏனைய பாடசாலைகளின் அபிவிருத்திக்கு விடுவிக்கும். அவை ஒற்றைநிலைப் பாடசாலைகள் என்று பெயர் பெறுவதுடன், எத்தகைய அரச மூலதன நிதியங்களையும் பெறமாட்டா. எனினும் பணியாளர்களின் சம்பளங்கள் அரச நிதியங்களிலிருந்து வழங்கப்படும்.

## 5. ஐதான சனத்தொகைப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள்

நாட்டின் 10 சதவீதமான மாணவர் தொகை பாடசாலைக் கொத்தணிகளாலோ அல்லது ஒற்றைநிலைப் பாடசாலைகளினாலோ போதியளவு உட்படுத்தப்படவியலாத ஐதான குடித்தொகைப் பிரதேசங்களில் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய தனிப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளின் நிருவாகத்திற்குத் தனியான ஏற்பாடுகள் ஆக்கப்படும்.

## 6. ஆரம்பப் பாடசாலைப் பாடவிதானம்

ஆரம்ப நிலைத்தரங்களிலே தற்போது உள்ளதனைப் போன்று ஒன்றிணைக்கப்பட்ட பாடவிதானம் தொடர்ந்து இடம் பெறும். ஆனால், வாசிப்பு, எழுத்து, எண் ஆகிய அடிப்படைத் திறன்கள் கூடுதலாக வலியுறுத்தப்படும். மூன்றும் தரத்திலிருந்து ஆங்கிலம் ஓர் இரண்டாவது மொழியாகத் தொடர்ந்து போதிக்கப்படும்.

## 7. கனிட்ட இடைநிலைப் பாடவிதானம்

இக் கட்டத்திலே பாடவிதானம் கீழ்க் காணும் பாடங்களைக் கொண்டிருக்கும்:

முதல் மொழி
கணிதம்
சமயம்
ஆங்கிலம்
விஞ்ஞானம்
சமூகக் கல்வி
அழகியற் கல்வி
வாழ்க்கைத் தொழிற்திறன்கள்
உடனலவியலும் உடலியற்கல்வியும்

பாடசாலைகள் நடைமுறைச் சிங்களத்தை/தமிழைப் பத்தாவது பாடமாக ஆக்க விரும்பின் அதனை அறிமுகப்படுத்தலாம். 8 ஆம் தரத்தில் நடாத்தப்படவுள்ள புதிய பரீட்சை, கொத்தணி

மட்டத்தில் நடைபெறும். ஆனுல் முதல் மொழி, கணிதம் ஆகிய பாடங்களின் வினுத்தாள்கள் தேசிய மட்டத்திலே தயாரிக்கப்படும்.

### வாழ்க்கைத் தொழிற்றிறன்கள்

தற்போதைய பாடவிதானத்திலுள்ள தொழினுணுக்கப் பாடங்களுக்கு இப் புதிய பாடம் பதிலீடு செய்யப்படும். இப் பாடத்தைக் கற்பித்தலின் பிரதான நோக்கங்களாவன:

வேலை உலகுக்குப் பிள்ளையை அறிமுகம் செய்தலும் வேலை உலகு தொடர்பான ஒரு நேர் மனப்பாங்கைப் பதிய வைத்தலும்.

வயதுத் தொகுதிக்குப் பொருத்தமானவையாகப் படிமுறையான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை அளித்தலும், சாதாரண ஆயுதங்களினதும கருவிகளினதும் உபயோகத்தை அறிதலும் பயன்படுத்தும் திறனைப் பெறுதலும்

தொழில்முறைத் திறன்களுக்கு முன்னிலையான சில திறன்களையும் கொத்தணிக்குத் தொடர்பான தொழில்களில் எளிமையான திறன்களையும் வழங்கல்.

நூற்கல்வியில் நாட்டங் காட்டாத மாணவனுக்குச் செய்பாட்டு அடிப்படையிலான பாடத்தை அளித்தலும் அம் மாணவன் சிறந்து விளங்கக் கூடிய துறையிலே பொருண்மை மிக்க அறிவினை வழங்கலும்.

### 9. சிரேட்ட இடைநிலைப் பாடவிதானம் (தரங்கள்: 9 முதல் 11 வரை)

இக் கட்டத்திற் கீழ்க்காணும் பாடங்கள் கற்பிக்கப்படும்:

முதல் மொழி
கணிதம்
சமயம்
ஆங்கிலம்
விஞ்ஞானம்
சமூகக் கல்வி
அழகியற் கல்வி
தொழினுணுக்கப் பாடங்கள்
உடனலவியலும் உடலியற் கல்வியும்

பாடசாலைகள் அழகியற் கல்விக்குப் பதிலாக விரும்பினுல் நடைமுறைச் சிங்களத்தை / தமிழை ஒரு பாடமாகப் போதிக்கலாம். இப் பாடங்களிலே கீழ்க் காணும் ஐந்து பாடங்கள் மட்டுமே தேசிய மட்டத்தில் க.பொ.த. பரீட்சையிலே பரீட்சிக்கப்படும்.

முதல் மொழி
கணிதம்
ஆங்கிலம்
விஞ்ஞானம்
சமூகக் கல்வி

### 10. சமயக் கல்வி

பாடசாலையில் இடம் பெறும் சமயக் கல்வியின் அமிசங்கள் யாவற்றையும் ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சமயம் கற்பித்தல் பற்றிய ஆலோசனைகளுக்கு இக் குழுவின் அறிக்கைக்குப் பொறுத்திருக்க வேண்டியுள்ளது.

### 11. ஆங்கிலம் கற்பித்தல்

மூன்றும் தரத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். எனினும், ஆரம்பத்தில் ஆரம்ப — மேனிலைத் தரங்கள் மீது மூலவளங்கள் செறிவாக்கப்படும். ஆங்கிலம் கற்பித்தற்கு ஆசிரியர்களைப் பயிற்றுவதில் விசேட கவனம் செலுத்தப்படும். செறிவான அடிப்படையில் ஆங்கிலம் கற்பிப்பதற்குரிய தனிச்செயற்றிட்டம் தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகளின் கீழ் வருகின்ற நிறுவனங்களில் ஒழுங்கு செய்யப்படும்.

### 12. தொழில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் பாடசாலைச் சேவைகளின் ஒரு முக்கிய அமிசமாகக் கருதப்படும். பாடசாலைக் கட்டத்திலான வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் இரு அமிசங்களைக் கொண்டிருக்கும் — மாணவர் ஆளுமை அபிவிருத்திப் பதிவேடுகளை பேணு

தலும் தொழில் வழிகாட்டலும், தொழில் வழிகாட்டல் பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருக்கும்:—

1. தொழில் வாய்ப்புகள் தொடர்பாகக் குறித்துரைத்த தகவலை வழங்குதல்.
2. மாணவர்களின் இயல்திறன், ஆற்றல் ஆகியன பற்றி யதார்த்தமான மதிப்பீட்டினைப் பெறப் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவுதல்.

13. பாடவிதான நடவடிக்கைகள்

இன்றுவரை பாடசாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த இப் பிரதான கல்வி ஆக்கக் கூறு, பாடசாலைக் கொத்தணிகளின் உருவாக்கத்துடன் எல்லாப் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும். இது 3 வகுதிகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும்.

அ) விளையாட்டுகளும் உடற்பயிற்சிகளும்
ஆ) கடெற்றிங், சாரணியம், பெண்சாரணியம் முதலியன; அத்துடன்
இ) பொழுது போக்குகள், கழகங்கள், முன்னெறியக் கழகங்கள் என்பன.

14. வேலை அனுபவம்

கல்வி அமைச்சும் தேசிய இளைஞர் பேரவையும் ஒன்றிணைந்து வேலை அனுபவச் செயற்றிட்டங்களைத் தயாரிப்பதுடன், அவற்றின் அமுலாக்கத்திற்குரிய இயக்கச் சாதனங்களையும் வழங்கும். மேலும் கடெற்றிங், சாரணியம் என்பன சமூக சேவை அமிசங்களை உள்ளடக்குவதற்கு விரிவும் அகலிப்பும் செய்யப்படும். உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி பெறுவதற்கு அல்லது பொதுத்துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு வேலைப் பயிற்சிச் செயற்றிட்டப் பங்கெடுப்பு மேலதிக தகைமைகளாக அங்கீகரிக்கப்படும்.

15. கல்லூரிசார் மட்டமும் (தரங்கள்: 12 முதல் 13 வரை) பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையும்

பாடசாலை முறைமையின் இவ்விரு தரங்களினதும் பங்கானது, பல்கலைக்கழக முன்னிலைக் கல்விப் பண்பினதாக ஏற்கப்படுவதுடன், இப் பயிற்சிநெறிகள் நூற்கல்வி சார்ந்தவையாகவும் அமையும். இதற்கு ஏற்ப 13 ஆம் தரத்தின் இறுதித் தேர்வு பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை எனப் பெயரிடப்படும். பயனற்ற கல்விசார் பயிற்சிநெறியைக் கற்பதனல் ஏற்படுகின்ற விரக்தி அனுபவத்தையும், அதனுலே பெருந்தொகையான மாணவர் தொழினுணுக்க/ தொழில் முறைப் பயிற்சியைக் கைவிட்டுப் பல ஆண்டுகளுக்குத் தொழில் வாய்ப்பு இல்லாதிருப்பதைத் தவிர்ப்பதையும் கல்லூரிசார் பயிற்சிநெறித்தகவு நிபந்தனைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை உரியதாகும். இரண்டாவது முறை முயல்கின்ற தேர்வு நாடிகள் நீண்ட காலம் கற்றுள்ளனர் என்பதற்கு இத் தெரிவின் போது உரிய கவனம் செலுத்தப்படும்.

16. பல்கலைக்கழக நுழைவுக்கான ஏனைய முறைகள்

பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை மூலம் பல்கலைக் கழகங்களுக்கு நுழைவு பெறமுடியும் என்பதனை அங்கீகரித்து அதற்கேற்ப வேறு தேர்வுகள் ஏற்படுத்தப்படும். இத் தேர்வுகள் கல்வி அடிப்படையில் குறைந்த தேவையைக் கொண்டனவாகவும் பகுதி நேரக் கல்வியில் ஈடுபாடு கொண்டோருக்குப் பொருத்தமானதாகவும் அமையும். இத் தெரிவின் போது வேலை அனுபவம் போன்றவற்றுக்கு கூடிய மதிப்பளிக்கப்படும். தொழில் — இடைத் தகைமைகள் உடையோருக்குப் பல்கலைக்கழகப் பயிற்சிநெறிகளில் ஒரு குறித்த எண்ணிக்கையான இடங்கள் ஒதுக்கவும் படலாம். திப்புளோமா உடையவர்களும் குறித்த தகுதிகாண் தேர்வுகளிற் சித்தி பெறுவதன் பேரிற் பட்டதாரி — மேற் கற்கைகளுக்கு அனுமதிக்கப்படலாம்.

17. கல்லூரிசார் மட்டப் பாடவிதானம்

இத் தரங்களில் இரு பாடவிதானத் துறைகள் இடம் பெறும்:—

(i) கலை
(ii) விஞ்ஞானம்

பாடவிதானம் இரு பகுதிகளைக் கொண்டிருக்கும்:—

பகுதி — i ஒரு பொது மூலாதாரம் $\frac{1}{4}$ க்கு மேற்பட்ட கற்பித்தல் நேரத்தைப் பயன்படுத்துவதுடன் கீழ்க் காணும் பாடங்களைக் கொண்டிருக்கும்:

1) இலங்கையின் கலாச்சாரப் பாரம்பரியமும்
சமூக — பொருளாதாரச் சூழலும்
2) முதல் மொழி
3) ஆங்கிலம்
4) சமூகம் சார்ந்த முன்னெறியங்கள் வாயிலாக வேலை அனுபவம்.

ii ஆம் பகுதிக்குரிய பாடங்களின் நிரல் ஒன்று 15 ஆம் பக்கத்தில் உள்ளது. பல்கலைக்கழகத் தெரிவு நோக்கங்களுக்குப் பகுதி 1 இல் குறித்துரைக்கப்பட்ட பெறுபேறு ஒரு தகுதிகாண் தேவையாக மட்டும் அமையும்.

18. பல்கலைக்கழகங்கள்

ஏனைய மூன்றும் நிலைக் கல்வி முறைகள் ஒழுங்கமைக்கப்படுவது போன்று, பல்கலைக்கழ கங்களுக்கான அனுமதிப்பும் தற்போதைய மட்டத்திலேயே பேணப்படுவதுடன் நாட்டின் கல்வி முறைமையின் உச்சத்திலான மாட்சிமைக்கு நிலையங்களாக விளங்கும் வகையிற் பல்கலைக்கழகங்களின் தரத்தை உயர்த்துவதற்கு எல்லாச் சக்திகளும் பயன்படுத்தப்படும். அவை பட்டதாரி — மேற் கல்வி வேலைக்கும் ஆராய்ச்சிக்கும் கூடிய கவனம் செலுத்தும். சிறந்த ஊதியம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் உடனுழைப்புடன் பட்டதாரி, கலாநிதி — மேற்கல்வி ஆகியவற்றுக்கான கூடிய வாய்ப்புகள், பல்கலைக்கழகத்திலிருந்தும் பொதுவார், தனியார் துறைக் கைத்தொழில், வர்த்தகம், ஆராய்ச்சி முதலியவற்றிலிருந்தும் சிரேட்ட ஆளணியினரைப் பரிமாற்றம் செய்தல் ஆகியவற்றூற் பல்கலைக்கழகப் பணியணியினரின் தரம் பேணப்படும்.

19. திறந்த பல்கலைக்கழகம்

திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடு குறிப்பிடத்தக்க வகையில் ஏனைய பல்கலைக்கழ கங்களிலிருந்தும் வேறுபட்டதாகும். தொழிலில் உள்ளவர்களும், முழுநேரக் கல்விக்குத் தமது முழு நேரத்தையும் ஒதுக்கவியலாத ஏனையோரும் சான்றிதழ், திப்புளோமா, பட்ட தாரி, பட்டதாரி — மேற் கல்வி ஆகிய மட்டங்களிற் பயிற்சி நெறிகளைக் கற்பதன் மூலம், கல்வி முறைமைக்குள் மீள் — நுழையத் திறந்த பல்கலைக்கழகம் வாய்ப்புகளை அளிக்கும். அது ஆரம்பத்திலே கணிதம், விஞ்ஞானம், முகாமிப்புக் கற்கைகள் தொழினுட்பவியல் ஆகிய பயிற்சிநெறிகளிற் கவனம் செலுத்தும்.

20. மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழு (மு க ஆ)

பாடசாலை முறைமைக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் வெளியே ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பல்வேறு செயற்றிட்டங்களையும் ஒன்றிணைத்து விரிவுபடுத்திப் பன்முகப்படுத்து கின்ற கடினமான பணியைப் பொறுப்பேற்கும் வகையில் மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழு நிறுவப்படும். மூ.க. ஆணைக்குழு பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாக விருக்கும்:

அ) பல்கலைக்கழகம் சாரா உயர்கல்வி நிறுவனங்களைக் கூட்டிணைத்தல், இணைத்தல், அபி விருத்தி செய்தல் — இந் நிறுவனங்கள் ஆசிரியத் தொழில், தாதித்தொழில், நில அளவை, அச்சிடல், கணக்கியல், இசை, நடனம் என்ற தொழில்கள் சார்ந்த பயிற்சிகளை அளிக்கும்.

ஆ) எல்லா மட்டங்களிலும் தொழில்முறை, தொழினுணுக்கக் கல்வியை அளித்தல். தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகளின் (தொ.க.அள்) ஊடாக இது மேற் கொள்ளப்படும்.

தனியார் துறையினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்முறை, தொழினுணுக்கப் பயிற்சி ஆகிய செயற்றிட்டங்களைப் பதிவு செய்வதற்கு மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவின் கீழ் தொழினுணுக்கப் பயிற்சிக்கு ஓர் இணைப்பாளர் இருப்பார். இவ்வொழுங்கு தனியார் நிறு வகங்கள் விருத்தி செய்ய விரும்பும் பயிற்சித் திட்டங்களுக்கு உதவி புரியும்.

21. உயர் தொழில் கல்லூரிகள்

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான பயிற்றப்பட்ட மனிதவலுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு உயர் தொழிற் கல்லூரிகள் நிறுவப்படுவ்தனுற் பல்கலைக்கழ கங்களின் விரிவாக்கமின்மை ஈடு செய்யப்படும். இக் கல்லூரிகள் நேர்முக நுழைவு, மறைமுக

நுழைவு ஆகிய இரண்டினையும், முழுநேரப் பங்கேற்றல், பகுதி நேரப் பங்கேற்றல் ஆகிய வற்றையும் கொண்டிருக்கும்.

## 22. தொழினுணுக்கக் கல்வி அதிகாரசபைகள் (தொ. க. அள்)

மூன்றும் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால், தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகள் நிறுவப்படும். எல்லா மட்டங்களிலும் தொழினுணுக்கக் கல்வி, தொழின்முறைக் கல்விச் செயற்றிட்டங்களைத் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், நடாத்துதல் அல்லது ஆரம்பிக்க உதவு தல் ஆகியனவும், தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகளின் குறித்துரைகளுக்கு அமையத் தொடர்பான பரீட்சிப்பினை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல் ஆகியனவும் இதன் பணிகளாகும். தொ. க. அ சபைகள்,

அ) i) கைபுனைவியலர், இயக்குநர் ஆகியோர் மட்டம்
ii) கைப்பணியாளர் மட்டம்
iii) தொழினுணுக்கர் மட்டம்
என்பவற்றில் தொழினுணுக்க, தொழில் முறைப் பயிற்சியை வழங்கும்.

ஆ) திறன்களை உயர்த்துவதற்கும், மீள் – பயிற்சி அளிப்பதற்கும் உரிய செயற் றிட்டங்கள்.

இ) தொழில் முறைக் கல்வியில் உளச்சார்பு மிக்க மாணவர்களுக்குப் பாடசாலை முறைமைக்குள் 9 –. 11 ஆம் தரங்களுக்கு நேரொத்த தொழின்முறைக் கல்வி, பொறியியல் தொழினுட்பவியல் மின் பொறியியலாளர், கட்டடத் தொழினுட்ப வியல், தன்னியங்கு பொறியியலாளர், மனைப் பொருளாதாரம், விவசாயம், கடற்றொழில், வர்த்தகம், தொழில்முறை ஆங்கில நெறி என்பன தொழின் முறைக் கொத்தணிகளுட் சிலவாகும்.

## 23. தொழின்முறை ஆங்கில நெறி

8 ஆம் தரத்திலிருந்து குறித்தளவு சதவீத மாணவர்களைத் தெரிந்து அவர்களை மேலதிக மாக ஓர் ஆண்டு பாடசாலை செல்ல வைத்து அக்காலப் பகுதியில் அவர்களுக்குச் செறிவாக நேரடி ஆங்கில மொழியைக் கற்பித்தல் மட்டுமன்றி, சில தொழினுணுக்க, தொழில்முறைப் பாடங்களின் அறிவுறுத்தல் ஊடகமாகவும் செறிவாகக் கற்பித்தலுக்குக் கவனஞ் செலுத்த *| உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழித் திறமையைக் கருதாது மொழியைக் கற்பதற்கான உளச்சார்பு அடிப்படையில் இப் பயிற்சிநெறிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். ஆங்கிலம் பேசு கின்ற வீடுகளிலிருந்து வருகின்ற பிள்ளைகளின் தற்போதைய ஏகபோக உரிமையாகவுள்ள கவர்ச்சிகரமான தொழில் வாய்ப்புகளை, இப் புதிய மாற்றம் சிறப்புரிமை படைத்த இக் குழுவிற்கு வெளியிலுள்ள பிள்ளைகளுக்கும் பெருமளவில் வழங்குமென எதிர்பார்க்கப்படு கின்றது.

## 24. விவசாயக் கல்விச் சபை

தற்போது பல்வேறு அரசாங்க முகவர்களினாலும் பொறுப்பேற்கப்பட்டுள்ள விவசாயக் கல்வி, பயிற்சி முதலிய பல்வேறு நடவடிக்கைகளையும் இச் சபை ஒன்றிணைக்கும். இம் முயற்சி களைத் தொடர்ந்து செய்வதற்குத் தனியார் துறையினரின் ஒத்துழைப்பையும் இது பெறும். பெரும்பான்மையான விவசாயப் பயிற்சி, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் விரிவாக்க வேலை வடிவில் அமைந்துள்ளது. மூன்றும் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்கு படுத்தப்பட்ட அத்தகைய நிறுவன ஏற்பாடுகள் விவசாயக் கல்விக்குப் போதுமானவை அல்ல. ஆகையால் ஒரு தனிச் சபைக்குரிய தேவை ஏற்பட்டுள்ளது.

## 25. திறந்த பாடசாலை

பாடசாலை நடைபெறாத நேரத்தில், பரந்த பாடசாலை முறைமையிலுள்ள பௌதிக அமைப்புகளைச் சமூகத்தினது கல்வி நோக்கங்களுக்குப் பயன்படுத்தல் பாடசாலைகளைக் கொத்தணிகளாகத் தொகுப்பதன் மூலம் வசதியாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடசாலைக் கொத்தணியின் கீழும் அமைந்த 'திறந்த பாடசாலை', சமூகத்தின் தொழில் முறை வளர்ச்சி, தனியாள் வளப்பாடு, முறையான அமைப்பிற்குள் மீள்நுழைவு போன்ற தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பல்வேறு வயதுத் தொகுதியினருக்கும் பல்வேறு பயிற்சிநெறிகளை ஒழுங் கமைக்கும்.

## 26. தேசிய கல்விப் பேரவை

கல்விக் கொள்கைக்கான புத்தாக்கம், ஒன்றிணைப்பு, அறிவார்ந்த தன்மை போன்றன தொடர்பாகத் தே.க.பே. அரசுக்கு மதியுரைச் சபையாக விளங்கும். கல்வி ஒரு தேசிய செயற்பாட்டுப் பிரிவு என்பதும், பொது இணக்கப்பாட்டிலிருந்தே கல்வி சம்பந்தமான பூட்கை உறுதி பெறுகின்றது என்பதும் கொள்கைகளைப் பொறுத்த வரையிலும் மிக முக்கியம் என்பதும் அங்கீகரிக்கப்படுதல் மிக அவசியமாகும். பேரவையிடம் குறித்து உசாவப்படும் விடயங்களுக்கும், தனது தற்றுணிவின் பேரிலும் பேரவை அரசாங்கத்திற்கு மதியுரை வழங்கும். பேரவையின் அங்கத்தவர்கள் சனாதிபதியால் நியமிக்கப்படுவர். பேரவை ஒரு செயலகத்திலே தனது பணிகளை மேற்கொள்ளும்.

## 27. கல்வி மதியுரைச் சபை

கல்வி அமைச்சின் பூட்கைகளையும், அப் பூட்கைகளின் அமுலாக்கங்களையும் மீளாய்வு செய்வதற்கு ஒரு கல்வி மதியுரைச் சபை ஏற்படுத்தப்படும்.

## 28. தேசிய கல்விச் சமவாயம்

கல்வி மதியுரைச் சபை இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு தேசிய கல்விச் சமவாயத்தைக் கூட்டும். இவற்றிற்கு முன் ஆயத்தமாக மாவட்டக் கல்வி மாநாடுகள் நடாத்தப்படும்.

## 29. கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு

கல்வி அமைச்சரின் பொதுப் பணிப்பின் கீழ், கல்வி அமைச்சின் செயலாளர் கல்விச் சட்டம், அரசுப் பூட்கை ஆகியவற்றினை வினைப்படுத்தலுக்குக் கல்வி அமைச்சின் செயலாளர் பொறுப்பாக இருப்பார். 24 நிருவாக மாவட்டங்களுடன் இணைந்த வகையில் 24 கல்வி மாவட்டங்கள் இருக்கும். ஒவ்வொரு மாவட்டமும் ஒரு கல்விப் பணிப்பாளரின் தலைமையிலான ஒரு கல்வித் திணைக்களத்தைக் கொண்டிருக்கும். திட்டமிடல், அபிவிருத்தி, முகாமிப்பு ஆகியவற்றின் அடுத்த மட்டமாகப் பாடசாலைக் கொத்தணி அமையும்.

## 30. பரீட்சைகள்

பாடசாலை அமைப்புக்குள்ளே கற்றல் — கற்பித்தல் செய்ம்முறையில் தேர்வுகளின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கும், இச் செய்ம்முறையில் பிரிக்கமுடியாது ஒன்றிணைந்த பகுதி என்ற வகையில் தேர்வுகளின் பங்களிப்பினை மாட்சிமைப்படுத்தற்கும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனைக் கருத்திற் கொண்டு பரீட்சைத் திணைக்களம் பாடசாலைப் பரீட்சைகள், அதனுடன் தொடர்புடைய விடயங்கள் ஆகியவற்றுக்கு மட்டும் கருமமாற்றுமாறு வேண்டப்படும். பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களுக்காகப் பரீட்சைத் திணைக்களம் மேற்கொள்கின்ற ஏனைய பரீட்சை வேலைகளிலிருந்து அது விடுவிக்கப்படும்.

## 31. கற்பித்தற் சேவை

ஆசிரியர்கள் மாவட்ட அடிப்படையிலே தெரிவு செய்யப்படுவர். பல்கலைக்கழகப் பட்டதாரிகளிலிருந்தும் க.பொ.த. (உயர் தர) தகைமை பெற்றோரிடமிருந்தும் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்க்கப்படும். அவர்கள் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் சாதாரணமாகப் பொருத்தமான பயிற்சிநெறியில் ஒரு சேவைமுன் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவர்.

## 32. ஆசிரியர்களின் சம்பளங்கள்

உயர் தொழில், கல்விசார் தகைமைகளைப் பெற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே சம்பள அளவுத்திட்டம் இருக்கும். பல்கலைக்கழகப் பட்டதாரி ஆசிரியர்கள் இச் சம்பள அளவுத்திட்டத்தில் ஓர் உயர் புள்ளியிலிருந்து சம்பளத்தைப் பெறுவர்.

## 33. சம்பளங்களையும் ஆசிரியர்களுக்குரிய ஏனைய ஊக்குவிப்புகளையும் மீளாய்வதற்குரிய குழு.

ஆசிரியர்களின். சம்பளமும் ஏனைய சேவை நிபந்தனைகளும் திறன்மிக்க குழு ஒன்றினால் மீளாய்வு செய்யவேண்டிய தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இதன் பொருட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படும். ஆசிரியத் தொழிலிலிருந்து பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இக் குழு அமையும். ஆசிரியர்களது தற்போதைய சம்பள அளவுத் திட்டங்களையும் ஏனைய நிபந்தனைகளையும் பரிசீலனை செய்து, உயர் திறன் மிக்க இளைஞர்களையும் யுவதிகளையும் ஆசிரியத் தொழிலிற் சேர்த்து அவர்களை அப் பணிக்கே அர்ப்பணித்து, அவர்களின் ஆர்வத்தைத் தொடர்ந்தும் நிலவச் செய்யக் கூடிய முன் மொழிவுகளை முன்வைக்குமாறு இக் குழு

கேட்டுக் கொள்ளப்படும். ஆசிரியர்களின் வரவுக்குறைவு, கஷ்டமான பாடசாலைகளிற் பணியாற்ற ஊக்குவிப்புகள், தட்டுப்பாடுள்ள வகுதிகளுக்கு விசேட மிகை ஊதியம் வழங்குதல், இணை — பாடவிதான வேலைகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் மேலதிக கொடுப்பனவு வழங்குதல் ஆகிய விடயங்கள் இக் குழுவின் விசேட கவனத்துக்கானவை ஆகும்.

34. இ. க. சே.

ஒத்த ஏனைய சேவைகளுடன் ஒப்பிடக்கூடிய வகையில், இலங்கைக் கல்விச் சேவை மூன்று இணைப்புகளாக மீளமைக்கப்படும்.

35. தனியார் பாடசாலை

பதிவு செய்யப்பட்ட தனியார் பாடசாலைகள்,

(அ) தேசிய முறைமையுடன் இணைதல், அல்லது

(ஆ) கட்டணம் அறவிடாத உதவிபெறும் பாடசாலைகளாக வருதல்

ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். இத்தகைய விண்ணப்பங்கள் தனித் தனியாக ஆராயப்படும். எல்லாத் தனியார் பாடசாலைகளும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்கு அறிக்கையை வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்படும்.

# கல்விச் சீர்திருத்தக் குழு

உறுப்பினர்கள் :

திரு. போகொட பிரேமரத்தின ........................தலைவர்
வண. தெவமொட்டாவ அமரவன்ஸ மகா தேரோ
வண. பிதா. பீட் பர்ணாந்து
திரு. கெனத் எம். டி லனரோல்
பேராசிரியர் எல். ஜி. ஹேவகே
திரு. ஈ. எல். விஜேமான
திரு. எல். ஏலியன் பர்ணாந்து
திரு. எச். பி. ஜயவர்த்தன
திரு. ஷாஃபி மரிக்கார்
கலாநிதி. கே. டி. பி. விக்கிரமசிங்க
அல்ஹாஜ். எம். ஏ. எம். அப்துல் ஹஸன்
கலாநிதி டபிள்யூ. விமலானந்த தென்னகோன்
திரு. எஸ். யூ. சோமசேகரம்
திரு. கே. லஷ்மண ஐயர்
கலாநிதி எம். ஏ. எம் ஷுக்ரி
திரு. கே. சச்சிதானந்தா
திருமதி. லக்ஷ்மி டி. எஸ். விஜயரத்தின ................செயலாளர்

உசாக்கை நியதிகள் :

(i) அரச பூட்கை நியதிகளுக்கு ஏற்பக் கல்வியின் நோக்கங்கள்.

(ii) (அ) ஆரம்பநிலை,
(ஆ) கனிட்ட இடைநிலை,
(இ) சிரேட்ட இடைநிலை
ஆகியவற்றிற் கல்வி அமைப்பு.

(iii) (அ) ஆரம்ப நிலை,
(ஆ) கனிட்ட இடை நிலை
(இ) சிரேட்ட இடை நிலை
ஆகியவற்றிற்குப் பாடவிதானம், முறையியல் பாட நூல்கள் ஆகியன.

(iv) பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான உறவும் மேலதிக–பாடவிதானச் செயற்பாடுகளும்.

(v) கல்விச் செயற்றிட்ட அமுலாக்கம்.

(vi) (அ) பாடசாலைத் தலைவர்,
(ஆ) ஆசிரியர்.

ஆகியோரின் பங்கு, அந்தஸ்து, ஆட்சேர்ப்பு ஆகியன

(vii) பாடசாலைக் கணிப்பீட்டு முறைமை:—
(அ) அமுலாக்கற் செயற்றிட்ட முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்குரிய செய்ம்முறையும் பொறிமுறையும்.
(ஆ) பாடசாலை அதிகாரிகளினல் நடாத்தப்பட்ட சோதனைகளின் முறையும் உள்ளடக்கமும்,
(இ) சிரேட்ட இடைநிலை வரையிலானதும் அதனை உள்ளடக்கியதுமான பகிரங்கப் பரீட்சைகள் (தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ், தேசிய உயர் கல்விச் சான்றிதழ் என்பவற்றிற்குக் குறிப்பான அணுகுதலுடன்).

(viii) பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சமயக் கல்வி

(ix) பாடசாலை — முன்னிலைக் கல்வி

(x) பாடசாலை செல்லும் வயதினையுடைய உளப் பின்னடைவும் அங்கக் குறைபாடும் உடைய பிள்ளைகளுக்கான விசேட கல்வி

(xi) பிரிவேனைக் கல்வி

(xii) தொழில் முறைப் பயிற்சியும் தொழினுணுக்கக் கல்வியும்

(xiii) முறைசாராக் கல்வி

(xiv) ஆசிரியர் கல்வி

(xv) பாடசாலை ஒழுக்காறு

(xvi) பாடசாலை நேரம்

(xvii) பாடசாலைச் சீருடைகள்

(xviii) மதிய போசனமும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான ஏனைய நலனோம்பற் சேவைகளும்

(xix) வசதிக் கட்டணங்கள்

(xx) மேலுள்ளவற்றோடு சார்ந்த வேறு விடயங்கள்.

Cheddikulam

# தொழினுணுக்கக் கல்விக்கான குழு 1979

உறுப்பினர்கள்

1. கலாநிதி எஸ். ஞானலிங்கம் B.Sc. (Ceylon), M.A., Ph.D. (Cantab). Sen.Mem. I.E.E.E., C.Eng., F.I.E.E. தவிசாளர்
   இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரயோக பௌதிகவியல், இலத்திரனியல் பிரிவுத்தலைவர்.
2. திரு. ஜே. ரி. டி. தும்புகொல, B.Sc. (Agri) (Hons) (Ceylon).
   மேலதிகச் செயலாளர், கல்வி அமைச்சு.
3. கலாநிதி ஜே. ஏ. குணவர்த்தன, B.Sc.Eng. (Ceylon), M.S.E.E. (Purdue), Ph.D. (Cantab), C.Eng., M.I.E.E.
   பேராசிரியர், எந்திரவியல்,
   பேராதனைப் பல்கலைக்கழகம்.
4. கலாநிதி யூ. எஸ். குறுப்பு B.Sc. (Ceylon), Ph.D. (Cantab), E.Eng., M.I.Mech.E., F.I.E. (Sri Lanka).
   பொறி முறை எந்திரவியற் பேராசிரியரும்
   மொறட்டுவைப் பல்கலைக்கழகத் துணை வேந்தரும்.
5. கலாநிதி சி. படுவதவிதான, B.Sc Eng. (Ceylon), Ph.D. (London). C.Eng., M.I.Mech., F.I.E. (Sri Lanka).
   பொறி முறை எந்திரவியல் இணைப் பேராசிரியரும்
   மொறட்டுவைப் பல்கலைக்கழக எந்திரவியற் பீடத் தலைவரும்.
6. கலாநிதி எஸ். எம். ஏ. பெரேரா. B.Sc.Eng. (Ceylon), Ph.D. (London). D.I.C., C.Eng., M.I.C.E., F.I.E. (Sri Lanka).
   Ceylon Development Engineering Company Ltd.
   முகாமிப்புப் பணிப்பாளர்,
7. திரு. என். சமரசுந்தர, B.A. (Ceylon), S.L.A.S.
   உதவிச் செயலாளர், உயர் கல்வி அமைச்சு.
8. திரு. பி. ஏ. டி. ஜயரத்தின. G.C.S. (Class I)
   உயர் கல்வி அமைச்சு, ........................ செயலாளர்

உசாத்தை நியதிகள் :

i. பல தொழினுணுக்க, கனிட்ட தொழினுணுக்க நிறுவனங்களிலே தொழினுணுக்கம், விவசாயம், வர்த்தகம், தொழில்முறை ஆகிய வற்றிற்குக் கல்வியும் பயிற்சியும் வழங்குதல் தொடர்பாகத் தற்போதுள்ள அமைப்பு, வசதிகள் ஆகியவற்றை ஆய்தலும் முழுமையான மீளாய்வு செய்தலும்.

ii. நாட்டின் தற்போதைய, எதிர்கால அபிவிருத்தித் தேவைகளுக்கு, மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மனித வலுத் தேவைகளுக்கேற்ப மேற்காணும் நிறுவகங்களிலே தற்போது நடாத்தப்படுகின்ற பயிற்சிநெறிகள் ஏற்புடையனவா என்பதனை ஆராய்தல்.

iii. தற்போதைய அமைப்பு நிலையிலே தேவையான சீர்திருத்தங்களையும் மாற்றங்களையும் பற்றி உயர் கல்வி அமைச்சின் நோக்கெல்லைக்குள் வருகின்ற தொழினுணுக்கம், விவசாயம், வர்த்தகம், தொழில்முறை ஆகியவற்றுக்குக் கல்வியும் பயிற்சியும் வழங்குதல் தொடர்பாகத் தேவைப்படக்கூடிய மேலதிக ஏற்பாடுகள் பற்றியும் விதந்துரை செய்தல்.

iv. பணியணி விருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பாக அளிக்கப்பட வேண்டியவற்றை விதந்துரைத்தல்.

v. தொழினுணுக்கம், விவசாயம், வர்த்தகம், தொழில்முறை ஆகியவற்றுக்குக் கல்வியும் பயிற்சியும் வழங்குதல் தொடர்பாக நிருவாகத்தை மீளொழுங்கு செய்தற்கு மேலதிக வசதிகளை வழங்குதல் பற்றிய முன்மொழிவுகளின் நிதிசார் விளைவுகள் சார்ந்த தரவுகளை வழங்குதல்.

# தேசிய தொழில் பயிலுநர் பயிற்சிக்கான குழு

உறுப்பினர்கள்

1. திரு. எச். டி. சுகதபால .......................... தலைவர்
2. கலாநிதி கே. பூலோகசுந்தரம்
3. திரு. ஜி. ஜே. பி. கிரியெல்ல
4. திரு. டி. அமரசிங்க
5. திரு. பி. மத்துகொட ............. உறுப்பினர் / செயலாளர்

உசாக்கை நியதிகள்:

(அ) (i) 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் பயிலுநர் சட்டம், 1971 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கத் தேசிய தொழில் பயிலுநர் ஒழுங்கு விதிகள், 1973 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கத் தேசிய தொழில் பயிலுநர் ஒழுங்குவிதிகள் ஆகியன பற்றியும்;

(ii) பயிற்சிக்குத் தொழில் பயிலுநர்களை ஆட்சேர்த்தற்குரிய நடைமுறை பற்றியும்;

(iii) தொழில் பயிலுநராக ஈடுபடுதற்குரிய தகைமைகள் பற்றியும்;

(iv) தொழில் பயிலுநர்களை வகுதிகளாக்குதல் பற்றியும்; தொழில் பயிலும் பயிற்சிக்கால அளவு பற்றியும்;

(v) தொழில் பயிலுநர் ஒப்பந்தம் பற்றியும் அத்தகைய ஒப்பந்தம் முடிவுறுதல் பற்றியும்;

(vi) தொழில் பயிலுநர்களின் செய்ம்முறைப் பயிற்சியும் அது தொடர்பான அறிவுறுத்தல்கள் பற்றியும்;

(vii) பயிற்சியைப் பூர்த்தி செய்த பயிலுநர்களுக்குரிய பணிகாண் சேவைகள் பற்றியும்;

(viii) தொடர்பானதெனக் குழு கருதுகின்ற அத்தகைய ஏனைய விடயங்கள் பற்றியும்

ஆராய்ந்து விதந்துரை வழங்கல்.

(ஆ) நாட்டின் தொழினுணுக்கம் / தொழில் முறை ஆகியன தொடர்பான கல்வியையும் பயிற்சியையும் ஆய்ந்து,

i. தொழில் பயிலுநர் பயிற்சியோடு வாழ்க்கைக்குரிய வேறு வகையான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்;

ii. பயிற்றப்பட்ட ஆளணியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தற்போது நிலவுகின்ற தொழினுணுக்க / தொழில் முறைப் பயிற்சிச் செயற்றிட்டங்களைக் குறைநிரப்புதல்

ஆகியவை பற்றி விதந்துரை செய்தல்.

# அருஞ்சொற்றிரட்டு

| | |
|---|---|
| அகவயம் – | Subjective |
| அகற்சி – | Span |
| அசமநிலை – | Imbalance |
| அடையாளங் காணல் – | Identify |
| அடைவுச் சோதனை – | Achievement Test |
| அடைவுப் பேறு | Attainment |
| அலகு – | Unit |
| அளவீடு – | Measurement |
| அறிவுறுத்துநர் – | Instructors |
| ஆக்கக் கூறு – | Component |
| ஆக்கச் செயற்பாடு – | Creative Activity |
| ஆயுரை – | Advice |
| ஆரம்ப – மேல் – | Post–primary |
| ஆளணி – | Personnel |
| இணை – பாடவிதானம் – | Co–curriculum |
| இணைப்பு – | Annexe |
| இயல்சத்தி – | Potential |
| ஈவுமானம் – | Quota |
| உசாத்துணைவர் – | Consultant |
| உடனலவியல் – | Health |
| உத்தமம் – | Optimum |
| உள்ளடக்கல் – | Absorption |
| உயர்தொழில் – | Professional |
| ஒத்திசைவான – | Harmonious |
| ஒதுக்கீடு – | Allocation |
| ஒப்புரவின்மை – | Inequities |
| ஒப்புரவான – | Equitable |
| ஒழுக்காறு – | Discipline |
| ஒற்றைநிலைப் பாடசாலை – | Unitary School |
| கட்டமைப்பு – | Structure |
| கட்டம் – | Stage |
| கணிப்பு – | Credit |
| கணிப்பீடு – | Evaluation |
| காப்பீடுகள் – | Safeguards |
| குறைநிரப்பு – | Supplementary |
| உச்சி – | Apex |
| கைப்புனைவியலர் – | Artisan |
| கைப்பணியாளர் – | Craftsman |
| கொத்தணி – | Cluster |
| கொத்தணி அதிபர் – | Cluster Principal |
| சமவாயம் – | Convention |
| சம்பள அளவுத் திட்டம் – | Salary Scale |
| சாரணியம் – | Scouting |
| சான்றளிப்பு – | Certification |
| சிறுதிறத்த பயிற்சிநெறி – | Minor Course |
| சூழ்ச்சம் – | Scheme |
| செவ்வை நோக்கு நிரல் – | Check List |
| செயற்றிட்டம் – | Programme |
| செய்முறைக்குகந்ததும் பகுத்தறிவுக்கொட்டியதும் – | Practical and Rational |
| சேவை முன் பயிற்சி – | Pre–service Training |
| சேவையிடைப் பயிற்சி – | In–service Training |
| தகுதித் தடை – | Efficiency Bar |
| தரம் – | Grade |
| தனித்துள்ள – | Isolated |
| தனியார் – | Private |
| தனிப் போதிப்பு – | Private tution |
| தனியாள் வளப்பாடு – | Personal enrichment |
| தன்னுறுதி – | Self–reliance |
| திறந்த பாடசாலை – | Open School |
| தீவளாவிய – | Islandwide |
| தொழில் பயிலுநர் – | Apprentice |
| தொழின் முறை – | Vocational |
| தொழினுட்பவியல் – | Technology |
| தொழினுட்பவியலர் – | Technologist |
| தொழினுணுக்க – | Technical |
| தொழினுணுக்கர் – | Technician |
| தொழினுணுக்கக் கல்வி அதிகார சபைகள் | Technical Education Authorities |
| நடைமுறைச் சிங்களம் – | Practical Sinhala |
| நடைமுறைத் தமிழ் – | Practical Tamil |
| நலனோம்பல் – | Welfare |
| நாற்பதாந் தொடராண்டுகள் | Forties |
| நியமம் – | Standard |
| நிலஅளவை – | Survey |
| நிலைமாறுகின்ற – | Transitional |
| நுண்ணிமம் – | Minimum |
| நுழைவு – | Entry |
| நுழைவுத் தேர்வு – | Entrance Exam |
| நேர்முக – | Direct |
| பதின்மம் – | Decade |
| பணியணியினர் – | Staff |
| பதவிக் கோப்பு – | Cadre |
| பயிற்றும் ஆசிரியர் – | Training Master |
| பல்விடைத் தேர்வு – | Multiple Choice |
| பல்கலைக்கழக முன்னிலைக் கல்வி – | Pre–University Education |
| பல்குதல் – | Proliferation |
| பாடசாலை முன்னிலைக் கல்வி – | Pre–School Education |
| பாதீடு – | Budget |
| பாரம்பரியம் – | Heritage |
| நெறி – | Stream |
| புடைக் காட்சி – | Profile |
| புறவயம் – | Objectivity |
| பூட்கை – | Policy |
| பெருந்திறத்த பயிற்சிநெறி – | Major Course |
| பேரவை – | Council |
| பொதுவார் – | Public |
| போதிப்பகங்கள் – | Tutories |
| போதிப்பாளர் – | Tutor |
| போதிப்பு – | Tuition |
| மட்டுப்பட்ட – | Limited |
| மடு – | Pool |
| மதிப்பீடு – | Assessment |
| மறைமுக – | Indirect |
| மனைப் பொருளாதாரம் – | Home Economics |
| மாட்சிமம் – | Maximum |
| மிதப்படுத்தல் – | Moderation |
| முகாமிப்பு – | Management |
| முனைப்பு – | Initiative |
| முன்னெறியம் – | Project |
| மூலவளம் – | Resources |
| மூலாதாரப் பாடசாலை – | Core–School |
| மூன்றும் நிலைக் கல்வி – | Tertiary Education |
| யாக்கநிலைப் பாடசாலை – | Corporate School |
| வகுதிகள் – | Categories |
| வலையம் – | Network |
| வழங்கீடுகள் – | Supplies |
| வாழ்க்கைத் தொழிற்றிறன்கள் – | Life Skills |
| விவசாயம் – | Agriculture |
| வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் - | Guidance and Counselling |
| வினையாற்றல் – | Performance |
| வீச்சு – | Range |
| வேலை உலகு – | World of work |
| வேலைக்களன் – | Workshop |

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

21. கச்சேரி ... ஒழுங்கை
யாழ்ப்பாணம்
21. கச்சேரி ... ஒழுங்கை
யாழ்ப்பாணம்
21. ...

722
7 4

721
643
78

489
347
2